பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 15 செவ்வாய்க்கிழமை (30-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 34

# பதவிக் காலத்தை நிர்ணயிப்பது சத்தியப்பிரமாணமல்ல; தேர்தல்!

## ஜனாதிபதியின் பதவிக்காலம் 2005 உடன் முடிந்துவிடுமாம்

கொழும்பு,டிசெம்பர்30

"ஜனாதிபதியின் பதவிப்பிரமாணம் என்பது ஒருவர் அப்பதவியை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்வது சம்பந்தமானது. அது, அவரது பதவிக் காலம் தொடங்குவது பற்றியது அல்ல. ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுவதுதான் ஜனாதிபதியின் பதவிக்காலத்துடன் - அப்பதவிக்காலத்தின் ஆரம்பத்துடன் - நேரடியாகத் தொடர்புபட்டது.

"எனவே, இரண்டாவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலுக்கு நின்ற சந்திரிகா குமாரதுங்க, அத்தேர்தலில் வெற்றிபெற்றார் என்பது எப்போது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதோ, அந்த அறிவிப்புத் திகதியிலிருந்து அவரது இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பித்துவிட்டது என்றே அர்த்தம். அந்தப் பதவியை அவர் எப்போது சத்தியப்பிரமாணம் செய்து பொறுப்பேற்றார் என்பது பதவிக்காலத்தின் முடிவைத் தீர்மானிக்கும் விடயம் அல்ல."

- இவ்வாறு கொழும்பு சட்டத்துறை வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

1994 இறுதியில் முதல் தடவையாக ஜனாதிபதியாகப் பதவியேற்ற சந்திரிகா குமாரதுங்கவின் முதல் பதவிக்காலம் 2000ஆம் ஆண்டு கடைசி வரை - ஆறு வருடங்கள் ஆகும்.

ஆனால், அது முடிவடைவதற்கு ஒரு வருடத்துக்கு முன்னரே - அடுத்த ஜனாதிபதித் தேர்தலை - 1999 டிசெம்பரில் அவர் நடத்த ஏற்பாடு செய்தார். அந்தத் தேர்தலில் வெற்றியும் பெற்றார். வெற்றிபெற்ற கையோடு பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்னிலையில் பகிரங்கமாகச் சத்தியப் பிரமாணம் செய்து மீண்டும் பதவியை ஏற்றுக்கொண்டார்.

எனினும், தனது முதலாவது பதவிக் காலத்தின் எஞ்சியிருந்த ஓராண்

(16ஆம் பக்கம் பார்க்க)



வடக்கில் கைதாகிக் காணாமற்போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தினரின் ஆர்ப்பாட்டத்தில்...

## வடக்கில் காணாமற்போனோரின் பெற்றோர்கள் கொழும்பில் நீதியமைச்சுக்கு எதிரே ஆர்ப்பாட்டம்!

### அமைச்சு செயலாளரிடம் மகஜரும் கையளித்தனர்

வடக்கில் கைதாகிக் காணாமற்போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தினர் நேற்று கொழும்பில் நீதி அமைச்சுக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

யாழ். குடாநாட்டிலிருந்து நேற்று முன்தினம் பஸ்கள் மூலம் கொழும்பு வந்து சேர்ந்த இச்சங்கத்தைச் சேர்ந்த சுமார் 70 பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர். இவர்களில் பலர் பெண்களாவர்.

வடக்கில் கைதாகிக் காணாமற்போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கம் மற்றும் அன்னையர் முன்னணி ஆகியவற்றின் ஐந்து பிரதிநிதிகள் ஆர்ப்பாட்டத்தின் பின் நீதி அமைச்சின் செயலாளரிடம் மகஜரொன்றையும் கையளித்தனர்.

1996ஆம், 97ஆம் ஆண்டுகளில் தமிழ்க்குழுக்களின் ஆதரவுடன் யாழ். குடாநாட்டில் 234 இளைஞர்கள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் இவர்கள் காணாமற்

(16ஆம் பக்கம் பார்க்க)

## எய்ட்ஸ் விழிப்புணர்வு வாரம் நேற்றுடன் நிறைவடைந்தது

யாழ்ப்பாணம்,டிசெ.30

குடாநாட்டில் தமிழீழ சுகாதார சேவையினரின் ஏற்பாட்டில் கடந்த 23ஆம் திகதி முதல் அனுஷ்டிக்கப்பட்ட எய்ட்ஸ் விழிப்புணர்வு வாரம் நேற்று நிறைவடைந்தது.

தமிழீழ அரசியல்துறை, கல்விக் கழகம் உட்பட விடுதலைப் புலிகளின் சகல பிரிவுகளும் பொது அமைப்புக்களின் அனுசரணையுடன் விழிப்புணர்வு வார நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன.

வீடுவீடாகச் சென்ற தொண்டர்கள் எய்ட்ஸ் நோயின் கொடுமை தொடர்பாகவும் அதைத் தடுக்கும் வழிமுறைகள் தொடர்பாகவும் விரிவாக பொதுமக்களுக்கு விளக்கமளித்தனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பாதை திறந்திருக்கும் நேரம் நீடிப்பு செஞ்சிலுவைக் குழு இன்று முடிவு

யாழ்ப்பாணம்,டிசெ.30

ஏ-9 பாதை திறந்திருக்கும் நேரத்தை நாளை நீடிப்பது தொடர்பாகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இன்று முடிவு செய்யும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ஒருவர் நேற்றிரவு தெரிவித்தார்.

புதுவருடத்தினத்தையொட்டி நாளை புதன்கிழமை ஏ-9 பாதை ஊடான போக்குவரத்து இரவு 9 மணிவரையும் இடம்பெறும் என்று விடுதலைப் புலிகளும், படைத்தரப்பும் அறிவித்துள்ளன.

இப்பாதையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரசன்னம் நாளை மாலை 6.30 மணிவரை இடம்பெறும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

இரு தரப்பினருடன் தொடர்பு கொண்டு தமது பிரசன்னத்தை இரவு 9 மணி வரை நீடிப்பதா? இல்லையா என்பது குறித்து இன்று முடிவு செய்யப்படலாம் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

ஏ-9 பாதைப் போக்குவரத்தில் தற்போது பிற்பகல் 5.30 மணிவரையே சர்வதேசச் செஞ்சிலுவைக் குழுவினரின் பிரசன்னம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஓ-3)

## ஓமந்தை, முகமாலை ஊடாக 'ரிமோட்' எடுத்துவர அனுமதி

யாழ்ப்பாணம்,டிசெ.30

ஓமந்தை மற்றும் முகமாலை இராணுவச் சோதனைச்சாவடிகள் ஊடாக இலத்திரனியல் பொருள்களுக்கான கட்டுப்பாட்டுச் சாதனங்களை (ரிமோட் கொன்ரோல்) எடுத்துச்செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது என்று பலாலி படைத் தலைமையகம் யாழ்வர்த்தகர் சங்கத்துக்கு அறிவித்துள்ளது.

ஏ-9 பாதையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இலத்திரனியல் பொருள்களின் கட்டுப்பாட்டுச் சாதனங்களை எடுத்துச்செல்ல பாதுகாப்பு அமைச்சு தடைவிதித்திருந்தது. இதனால் தொலைக்காட்சிகள், வீடியோ சாதனங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகள் போன்ற இலத்திரனியல் பொருள்களை எடுத்துவரும் வர்த்தகர்கள் அவற்றுக்குரிய கட்டுப்பாட்டுச் சாதனங்களை எடுத்துவருவதில் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இதனால், இலத்திரனியல் பொருள்களை விற்பனை செய்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து யாழ். வர்த்தகர் சங்கம் பாதுகாப்புத் தரப்புக்குக் கடிதம் மூலம் அறிவித்திருந்தது.

இதனை [illegible] பாதுகாப்பு அமைச்சு மேற் [illegible] பொருள்களுக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆயப்பகுதியின் புதிய நடைமுறை நாளைமறுதினம் தொடக்கம் அமுல்

யாழ்ப்பாணம்,டிசெ.30

வடக்கே வாகனங்கள் மூலம் பொருள்கள் எடுத்துவருவதில் உள்ள தாமதங்களைத் தவிர்க்க வழிசெய்யும் புதிய நடைமுறை ஒன்று நாளைமறுதினம்முதல் அமுலுக்கு வருவதாக விடுதலைப் புலிகளின் ஆயப் பகுதி அறிவித்துள்ளது.

யாழ். வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் ஆயப்பகுதிப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று யாழ். நகரில் சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போது இந்த நடைமுறை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

புளியங்குளத்தில் உள்ள ஆயப் பகுதிப் பொறுப்பாளர் ராஜ்மோகன், கணக்குப் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்கோ ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

வாகனங்கள் மூலம் எடுத்துவரப்படும் பொருள்களைச் சோதனைசெய்து தீர்வை விதிக்கும் பணி நாளைமறுதினம்முதல் கணனிமயப்படுத்தப்படவுள்ளது. பொருள்களை எடுத்து வரு

(16ஆம் பக்கம் பார்க்க)

## புதிய புனர்வாழ்வுத் திட்டம் அடுத்த மாதம்முதல் நடைமுறை

### நேற்றைய உயர்மட்டச் சந்திப்பில் முடிவு

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ். குடாநாட்டுக்கான புதிய புனர்வாழ்வுத் திட்டம் அடுத்த மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் பிரதமரின் வழிகாட்டலுடனும் விடுதலைப் புலிகளின் பங்களிப்புடனும் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

யாழ். செயலகத்தில் நேற்று இடம்பெற்ற உயர் மட்ட சந்திப்பில் இதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டன.

கடந்த காலச் சமாதானப் பேச்சுக்களையடுத்து குடாநாட்டுக்கான அவசரப் புனர்வாழ்வுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இதனை அரசு - விடுதலைப் புலிகள், அகதி

(16ஆம் பக்கம் பார்க்க)

**எய்ட்ஸினால் பாதிக்கப்பட்டவர்களை அருவருப்பாகப் பாராமலும் சமூகத்திலிருந்து ஒதுக்காமலும் அவர்களை இகழ்வாகப் பேசாமலும் இருக்கவேண்டும்.**

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### பதவி உயர்வில் பாரபட்சம்:

# கிராம சேவையாளர் முறைப்பாடு பற்றி யாழ். செயலகத்தில் நேற்று விசாரணை

குடாநாட்டில் கிராம சேவையாளர்களுக்கு சமீபத்தில் பதவி உயர்வு வழங்கப்பட்டது. இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டதில் பாரபட்சம் காட்டப்பட்டதாக 54 கிராமசேவையாளர்கள் உள்நாட்டு மாகாண சபைகள் அமைச்சிடம் முறையிட்டனர். இந்த முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை யாழ். செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

உள்நாட்டு, மாகாண சபைகள் அமைச்சர் அலிக் அலுவிகாரவினால் நியமிக்கப்பட்ட உயர்மட்ட குழுவே யாழ். செயலகத்தில் விசாரணைகளை நடத்தியது.

அமைச்சின் மேலதிகச் செயலாளர் எஸ்.கே.லியனகே, சிரேஷ்ட உதவிச் செயலாளர்களான ஜே.எம்.கருணதாஸ, எஸ்.பி.எஸ்.சேனாதீர ஆகியோர் கொண்ட குழு நேற்று இதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தது. குடாநாட்டில் இரண்டாம் தரத்திலிருந்து முதலாம் தரத்துக்குப் பதவி உயர்வு வழங்கியதில் பாரபட்சம் காட்டப்பட்டதாக 54 கிராம சேவையாளர்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை உயர்மட்டக் குழு நேற்று நடத்தி முடித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து கிடைத்த 10 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை இக்குழு கிளிநொச்சியில் இன்று நடத்தவுள்ளது. (ஒ-3-5)

# மிதிபலகைப் பயணிகள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை!

### பொலீஸார் எச்சரிக்கை

தென்மராட்சி,டிசெ.30

பஸ்கள் மற்றும் மினிபஸ்கள் ஆகியவற்றில் மிதிபலகைப் பயணம் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சாவகச்சேரிப் பொலீஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எரிக் றோகித இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாகனங்களில் குறிப்பாகப் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்கள் மற்றும் மினிபஸ்கள் போன்றவற்றில் பலரும் மிதிபலகைகளில் நின்றுகொண்டு பயணிக்கிறார்கள். இது மோசமான விபத்துக்களை ஏற்படுத்தக்கூடும். ஆகவே, பயணிகள் மட்டுமன்றி பஸ்கள் மற்றும் மினிபஸ்களின் நடத்துநர்களும் மிதிபலகைப் பயணத்தைத் தவிர்க்கவேண்டும்.

ஏ-9 வீதி ஊடாகச் செல்லும் பயணிகள் வாகனங்கள் பெரும்பாலானவற்றில் மிதிபலகையில் பயணிப்பவர்களைக் காணக்கூடியதாக உள்ளது. அத்தகைய வாகனங்களை தடுத்து நிறுத்தி மிதிபலகையில் பயணிப்பவர்களை எச்சரித்து அனுப்புகின்றோம். ஆனால், மிதிபலகைப் பயணிகள் குறையவில்லை.

ஆகவே, மிதிபலகையில் பயணிப்பவர்கள் மீதும் வாகனத்தின் மீதும் கடுமையான சட்டநடவடிக்கை மேற்கொள்ளவேண்டியுள்ளது

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இந்த நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும் என்றார் அவர். (ஒ-117)



மாதகல் சுடர் ஒளிமயம் மாதர் சங்கத்தின் ஏற்பாட்டில், கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் அண்மையில் மாதகலில் தீபஒளிப் பேரணி நடத்தப்பட்டது. பேரணியின் முடிவில் சமாதான ஒளி ஏற்றி வைக்கப்படுவதை முதலாவது படத்திலும். பேரணியில் கலந்துகொண்டோர் தீபத்தை ஏந்தியிருப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படம்: மாதகல் செய்தியாளர்)

## வெளிமாவட்ட குடும்பங்களின் விவரங்கள் சேகரிப்பு

வலி.வடக்கு,டிசெ.30

வெளிமாவட்டங்களில் இருந்து வந்து யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ளவர்களின் விவரங்களைத் திரட்டும் பணியில் படையினர் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

கிராம சேவையாளர் பணிமனைகளில் இருந்து மேற்படி விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு உட்பட பிற மாவட்டங்களில் இருந்து வந்து தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை, அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் விவரங்கள் போன்றவையே திரட்டப்படுகின்றன என்று கிராம சேவையாளர்கள் கூறுகின்றனர். (ஒ-86)

# அடுத்த ஆண்டில் ஏழு மாகாண சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 76ஆல் உயரும்

### குடிசன மதிப்பீட்டின்படி புதிய உறுப்பினர்கள் தெரிவாவர்

கொழும்பு,டிசெ.30

வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாண சபைகளுக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை அடுத்த ஆண்டில் 76ஆல் அதிகரிக்கும் என்று தேர்தல் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின்படி இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது எனவும் அப்பேச்சாளர் கூறியிருக்கிறார்.

அடுத்த ஆண்டில் நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களுக்காக 2001ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டு விவரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்றும், குடிசன மதிப்பீட்டு விவரங்களுக்கேற்ப மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது என்றும் அப்பேச்சாளர் விளக்கமளித்திருக்கிறார்.

இந்த அதிகரிப்பின்படி, ஒவ்வொரு மாகாண சபையினதும் தற்போதைய உறுப்பினர்கள் எண்ணிக்கையும் புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் வருமாறு:-

மேல் மாகாண சபை - 104இலிருந்து 130ஆக அதிகரிக்கும், மத்திய மாகாண சபை - 58 இலிருந்து 67. தென்மாகாண சபை - 52 இலிருந்து 62. வடமேல்மாகாண சபை - 52இலிருந்து 62. வடமத்திய மாகாண சபை - 33 இலிருந்து 38. ஊவா மாகாண சபை - 34 இலிருந்து 38. சப்ரகமுவ மாகாண சபை - 44 இலிருந்து 49.

ஒவ்வொரு மாகாண சபையினதும் மாவட்ட ரீதியாக அதிகரிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை வருமாறு:-

மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டம் 43 இலிருந்து 57, கம்பஹா மாவட்டம் - 36 இலிருந்து 53, களுத்துறை மாவட்டம் - 23 இலிருந்து 29.

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டம் - 28 இலிருந்து 34. மாத்தளை மாவட்டம் - 11 இலிருந்து 13. நுவரெலியா மாவட்டம் - 17 இலிருந்து 20.

தென்மாகாணத்தில் காலி மாவட்டம் - 22 இலிருந்து 27. மாத்தறை மாவட்டம் 17 இலிருந்து 20. அம்பாந்தோட்டை மாவட்டம் 14 இலிருந்து 16.

வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டம் - 35 இலிருந்து 41. புத்தளம் மாவட்டம் - 15 இலிருந்து 21.

வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம் மாவட்டம் - 21 இலிருந்து 26. பொலன்னறுவை மாவட்டம் - 10 இலிருந்து 12.

ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டம் - 19 இலிருந்து 22. மொனறாகலை மாவட்டம் - 13 இலிருந்து 16. சப்பிரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டம் - 23 இலிருந்து 28. கேகாலை மாவட்டம் - 19 இலிருந்து 21.

- இவ்வாறு உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

# போதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு தலா ரூ.2,000 அபராதம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு தலா ஆயிரம் ரூபா தண்டப்பணமும் தலா ஆயிரம் ரூபா தர்மப்பணமும் விதிக்கப்பட்டது.

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய இருவரும் வான் சாரதி ஒருவரும் யாழ். நகரப்பகுதியில் வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இம்மூவரும் நேற்று யாழ் நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அப்போதே இம்மூவருக்கும் தண்டப்பணமும் தர்மப்பணமும் விதிக்கப்பட்டது. அத்துடன் மினிவான் சாரதியின் சாரதி அனுமதிப் பத்திரத்தை ஒருவருடத்துக்கு பறிமுதல் செய்யுமாறும் நீதிவான் விக்னராஜா உத்தரவிட்டார். (ம-4-7)

# பாதாள உலக உறுப்பினர்களுக்கு ஆயுதங்கள் வழங்கும் வீடு முற்றுகை

### கைத்துப்பாக்கிகள், வாள்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு,டிசெ.30

பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினர்களுக்கு ஆயுதங்களை வழங்கும் ஒரு வீடு நீர்கொழும்புப் பகுதியில் பொலீஸாரினால் முற்றுகையிடப்பட்டு, ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

நீர்கொழும்பு பொலீஸாருக்கு கிடைத்த ஒரு தகவலையடுத்து அந்த வீடு முற்றுகையிடப்பட்டது. சீனாவிலும், இந்தியாவிலும் தயாரிக்கப்பட்ட 9 வாள்கள், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தயாரிக்கப்பட்ட இரு கைத்துப்பாக்கிகள், கப்பம் காடையினர் பயன்படுத்தும் பிச்சுவா கத்தி உட்பட பல ஆயுதங்கள் அங்கிருந்து கைப்பற்றப்பட்டன.

பொலீஸார் வீட்டை முற்றுகையிட்டபோது, ஆயுதங்களை மறைத்து வைத்திருந்தார் எனக்கூறப்படும் முக்கிய சந்தேகநபர் அங்கிருக்கவில்லை. தலைமறைவாகிவிட்டார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

ஆயுதங்களுடன் வீட்டிலிருந்த இருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர். (ஒ)

# மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்கும் எந்த ஒரு முயற்சிக்கும் ஆதரவில்லை

### அரசாங்க அறிக்கையில் திட்டவட்டமாக அறிவிப்பு

கொழும்பு,டிசெ.30

மாகாண சபைத் தேர்தல்களை எந்த ஒரு காரணத்துக்காகவும் ஒத்தி வைக்கும் எந்த ஒரு முயற்சியையும் அரசாங்கம் ஆதரிக்காது. அரசாங்கப் பேச்சாளரின் அலுவலகம் நேற்று வெளியிட்ட அரசாங்கத்தின் அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விரைவில் நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை ஒத்தி வைப்பது குறித்து அரசும் பொ.ஐ. முன்னணியும் பேச்சு நடத்தி வருகின்றன என்று நேற்று வெளியான பத்திரிகைச் செய்திகளை அடுத்தே அரசாங்கத்தின் அறிக்கை வெளியிடப்பட்டது.

சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட காலத்தில் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறவேண்டுமென்று அரசு தீர்மானித்திருக்கிறது எனவும் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட இணக்கம் காணப்பட்டிருப்பதாக வெளியான செய்தி வருமாறு:-

தேர்தல் முறையில் சீர்திருத்தங்கள் செய்யப்படும் வரை மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைக்க அரசும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் தயாராகிவருகின்றன என்று அறியப்படுகிறது.

ஏழு மாகாண சபைகளின் பதவிக் காலம் காலத்துக்குக் காலம் முடிவடையவிருக்கின்றபோதிலும், தேர்தல் முறை சீர்திருத்தத்துக்குப் பின்னர் அந்த மாகாண சபைகள் அனைத்தையும் ஒன்றாகக் கலைத்துவிட்டு ஒரு நாளில் தேர்தல்களை நடத்துவது குறித்து இரு தரப்பினரும் பேச்சு நடத்திவருகின்றனர்.

தேர்தல்முறை சீர்திருத்[illegible]த்து ஆராய்ந்துவரும் நாடா[illegible]றத் தெரிவுக்குழு, இது தொட[illegible] ஏற்கனவே இந்த இரு தரப்பினருடனும் பேசி இணக்கம் கண்டுள்ளது எனவும் தெரியவருகிறது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பணிகள் பூர்த்தியாக மேலும் சில மாதங்கள் செல்லலாம் என்பதால் தேர்தல் சீர்திருத்த முறைகளின் கீழ் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறுவதாக இருந்தால் அத்தேர்தல்கள ஒத்திவைக்கப்படுவது அவசியமாகும். தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகள் தேவைப்படுகின்றன.

அரசும் பிரதான எதிர்க்கட்சியும் தேர்தல் முறை மாற்றப்படும் வரை மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படவேண்டும் என்பது குறித்து பேச்சு நடத்தி வருவதால் நாடாளுமன்றத்தில் தேவையான வாக்குகளைப் பெறமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு வாய்மொழிமூல ஆங்கிலப் பயிற்சி

ஏறாவூர்,டிசெ.30

நாடளாவிய ரீதியில் சகல அரச பாடசாலைகளிலும் கற்பிக்கும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு வாய்மொழி மூல ஆங்கிலக் கல்விப் பயிற்சி வழங்குவதற்கு, கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு அடிப்படை ஆங்கிலக் கல்வியைத் திருப்திப் போதிப்பதற்கு வசதியாக ஆசிரியர்களுக்கு இந்தப் பயிற்சியை வழங்கத் தீர்மானித்துள்ளதாக கல்வி, மனிதவள அபிவிருத்தி அமைச்சின் ஆங்கிலக் கல்விப் பணிப்பாளர் பிலோமினா பெரேரா தெரிவித்துள்ளார்.

தரம் ஒன்று, இரண்டு மற்றும் ஐந்து ஆகிய வகுப்புகளில் கல்வி கற்பிக்கும் 2 ஆயிரம் ஆசிரியர்களுக்கு முதற்கட்டமாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகல மாகாணங்களிலும் இருந்து தலா 250 ஆசிரியர்கள் ஆங்கிலக் கல்விப் பயிற்சிக்காகத் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

வலய மட்டத்தில் ஒவ்வொரு கல்வி வலயப் பிரிவுகளில் இருந்தும் தலா 40 ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு வாய் மொழியை அடிப்படையாகக் கொண்ட ஆங்கிலப் பயிற்சி வழங்கப்படவுள்ளது என்றும் ஆங்கிலக் கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பிரகாரம் பொருத்தமான ஆசிரியர்களைத் தெரிவு செய்து அவர்களது விவரங்களைக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு கல்விப் பணிப்பாளர் பிலோமினா பெரேரா சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் சுற்றறிக்கை மூலம் கேட்டுக்கொண்டார்.

# அழுகிய நிலையில் சடலங்கள்! ஈரானில் தொற்றுநோய் அபாயம்!!

தெஹ்ரான்,டிசெ.30

ஈரானிய பூகம்பப் பேரழிவில் மாண்டவர்களின் சடலங்கள் வீதிகளில் குவிக்கப்பட்டுள்ளன. அவற்றை அடக்கம் செய்வதற்குக்கூட போதிய ஆள்கள் அற்ற நிலையில் அரசு திண்டாடி வருகிறது.

பேரழிவு ஏற்பட்டு நான்கு நாள்களுக்கும் மேலாகிவிட்டதால் வீதிகளில் அநாதரவாகக் கிடக்கும் சடலங்கள் அழுகி, துர்நாற்றம் வீச ஆரம்பித்துள்ளன. இதனால், தொற்றுநோய் பரவும அபாயமும் ஏற்பட்டிருக்கிறது.

இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்ட சடலங்கள், துணிகளால் சுற்றப்பட்டு பாம் நகரக் கல்லறை மைதானங்களிலும் குவிக்கப்பட்டுள்ளன. மேலும் சடலங்கள் அங்கு தொடர்ந்து குவிக்கப்பட்டு வருகின்றன. இதனால் சடலங்களால் அந்தக் கல்லறை மைதானங்கள் நிரம்பி வழிகின்றன.

புல்டோசர்களின் உதவியுடன் நீண்ட பெரிய குழிகள் தோண்டப்பட்டு அங்கு ஒரேயடியாக ஏராளமான சடலங்கள் அடக்கம் செய்யப்படுகின்றன.

இன்னமும் புதைக்கப்படாமல் அநாதரவாகப் போடப்பட்டுள்ள சடலங்கள் அழுகி துர்நாற்றம் வீச ஆரம்பித்துள்ளன. தொடர்ந்து இதேநிலை நீடித்தால் தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளது என்று சுகாதார நிறுவனங்கள் எச்சரிக்கை செய்துள்ளன.

ஆனால், ஈரானிய அரசு மீட்புப் பணிகளைக் கவனிப்பதா? நிவாரணப்பணிகளைக் கவனிப்பதா? சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதா? என்று தெரியாமல் திண்டாடிவருகிறது.

இதனைக் கருத்திற்கொண்டு அங்கு வெளிநாட்டு உதவிகள் குவிந்தவண்ணம் உள்ளன.

ரஷ்யா, இங்கிலாந்து, சுவிட்ஸர்லாந்து, ஜேர்மனி, சீனா, போலந்து, ஜப்பான், துருக்கி உட்பட 21 நாடுகளைச் சேர்ந்த மீட்புப் பணியாளர்கள் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் இடிபாடுகளுக்குள்ளிருந்து இதுவரை 1,000 பேரை உயிருடன் மீட்டுள்ளனர். பூகம்பம் ஏற்பட்டு நான்கு நாள்கள் ஆகிவிட்டதால் இடிபாடுகளுக்குள்ளும் மண் கும்பல்களுக்கும் இடையில் சிக்கியவர்கள் இன்னமும் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை என்று மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

நிவாரண உதவிப்பணிகளில் ஈடுபட்டுவந்த ஈரானியக் கடற்படை ஹெலிகொப்டர் ஒன்று ஈரான் புறநகர் பகுதியில் வீழ்ந்து நொறுங்கியதில் மூவர் உயிரிழந்திருக்கிறார்கள். இதனால், நிவாரணப்பணிகளில் மேலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை -

பூகம்பப் பேரழிவால் நாடு அல்லோலகல்லோலப்படும் இந்தத் தருணத்தைப் பயன்படுத்தி, பலர் அழிவுக்குள்ளான மற்றும் கடைகள், வீடுகள் என்பனவற்றிலிருந்து பொருள்களை அள்ளிச் சுருட்டிக் கொண்டு ஓடுகிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ம)



உதவி பொருள்களுக்காக அலைபாயும் ஈரானிய பாம் நகர மக்கள்.

## முஷாரப் கொலை முயற்சி இருபதுபேர் கைது!

பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பை கொல்ல முயன்றது தொடர்பாக 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியை ஒழிக்க அமெரிக்கா தாக்குதல் நடத்திய போது புஷ் அரசுக்கு உதவி செய்தார் முஷாரப். இதனால், பாகிஸ்தானின் பழமைவாத முஸ்லிம்களின் கடும் அதிருப்திக்கு அவர் ஆளாகியுள்ளார். ஆப்கானில் ஆட்சியை இழந்த தலிபான்களும், ஒஸாமாவின் தலைமையிலான அல்-கெய்டா தீவிரவாதிகளும் பெருமளவில் பாகிஸ்தானில் ஊடுருவியுள்ளனர். இவர்களே முஷாரப்பை தீர்த்துக் கட்ட சதித்திட்டம் தீட்டியுள்ளனர். இந்நிலையில், முஷாரப் கடந்த 14ஆம் திகதி தனது இல்லத்திலிருந்து அலுவலகத்துக்கு ராவல்பிண்டி வழியாக இஸ்லாமாபாத் வந்தபோது, பாலத்தில் வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டு வெடித்தது. இந்தச் சம்பவத்தில் முஷாரப் மயிரிழையில் உயிர் தப்பினார்.

இந்தச் சம்பவம் நடந்து 10 நாள்களுக்குள் கடந்த 25ஆம் திகதி ராவல்பிண்டியில் அதே இடத்தில் மீண்டும் முஷாரப்பை கொல்லும் நோக்கில் இரண்டு வெடிகுண்டு சம்பவங்கள் நடந்தன. அவற்றிலும் அவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

இதுவரை இந்தச் சம்பவம் தொடர்பாக 20 பேரை பாகிஸ்தான் பொலீஸார் கைது செய்துள்ளனர். இவர்களில் ஒருவர் செச்சினியத் தீவிரவாதி. இவருக்கு அல் - கெய்டா அமைப்புடன் தொடர்புள்ளது. மற்றொரு நபர் தடை செய்யப்பட்ட ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்

# பாம் நகர பூகம்பத்தில் உயிர் தப்பியோர் இடிபாடுகளின் மேல் முட்டிமோதி புலம்பல்!

## ஒரு குழந்தை உட்பட 150 பேர் நேற்றுமுன்தினம் காப்பாற்றப்பட்டனர்

பாம் (ஈரான்),டிசெ.30

ஈரானின் புராதன பாம் நகரின் பூகம்ப பேரழிவிலிருந்து உயிர்தப்பியோர், தமது அன்புக்குரியவர்கள் இன்னமும் உயிரோடு இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் கட்டட சிதைவுகளின் மேல் முட்டி மோதியவாறு தேடி புலம்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

தமது பிள்ளைகளை அழைத்தபடியே புலம்பும் தாய்மாரும் தந்தைமாரும் இரத்தம் சிந்தும் கரங்களால் சிதைவுகளைக்கிண்டிக் கொண்டிருக்கிறார்கள். தனது 14வயது மகனின் பிரேதத்தை இரு கரங்களாலும் ஏந்தியபடியே, "மகனே தாஹிர் எழுந்திரு, எழுந்திரு" என்று ஒரு தந்தை கதறியழுதார்.

இந்தப் புலம்பல்களுக்கு மத்தியில் அம்புலன்ஸ்களின் அலறல்களும் பாம் நகரின் அவலத்தை எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றன. காயமடைந்தோரை, இறந்தோரை அவை சுமந்து செல்கின்றன. 30 ஆயிரம் பேர் காயமடைந்திருக்கின்றனர் என்று ஈரான் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இடிபாடுகளுக்கிடையே இருந்து இதுவரை சுமார் 150 பேர் காப்பாற்றப்பட்டனர். நாய்க்குட்டி ஒன்றும் ஒரு குழந்தையும் காப்பாற்றப்பட்டுள்ளன. 24 மணி நேரத்துக்கும் கூடுதலான நேரம் இடிபாடுகளில் புதையுண்டிருந்த அந்த குழந்தை காப்பாற்றப்பட்டு வைத்தியசாலை ஒன்றில் நல்லநிலையில் இருப்பதாக புரட்சிகர காவல்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



ரஷ்யப் பணியாளர்களால் மீட்கப்பட்ட நாய்க்குட்டி ஒன்று.

# இந்திய மத்திய அரசிலிருந்து ம.தி.மு.கவும் வெளியேற முடிவு

## இரு அமைச்சர்களும் ராஜினாமா செய்வர்

சென்னை,டிசெ.30

மத்தியிலுள்ள தேசிய ஜனநாயக முன்னணி அரசிலிருந்து வெளியேறுவதென ம.தி.மு.க. நேற்று தீர்மானித்தது. இதனையடுத்து, மத்திய அரசிலுள்ள அதன் இரு அமைச்சர்களும் ராஜினாமாச் செய்வர்.

நேற்று சென்னையில் நடைபெற்ற ம.தி.மு.க. மாவட்ட செயலாளர்களின் கூட்டத்திலேயே மத்திய அரசிலிருந்து வெளியேறுவது என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. மதி.மு.க. அமைச்சர்களான என்.இராமச்சந்திரன், எம்.கண்ணப்பன் ஆகிய இருவரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கடந்த 10 தினங்களுக்கு முன்னர், மத்திய அரசிலிருந்து தி.மு.க. வெளியேறியது தெரிந்ததே.

தி.மு.கவின் வெளியேற்றத்தையடுத்து இரு அமைச்சர்களும் கட்சிகளின் ஏனைய தலைவர்களும் கடந்த வாரம் வேலூர் சிறையிலுள்ள ம.தி.மு.க. தலைவர் வைகோவைச் சந்தித்து ஆலோசனை நடத்தினர். தி.மு.கவைப் பின்பற்றி ம.தி.மு.கவும் அரசிலிருந்து வெளியேறவேண்டும் என்ற நிர்ப்பந்தங்கள் ம.தி.மு.க. மீது பிரயோகிக்கப்பட்டன.

# கூட்டணி குறித்து தி.மு.கவுடன் பேசுவோம் என்று சோனியா அறிவிப்பு

மும்பை,டிசெ.30

மக்களவைத் தேர்தலில் கூட்டணி வைத்துக் கொள்வது குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்துடன் பேசுவோம் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கூறியுள்ளார்.

மதவாதக் கட்சியான பாரதீய ஜனதாவை எதிர்த்துப் போராட மதச்சார்பற்ற கூட்டணியை உருவாக்குவது குறித்து தி.மு.க., பகுஜன் சமாஜம், சமாஜ்வாதி போன்ற ஒரே கருத்துடைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்றும் மும்பையில் ஞாயிற்றுக்கிழமை அவர் இவ்வாறு கூறினார்.

பிரதமர் பதவிக்கு யார் என்பதைப் பொறுத்தவரை, [illegible] மக்கள்தான தீர்மானிப்பர். நாடாளு[illegible]க் காங்கிரஸ் கட்சித் தலைவரை கட்சி எம்பிக்கள் தான் தேர்ந்தெடுப்பர். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரைத்தான் புதிய பிரமராக்க வேண்டும் என்ற முடிவை கூட்டணிக் கட்சிகள் மீது திணிக்க மாட்டோம் எனவும் அவர் கூறினார்.

(ம)

## காஸாவில் மீண்டும் வன்முறைகள்:

# இஸ்ரேலியச் சிப்பாயின் தாக்குதலில் மூன்று பலஸ்தீனர்கள் உயிரிழப்பு!

ஜெருசலேம்,டிசெ.30

இஸ்ரேலியப் படைவீரரின் தாக்குதலில் நேற்றுமுன்தினம் மாலை மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். கடந்த ஒரு வாரகாலமாக இஸ்ரேலியர்களும், பலஸ்தீனர்களும் மாறி மாறி வன்முறையில் ஈடுபட்டுவருகின்றனர். இதன் ஒரு கட்டமாகவே நேற்றுமுன்தினம் இஸ்ரேலியப்படைவீரர் ஒருவர் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார். இதனையடுத்து, இருபிரிவினருக்கும் இடையேயான வன்முறை மேலும் அதிகரித்திருக்கிறது.

காஸா பள்ளத்தாக்கில் உள்ள ஜெவில் குடியிருப்புப் பகுதியில் நடமாடிய மூவரே இஸ்ரேலியப்படைவீரரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியாகினர்.

டாங்கிகள் சகிதம் அப்பகுதியில் தேடுல் நடத்திய படையினர் மூன்று பலஸ்தீனத் தீவிரவாதிகளை சுட்டுக் கொன்றனர் என்று இஸ்ரேலிய வானொலி அறிவித்துள்ளது.

இவர்கள் மூவரும் தம்மை நோக்கி துப்பாக்கிப்-பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் அதனையடுத்தே தமது படைவீரர் இவர்களை சுட்டுக்கொன்றார் என்றும் இஸ்ரேலியப் படை கூறுகிறது.

கொல்லப்பட்ட மூவரும் பலஸ்தீனப் போராளிகள் என்று பலஸ்தீனப் பொலீஸார் கூறியுள்ளனர்.

இதற்கிடையே -

மேற்குக்கரை நகரான நப்லஸில் இஸ்ரேலியப் படையினர் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் சிறுவன் உயிரிழந்தான். மேலும் 17 பேர் காயமடைந்தனர்.

வியாழனன்று டெல்அவிவ் நகரில் தற்கொலைக் குண்டுதாரி நடத்திய தாக்குதலில் 3 இஸ்ரேலியப்படை கொல்லப்பட்டதை அடுத்து நப்லஸில் நேற்றுமுன்தினம் தேடுதல் நடத்தப்பட்டது.

நப்லஸ் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் வலுவான [illegible] இஸ்ரேலியப் படையினர் அ[illegible] தேடுதல் நடத்துவது [illegible].

(ம)

# பிரிட்டிஷ் விமானத்தைத் தகர்க்கும் சதி சவூதியில் கடைசி நேரத்தில் முறியடிப்பு

லண்டன்,டிசெ.30

பிரிட்டிஷ் விமானத்தின் மீது வெடிகுண்டுகள் நிரப்பிய விமானத்தை மோதித் தகர்க்க முயற்சி செய்த 2 தற்கொலைப்படை விமானிகள் கைது செய்யப்பட்டனர்.

பின்லேடனின் அல்-கெய்டா இயக்கத்தைச் சேர்ந்த தற்கொலைப்படை தீவிரவாதிகள், அமெரிக்காவில் பயணிகள் விமானங்களைக் கடத்திச் சென்று கட்டடங்கள் மீது மோதித் தாக்குதல் நடத்திய சம்பவம் உலகத்தையே உலுக்கியது. இதேபோன்று ஒரு தாக்குதலுக்கு பின்லேடன் கும்பல் மீண்டும் திட்டமிட்டிருப்பதாக உளவுத்துறை எச்சரிக்கை செய்ததையடுத்து அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், சவூதி அரேபியாவில் பிரிட்டிஷ் பயணிகள் விமானத்தை தகர்க்க நடந்த சதி கடைசி நேரத்தில் முறியடிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் நாட்டின் பிரிட்டிஷ் ஏயர்வேஸ் நிறுவனம் சவூதி அரேபியாவுக்கும் லண்டனுக்கும் இடையே பல விமானங்களை சேவையில் ஈடுபடுத்திவருகிறது. இந்த நிறுவனத்தின ஒரு விமானத்தின் மீது ஒரு வெடிகுண்டு நிரப்பிய சிறியரக விமானங்களை மோதி பேரழிவை ஏற்படுத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர். இதற்காக தற்கொலைப் படையைச் சேர்ந்த இரண்டு விமானிகளிடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அவர்களும் தாக்குதல் திட்டத்தை தயாரித்தனர்.

சவூதி தலைநகர் ரியாத்தின் கிங் கலித் சர்வதேச விமான நிலையத்தில் பிரிட்டிஷ் விமானம் தரையிறங்கி ஓடுதளத்தில் வரும்போது அதன் மீது, வெடிகுண்டு நிரப்பிய விமானத்தை மோதி தூள் தூளாக தகர்ப்பது இந்தச் சதித்திட்டம் ஆகும்.

சம்பவத்தன்று பிரிட்டிஷ் ஏயார் வேஸ் நிறுவனத்தின் பிரமாண்டமான '777-போயிங்' விமானம் லண்டனில் இருந்து புறப்பட்டு ரியாத் விமான நிலையத்தில் தரை இறங்கியது. அதில் 380 பயணிகளும், பணியாளர்களும் இருந்தனர்.

அப்போது தற்கொலைப்படை விமானிகள் இருவரும் இரண்டு சிறியரக விமானங்களில் வெடிகுண்டு

உலக அரங்கில்

களை நிரப்பியவாறு புறப்படுவதற்குத தயாராக இருந்தனர்.

அதற்குள் இந்தச் சதித்திட்டம் புலனாய்வுத்துறைக்கு தெரிந்துவிட்டது. அவர்கள் மின்னல் வேகத்தில் விரைந்து சென்று இரண்டு தீவிரவாதிகளையும் மடக்கிப்பிடித்து கைது செய்தனர். இதனால், மிகப்பெரிய பயங்கரம் தடுத்து நிறுத்தப்பட்டது. இவர்கள் இருவரும் எங்கு கைது செய்யப்பட்டனர் என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

# தமிழர் போராட்டத்தை அங்கீகரித்த நவ சமசமாஜக் கட்சியின் முன்மாதிரி

## 26ஆவது வருட மாநாட்டுக்கு விநாயகமூர்த்தி செய்தி

கொழும்பு, டிசெ.30

தமிழ்த்தேசியத்தை நியாயப்படுத்தி, தமிழர் போராட்டத்தை அங்கீகரித்த நவ சமசமாஜக் கட்சியின் செயற்பாடு பாராட்டத்தக்கது.

நவ சமசமாஜக்கட்சியின் 26ஆவது வருடாந்த மாநாடு நேற்று நடைபெற்றதை முன்னிட்டு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஆசிச் செய்தியை அனுப்பி வைத்துள்ள யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றாலும், சுதந்திரம் கிடைத்தது சிங்கள தேசத்திற்கே அல்லாமல் தமிழ்த்தேசத்திற்கு அல்ல. 54வருட காலமாக தமிழ்த்தேசம் தொடர்ந்து உரிமை மறுக்கப்பட்டு அடக்கப்பட்டு வந்தது.

அத்தகைய நிலையிலும் நவ சமசமாஜக் கட்சி தமிழ்த்தேசியத்தை நியாயப்படுத்தி அதனை அங்கீகரிக்கும் அளவிற்கு தனது நேர்மையைக கடைப்பிடித்து தமிழ்த் தேசத்தின் போராட்டத்தை அங்கீகரித்தது.

இலங்கையில் தமிழ்த் தேசத்தினுடைய வியாபகத்தை ஓர் உண்மையான இடதுசாரி சிந்தனையுடைய கட்சி என்ற முறையில் நவ சமசமாஜக கட்சி அங்கீகரித்தது.

இந்தத் தமிழ்த் தேசமானது பாரம்பரியமாக தமிழ்மக்கள் வாழும் வடக்கு-கிழக்கு பூமிதான் என்பதைத் தெளிவாக அது அடையாளம் காட்டியது. அவ்வண்ணமே தமிழ்த்தேசத்திற்கு இருக்கக்கூடிய பிரிக்க முடியாத சுயநிர்ணய உரிமையையும் நவ சமசமாஜக் கட்சி ஏற்றுக்கொண்டது. இந்த உண்மையை ஏற்றுக்கொண்டு அக் கட்சி விசுவாசமாக இயங்கியது.

தமிழ்மக்களுடைய உரிமைகளை நவசமசமாஜக் கட்சி சின்னத்தனமான அரசியலுக்கு அப்பால் நின்று வலியுறுத்தியது. அதனை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பாராட்டுகிறது. இப்படியான அருமையான குணாதிசயங்கள் இன்றைய அரசியலில் அரிதானவை.

காலஞ்சென்ற மாமனிதர் தலைவர் குமார் பொன்னம்பலத்துடன் நவ சமசமாஜக்கட்சிப் பிரதிநிதிகள் இணைந்து 20 வருடங்களாக இருண்ட கால வரலாற்றில் செயற்பட்டமையை நாம் நினைவு கூர்கிறோம்.

இப்படிப்பட்ட நவசமசமாஜக் கட்சியின் சிறந்த செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அக்கட்சியின் 26ஆவது வருடாந்த மாநாட்டிற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

எதிர்காலத்திலும் தனது தற்போதைய கொள்கை வழி நின்று தனது நேர்மையான செயற்பாட்டினால் முன் உதாரணமாக அக்கட்சி திகழ வாழ்த்துகின்றோம்.

- இவ்வாறு விநாயகமூர்த்தி எம்.பி.குறிப்பிட்டிருக்கிறார்.

## வடக்கு – கிழக்கு மண்ணிலே

# நிம்மதியாக மக்கள் நடமாடுவதற்கு பிரபாகரனின் செயற்பாடுகளே காரணம்

## வெல்லாவெளியில் கிருஷ்ணபிள்ளை எம்.பி.

காத்தான்குடி,டிசெ.30

வடக்கு - கிழக்கு மண்ணிலே அனைத்து இன மக்களும் நிம்மதியாக நடமாவடுவதற்கு தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரனின் செயற்பாடுகளே காரணம், அவரது விட்டுக் கொடுக்கும் மனோநிலையினால் தான் சமாதானம் நின்று நிலைக்கிறது.

- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை குறிப்பிட்டார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வெல்லாவெளி பிரதேசத்திலுள்ள இந்து ஆலயங்களுக்குத் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி மற்றும் இந்து கலாசார அமைச்சின் நிதி ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட ஒலிபெருக்கி மற்றும் ஆலய சாதனங்களைக் கையளிக்கும் வைபவத்தில் அவர் கலந்துகொண்டு பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய கிருஷ்ணபிள்ளை எம்.பி. கூறியதாவது:-

நாடாளுமன்றத்திலுள்ள 15 தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்களையும் அரசு தேவையானபோது தனது தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்துகிறது.

அரச அதிகாரிகளுக்கு வேதனம் வழங்குவது அவர்கள் தங்களுடைய குடும்ப அங்கத்தவர்களுடன் சந்தோஷமாக வாழ்வதற்காக அல்ல. பொது மக்களின் தேவைகளை அவர்கள் நிறைவுசெய்ய வேண்டும் என்பதற்காகவே.

- இவ்வாறு அவர் கூறினார்.

வெல்லாவெளி பிரதேச செயலாளர் கே.கருணாகரன் உட்படப் பலர் விழாவில் கலந்துகொண்டனர்.




**தீவக அரிமாக் கழகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் கரம்பொன் சண்முகநாதன் மகா வித்தியாலயத்தில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாமில் கலந்துகொண்ட ஒருவருக்கு கமல் செறமிக் நிறுவன உரிமையாளர் எஸ்.கைலாயபிள்ளை கண்ணாடி அணிவிப்பதைப் படத்தில் காணலாம். (எ)**

# சிறுவர்களின் பாதுகாப்பான வாழ்வுக்கு ஏழு மாவட்டங்கள் தகுந்தனவாக இல்லை

## நலன் பேணும் மாநாட்டில் அறிவிப்பு

கொழும்பு,டிசெ.30

அநுராதபுரம், பதுளை உட்பட ஏழு மாவட்டங்கள் சிறுவர்களின் பாதுகாப்பான வாழ்வுக்குத் தகுந்த இடங்கள் அல்ல என இனங்காணப்பட்டுள்ளன.

'யுனிசெவ்' அமைப்பு ஏற்பாடு செய்த 'சிறுபராயத்தில் சிறுவர்கள் சீரிய முறையில் கவனிக்கப்பட வேண்டும்' என்ற தொனிப் பொருளிலான செயலமர்வு ஒன்று அண்மையில் கொழும்பில் நடத்தப்பட்டது. இந்தச் செயலமர்வின் இறுதியில் இவ்வாறு குறிப்பிடும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் செயலமர்வில் கல்வி, சுகாதாரம், சிறுவர் பாதுகாப்பு மற்றும் பொலீஸ் துறைகளைச் சேர்ந்த பல அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

அநுராதபுரம், பொலன்நறுவை, பதுளை, நுவரெலியா, காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள சிறுவர்கள் உடல் மற்றும் உளரீதியில் பாதிப்படையும் வகையில் ஏனையவர்களால் நடத்தப்படுகி[illegible]ர் என்றும் -

இவர்களது சீர[illegible] வாழ்வுக்கு அவர்கள் வாழும் பிர[illegible]ில் உத்தரவாதமில்லை எனவும் - செயலமர்வில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர். இது தமது ஆய்வின் முடிவு என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதனை அடுத்தே இந்த 7 மாவட்டங்கள் சிறுவர்களின் பாதுகாப்பான வாழ்வுக்கு உகந்த இடங்கள் அல்ல என அறிவிக்கப்பட்டதுடன் -

இதுவிடயத்தில், மேற்படி பிரதேச மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டதாக இந்தச் செயலமர்வில் கலந்துகொண்ட ருவான்தர்மரட்ண தெரிவித்தார். (எ-10)

# செய்திக்கொத்து

### வீதிப் பெயர் மாற்றத்துக்கு மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

நவக்கிரியில் உள்ள சில வீதிகளின் பெயர்கள் பிரதேசசபையினால திடீரென மாற்றம் செய்யப்பட்டுள்ளன என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்தகால இடப்பெயர்வின் பின்னரே குறிப்பிட்ட சில வீதிகளின் பெயர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன என்றும் -

காலாதிகாலமாக வழங்கிவந்த பெயர்களை மாற்றியமை ஏன் என்றும் - மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (எ-10-15)

### 22 தம்பதிகளுக்கு திருமணப் பதிவு

யாழ்ப்பாணம்,டிசெ.30

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் திருமணப்பதிவினை மேற்கொள்ளாது இருந்துவந்த 22 தம்பதியர்களுக்கு அண்மையில் திருமணப் பதிவு நடத்தப்பட்டது.

உதவிப்பதிவாளர் நாயகம் ந.சதாசிவ ஐயரினால் இந்தப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. (எ-10-6)

### சிறுவன் காயம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

பொலித்தீன் பையை நெருப்பினில் கொளுத்தி விளையாடிய சிறுவன் கண்களில் காயமடைந்தான்.

வரணி, இடைக்குறிச்சியைச் சேர்ந்த செல்வராசா சியாந்தன் (வயது 6) என்ற சிறுவனே காயமடைந்தவனாவான்.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (எ-10-6)

### மின் இணைப்புக்கு நிதி ஒதுக்கீடு

நெடுந்தீவு,டிசெ.30

நெடுந்தீவு மேற்குப் பிரதேச மின்சார விநியோகத்துக்கென குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நிதியில் இருந்து 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் விரைவில் மின்விநியோகத்தை ஏற்படுத்தித் தருமாறு அப்பிரதேச மக்கள் உரியவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-10-111)

### பிரதமருக்கு மகஜர்

வரணி,டிசெ.30

தென்மராட்சிப் பிரதேசத்துக்கு விரைவில் மின்சார விநியோகத்தை ஏற்படுத்தித்தருமாறு தென்மராட்சி சனசமூக நிலையங்களின் சமாசம் பிரதமருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

பிரதேசத்தின் சில பகுதிகளில் தூண்கள் நடப்பட்டுள்ளதாகவும், சில இடங்களில் தூண்கள் பறிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-10-170)

### மின்தடை

மானிப்பாய், உச்சியோடைப் பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சட்ட விரோதமாக மின்சாரம் பெறுவோரின் செயற்பாடுகளும் இதற்குக் காரணமாக உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-10-90)

### சான்றிதழ் வழங்கப்பட்டது

நவாலி,டிசெ.30

பிரான்பற்று கிராம அபிவிருத்தி ஒன்றியம் வலிகாமம் கல்வி வலயத்துடன் இணைந்து நடத்திய கணனிப்பயிற்சியில் கலந்துகொண்டோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பிரான்பற்று முருகன் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் திருமதி அளுரிஸரசி கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கினார். (எ-10-100)

### நடைபாதை குறியீடுகள் அமைப்பு

மானிப்பாய்,டிசெ.30

வலி.தென்மேற்கு பிரதேசசபையும், மானிப்பாய் லயன்ஸ் வட்டமும் இணைந்து அப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் முன்பாக நடைபாதைக் குறியீடுகளை அமைத்துள்ளன.

மானிப்பாய் பொதுச்சந்தைக்கு முன்பாகவும் இக்குறியீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. (எ-10-90)

### மின் இணைப்பு வசதி வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.30

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் உள்ள கணனிகளை இயக்குவதற்கு மின் இணைப்பை ஏற்படுத்தித் தருமாறு பாடசாலைச் சமூகம் மின்சார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலைக்கென அண்மையில் கணனிகள் வழங்கப்பட்டபோதும் அவற்றை இயக்குவதற்கு மின்சாரம் இல்லை என்று பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-10)

### வீதி சேதம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ். மனோகரா தியேட்டர் சந்தியில் இருந்து நாவாந்துறை வரையிலான நாவலர் வீதிப்பகுதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. இதனால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

பத்து வருடங்களுக்கு மேலாகத திருத்தப்படாமல் இருக்கும் இவ்வீதியால் தினமும் பல வாகனங்களும் மக்களும் சென்று வருகின்ற போதிலும் பலத்த சிரமங்களின் மத்தியிலேயே அவ்வாறு செல்லவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-10-86)

### வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.30

கடந்த பல வருடங்களின் பின்னர் இருபாலை - கோண்டாவில்வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது.

இருபாலைச் சந்தியில் இருந்து கோண்டாவில் பழனி ஆண்டவர் ஆலயப்பகுதி வரையான வீதியே தற்பொழுது புனரமைக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் சந்தி வரையான மிகுதிப்பகுதி இன்னும் புனரமைக்கப்படவில்லை. (எ-10)

# ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு வாய்மொழி மூலஆங்கிலப் பயிற்சி

ஏறாவூர்,டிசெ.30

நாடளாவிய ரீதியில் சகல அரச பாடசாலைகளிலும் கற்பிக்கும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு வாய்மொழிமூல ஆங்கிலக்கல்விப் பயிற்சி வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு அடிப்படை ஆங்கிலக் கல்வியைத் திறம்படப் போதிப்பதற்கு வசதியான ஆசிரியர்களுக்கு இந்தப் பயிற்சியை வழங்கத் தீர்மானித்துள்ளதாக கல்வி, மனிதவள அபிவிருத்தி அமைச்சின் ஆங்கிலக் கல்விப்பணிப்பாளர் பிலோமினா பெரேரா தெரிவித்தார்.

தரம் ஒன்று, இரண்டு மற்றும் ஐந்து ஆகிய வகுப்புகளில் கல்வி கற்பிக்கும் 2 ஆயிரம் ஆசிரியர்களுக்கு முதற்கட்டமாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகல மாகாணங்களிலும் இருந்து தலா 250 ஆசிரியர்கள் ஆங்கிலக் கல்விப் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

வலயமட்டத்தில் ஒவ்வொரு கல்வி வலயப் பிரிவுகளில் இருந்தும் தலா 40 ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு, வாய்மொழியை அடிப்படையாகக் கொண்ட ஆங்கில பயிற்சி வழங்கப்படவுள்ளது என்றும்- ஆங்கிலக் கல்விப் பணிப்பாளர் கூறினார்.

இதன்பிரகாரம் பொருத்தமான ஆசிரியர்களைத் தெரிவுசெய்து அவர்களது விவரங்களைக் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறு கல்விப் பணிப்பாளர் பிலோமினா பெரேரா சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளார்.

உதயன்

## ஜனாதிபதி சந்திரிகா காட்டும் வேடிக்கை

"நான் அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற விடயத்தை சமாதான முயற்சிகள் தடைப்பட்டுப்போனமைக்கு நொண்டிச்சாட்டாகக் கூறிவருகிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க."

- இப்படி பிரதமர் மீது குற்றஞ்சாட்டியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தமது குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரமாக உண்மைக்குமாறான பல அம்சங்களை ஜனாதிபதி குறிப்பிட்டிருப்பது இந்நாட்டு மக்களை விவரம் அறியாத ஏமாளிகள் என்று அவர் கருதுகிறாரோ என்ற எண்ணப்பாட்டைத்தான் உருவாக்கியிருக்கின்றது.

✪ மூன்று அமைச்சுக்களை நான் பொறுப்பேற்பதற்கு எட்டு மாதங்களுக்கு முன்பே சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டுவிட்டன.

✪ 1994 இல் நான் பிரதமராகப் பதவி வகித்த போது, புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தேன். அப்போது பாதுகாப்பு அமைச்சு, ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க வசமே இருந்தது. எனவே, பாதுகாப்பு அமைச்சு இல்லாததுதான் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க முடியாததற்கான காரணம் எனத் தற்போது பிரதமர் கூறுகின்றமை நியாயமற்றது.

- இப்படித் தமது குற்றச்சாட்டுகளுக்கு நியாயம் கற்பிக்க முயல்கின்றார் ஜனாதிபதி.

ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்பதற்கு. ஏழு மாதங்களுக்கு முன்னர் சமாதானப் பேச்சுகள் இடைநிறுத்தப்பட்டன என்பது உண்மைதான். ஆனால், பேச்சுக்களைத் தொடர்ந்து ஆக்கபூர்வமாக முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்களை - வசதிகளை - ஏற்பாடுகளை - சூழ்நிலையை - உருவாக்குவதற்காகவே பேச்சுகள் அப்போது இடைநிறுத்தப்பட்டன. ஆனால், இப்போதோ பேச்சுக்கான வாய்ப்பான சூழ்நிலை ஜனாதிபதியின் ஒரு தலைப்பட்சமான - தான்தோன்றித்தனமான - நடவடிக்கைகளினால் குழப்பப்பட்டதை அடுத்து, அமைதி முயற்சிகளின் அடுத்த கட்டம் என்னவென்று தெரியாத - ஐயத்துக்கு இடமான - கேள்விக்குறி நிலையில் - ஓர் அந்தகாரத்தில் - பேச்சுகள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, ஆரம்பத்தில் ஏழு மாதங்கள் பேச்சுகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததால் ஏற்பட்டிருந்த இடைவேளைக் காலத்தில் மீண்டும் ஆரம்பிக்கும் பேச்சுக்களை தங்குதடையின்றி முன்னேற்றகரமாகக் கொண்டு செல்வதற்கான நல்லதோர் அடித்தளம் இடும்பணி மேற்கொள்ளப்பட்டது. அது பூர்த்தியாகி - இடைக்கால நிர்வாகத்துக்கான புலிகளின் மாற்று வரைவு சமர்ப்பிக்கப்பட்டு - மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவிருந்த சமயத்திலேயே தமது அதிரடி நடவடிக்கை மூலம் அனைத்தையும் கெடுத்துக் குட்டிச்சுவராக்கினார் ஜனாதிபதி. இப்போது அதனை நியாயப்படுத்த நொண்டிச்சாட்டுத் தேடுகின்றார்.

1994 இல் தாம் பிரதமராக இருந்தபோது - ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க பாதுகாப்பு அமைச்சராக இருந்த சமயம் - புலிகளுடன் தாம் பேச்சுக்களை ஆரம்பித்தார் என்று அவர் கூறுவதும் உண்மைதான். ஆனால், அந்தப் பேச்சுக்களின் போது இடம்பெற்ற இரு அம்சங்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மறந்துவிட்டார் போலும். அந்த இரண்டும் அவருக்கு நினைவிருக்குமானால் தற்போது தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களை தாம் 1994-1995 காலப்பகுதியில் நடத்திய பேச்சுகளோடு அவர் ஒப்பிட்டிருக்கமாட்டார்:

ஒன்று - சந்திரிகா குமாரதுங்க பிரதமராகப் பதவியேற்ற பின்னர், சுமார் மூன்று மாதகாலம் ஜனாதிபதியாகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த டி.பி.விஜேதுங்க, பிரதமர் சந்திரிகாவின் சமாதான முயற்சிகளுக்கு இப்போதைய ஜனாதிபதி போல எந்த ஊறும் விளைவிக்க முயற்சிக்கவில்லை; எந்தக்குழப்பமும் ஏற்படுத்த எத்தனிக்கவில்லை; மாறாக, முழு ஒத்துழைப்பு வழங்கினார்.

மற்றது - 1994 கடைசியில் ஜனாதிபதி பதவியும் சந்திரிகா குமாரதுங்கவிடம் வந்தது. பிரதமரும் அரசும் கூட அவரின் கீழ். நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம் செய்யும் நாடாளுமன்ற அதிகாரம் ஆகிய இரண்டையும் பெற்றும் கூட, இப்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசினால் சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் நகர்த்தியது போல அவரால் அமைதி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லமுடியவில்லை. போர்வெறி, அதிகார ஆதிக்கம், பேரினவாதத் தீவிரவாதம் ஆகிய மாயைகளுக்குள் சிக்கி, சமாதான முயற்சிகளையே அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு மேற்கொள்ள முடியாத அவலத்துக்குள் கொண்டு போய் நிறுத்தி நாட்டைச் சீரழித்தார் அவர்.

இப்போது, பிரதமர் ரணிலின் அரசின் சமாதான முயற்சிகள் தொடர்பான போக்கை விமர்சிப்பதற்கு தமது முன்னைய அரசின் தவறான செயற்பாட்டை உதாரணத்துக்கு அவர் காட்டுவது வேடிக்கையிலும் வேடிக்கை.

# வடக்கு - கிழக்கில் கரையோர சமூக அபிவிருத்தித் திட்டம்

## ஆசிய அபிவிருத்தி நிதி உதவியுடன்

சாய்ந்தமருது,டிசெ.30

வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நி[illegible]தவித் திட்டத்தின் கீழ் கரையோர சமூக அபிவிருத்தித்[illegible]டம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

இத்திட்டத்திற்கென 28கோடியே 40 இலட்சம் அமெரிக்க டொலர் செலவிடப்படும் என வடக்கு - கிழக்கு மாகாணசபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே கிழக்கு கரையோர சமூகப் பாதுகாப்பு அபிவிருத்தித்திட்டம் என அழைக்கப்பட்ட இத்திட்டம் தற்பொழுது இம்மாகாணத்திலுள்ள வடக்குப் பிரதேசத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

5 ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தவுள்ள இத்திட்டம் 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு நிறைவு பெறும்.

இத்திட்டத்தின் கீழ் கிழக்குப் பிராந்தியத்தில் மட்டக்களப்பு ஏரி, திருகோணமலைக்குடா, அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேசங்கள் ஆகியன அபிவிருத்திக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதுபோன்று வடபிராந்தியத்தின் அபிவிருத்திக்கான இடங்களை இனங்காணும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என வடக்கு - கிழக்கு மாகாண சமூக அபிவிருத்தித் திட்டத்திற்கான அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# எய்ட்ஸ் விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்ட தொண்டர்களுக்கு சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ். குடாநாட்டில் எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட தொண்டர்களுக்கு தமிழீழ சுகாதார சேவையினரும் அரசியல் துறையினரும் இணைந்து இன்று சான்றிதழ்கள் வழங்கவுள்ளனர்.

கடந்த ஆறு நாள்களாக யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் எய்ட்ஸ் நோய் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சுமார் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தொண்டர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் நல்லூர்க் கோட்டம், வலிகாமம் கோட்டம், வடமராட்சிக் கோட்டம், தென்மராட்சிக் கோட்டம், தீவகக் கோட்டம் ஆகிய ஐந்து கோட்டங்களில் இந்தச் எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பிரசாரங்கள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் நல்லூர்க் கோட்டத்தில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட தொண்டர்களுக்கான சான்றிதழ்கள் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வைத்து வழங்கப்படும்.

வலிகாமம் கோட்டத்தில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட தொண்டர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இராமநாதன் கல்லூரியில் இடம்பெறும்.

வடமராட்சிக் கோட்டத்தில் எய்டஸ் விழிப்புணர்வுச் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தவர்களைக் கௌரவித்துப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கரவெட்டி பிரதேசசபை ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சியில் இந்தப் பணியில் ஈடுபட்டவர்களைக் கௌரவித்து பாராட்டுச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடம்பெற்றது.

தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல்துறைத்துணைப் பொறுப்பாளர் செம்மணன், விழிப்புணர்வு செயற்பாடுகளுக்கான சிறப்புப் பொறுப்பாளர் அன்பரசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பாராட்டுப் பத்திரங்களை செம்மணன், அன்பரசன், கலைவாணன், சாவகச்சேரிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மாறன், கைதடி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் முரளி, கொடிகாமம் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ரஞ்சன், யாழ். பல்கலைக்கழக மாணவன் புவனா, தென்மராட்சிக் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பு, விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவுப் போராளி வினோதன், தமிழீழ அரசியல்துறை நடுவப்பணியகத்தைச் சேர்ந்த வின்சென்ற் ஆகியோர் வழங்கினர். (ம-3)

## இளைஞர் சேவை மன்றப் போட்டிகளில்

# யாழ். கலைஞர்கள் 7 பேருக்கு தேசிய விருதுகள் கிடைத்தன

யாழ்ப்பாணம்,டிசெ.30

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கலாசாரப் போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஏழுபேர் தேசிய விருதுகளைப் பெற்றுள்ளனர்.

மேற்படி மன்றத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரி.சிவதட்சணாமூர்த்தி இதனைத் தெரிவித்தார்.

தேசிய விருது பெற்றோரின் பெயர், நிகழ்ச்சி பற்றிய விவரம் வருமாறு:-

புதிய நிர்மாணிப்பு நடனம் - க.ஸ்ரீபாஸ்கரன் குழுவினர் (பொது நூலகம் அருகில், மந்திகை), கிராமியப் பாடல் - தி.சுகிர்தன் (சங்கானை மேற்கு, வடலியடைப்பு), கிராமிய நடனம் - கி.ஜோன்சன் (டச்சு வீதி, சாவகச்சேரி), இஸ்லாமிய கீதம் - சிவதேவன் சுகன்யா (யாழ்ப்பாணம்), மிருதங்கம் - ப.சியாம் கிருஸ்ணன் (கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்), கட்டுரை - குமாரவடிவேல் குருபரன் (யாழ்ப்பாணம்), சாஸ்திரியப்பாடல் - ம.லதாங்கி (நுந்தாவில் வீதி, கொக்குவில்) (எ-7)

# குடாநாட்டில் பரவலாக நடமாடும் சேவை நடத்துக!

## மாவட்ட நல உரிமைச்சங்கத் தலைவர் கோரிக்கை

வலி.வடக்கு,டிசெ.30

யாழ். குடாநாட்டில் பரவலாக தொகுதிகள் தோறும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய நடமாடும் சேவைகள் நடத்தப்படவேண்டும். அத்துடன் இவ்வாறு நடத்தப்படும் சேவையில் அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் கலந்துகொள்ள வேண்டும்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி நலஉரிமைச் சங்கத்தலைவர் செ.பத்மநாதன் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். இது விடயமாக அவர் கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். நகரத்தில் மட்டும் நடமாடும் சேவையொன்றை நடத்துவது வெறும் கண்துடைப்பாகும். அரச அதிபர் இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்று அடுத்த ஆண்டில் இதுகுறித்த நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

மேலும் யாழ்ப்பாணத்தில் இத்தகைய இடம்பெயர் சேவைகளை நடத்துவதன் மூலம் நெடுந்தீவு, மருதங்கேணி மற்றும் தூரஇடங்களில் உள்ள மக்கள் இச்சேவையைப் பெறமுடியாத நிலை ஏற்படுகிறது.

அத்துடன் இவர்கள் பயணம் செய்வதாக இருந்தால் அதிக பணத்தை செலவு செய்ய வேண்டியுள்ளது. தொழில்களை இழந்து வருமானம் இன்றி இருக்கும் இந்த மக்களினால் இதனைச் செய்யமுடியாதுள்ளது என்று அதில் உள்ளது. (எ-86)

**நாளை**

மார்கழி 16
புதன்கிழமை
(31.12.2003)
திதி : அட்டமி
மு.ப. 9.02 வரை
நட்சத்திரம்; ரேவதி
பின்னிரவு 2.21 வரை.
சுபநேரம்: 4.59 - 6.29
ராகுகாலம்: 12.29 - 1.59
(பழைய நேர[illegible])

**உதயவாக்கு**

பசியும் தாகமும் தவிர்க்க முடியாதவை. ஆசையும் துக்கமும் அடக்க முடியாதவை.

# யாழ். பிரதேசச் செயலகம் நேற்றுமுதல் புதிய இடத்தில்!

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ். பிரதேசச் செயலகம் நேற்றுமுதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

யாழ்.செயலகத்துக்கு அருகில் இயங்கி வந்த இந்தச் செயலகம் தற்போது 450/2 பிரதானவீதி, சுண்டுக்குழியில் (சென்ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக) இயங்கி வருகின்றது.

நீண்டகாலமாக யாழ்.செயலகத்துக்கு அருகில் தனியார் கட்டடம் ஒன்றில் ஒருபகுதி யாழ். பிரதேச செயலகம் இயங்கி வந்தது. அதன் மற்றைய பகுதி யாழ். செயலகத்திலுள்ள ஓர் இடத்திலேயேயும் இயங்கி வந்தன. இதனால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். தற்போது இந்தச் செயலகம் சொந்தமாக வாங்கப்பட்ட கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. இவ்வாறு யாழ். பிரதேச செயலக நிர்வாக அலுவலர் தெரிவித்தார். (ம-7)

# குடாநாட்டின் தொல்பொருள்கள் குறித்து நூல் வெளியிட ஏற்பாடு

## மாவட்ட செயலகத்தில் இன்று ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

குடாநாட்டின் தொல்பொருள்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் தொடர்பான தகவல்களை உள்ளடக்கியதாக நூல ஒன்று வெளியிடப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வரலாற்றுப் பேராசிரியர்கள் மற்றும் துறைசார் அறிஞர்களின் ஒன்றிணைப்பில் இந்த நூல வெளியிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நூல் வெளியீடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தெரிவித்தார்.

குடாநாட்டின் பாரம்பரிய இடங்கள், தொல்பொருள் சான்றுகள், கட்டடப்பொருள்கள் என்பன குறித்து இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும். இறுதியில், அனைத்து விடயங்களும் உள்ளடக்கியதான நூல் ஒன்றை மும்மொழிகளிலும் வெளியிட ஏற்பாடு செய்யப்படும்.

அத்துடன முதலில் தொல்பொருள் சான்றுகள் பற்றிய விபரம் சேகரிப்பட்டு அட்டவணைப்படுத்தப்படும். பின்னர் இவற்றைப் பராமரித்தல் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

குடாநாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை வெளியுலகுக்குத் தெரியப்படுத்தும் வகையில் இந்த நூலை வெளியிட வரலாற்றுத்துறைப் பேராசிரியர்கள் முடிவுசெய்துள்ளனர் - என்று மேலதிக அரச அதிபர் தெரிவித்தார். (எ-6)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

புங்கன்குளம் வீதி, கொழும்புத் துறையில் 3 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.27/17, புங்கன்குளம் வீதி, கொழும்புத் துறை. T.P. 0777 570279, 0777 305533 (சி-31984)

## தவறிவிட்டது

ஏழாலை மேற்கைச் சேர்ந்த கார்த்திகேசு சிவரஞ்சன் என்பவரது விசேட அ.அ. (0906000124) நெல்லியடிக்கும் வல்வைக்குமிடையில் 24.12.2003 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: இல.3, பிளேச்சர்ஸ் வீதி, யாழ்ப்பாணம் சர்வோதயத தில் ஒப்படைத்துதவவும். (C/32413)

அல்லாரை தெற்கு மீசாலையைச் சேர்ந்த முருகேசு விக்கினேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (822670679V), சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன 25.12.2003 அன்று யாழ். கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சாரங்கா நகைமாடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (26484)

## ஆங்கிலம்

பல்கலை மாணவர்களுக்கும் தரம் 6-12 மாணவர்களுக்கும் ஆங்கிலவகுப்புகள் வெள்ளிக்கிழமை (02.01.2004) ஆரம்பமாகிறது. வீடுகளுக்கும் வருகைதந்து கற்பிக்கப்படும். தொடர்பு: க.நாகேந்திரம், 34/4(புதியது 82/24), செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (26491)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அழகிய, சிறந்த வீட்டிற்கும் பல ஏக்கர் தோட்ட நெற்காணிகளுக்கும் வங்கியில் 10 லட்சம் ரூபாவிற்கு உரிமையாளருமான மணமகளுக்கு உத்தியோகத்தர், ஆசிரியர், தரமான வியாபார உரிமையாளருமாக உள்ள 38-44 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. தரகர்களும் தொடர்புகொள்ளலாம். விள.இல.2133, மே/பா உதயன். (26467)

## கடை வாடகைக்கு

இல.16, கச்சேரி நல்லூர் வீதியிலமைந்துள்ள (கச்சேரி பஸ் நிலையம் முன்பாக) கடை வாடகைக்குண்டு. தொடர்பு: S.அகிலன், 205/2, கண்டி வீதி, அரியாலை. (26466)

## வகுப்புகள்

வெளிநாட்டில் ஆங்கிலத்தில் கற்பித்த அனுபவம் வாய்ந்த B.Sc. ஆசிரியரால் ஆங்கிலம் கற்பிக்கப்படும். வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கலாம். தொடர்பு: சி.நற்குணம், 654/6, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (கண்ணன் கோஷ்டி ஒழுங்கை) (26411)

## நத்தார் தினத்தில் ஒரே சூலில் 3 குழந்தைகள்

பதுளை,டிசெ.30

மொனராகலை அரசினர் மருத்துவமனையில் நத்தார் தினத்தில் ஒரே சூலில் மூன்று பெண் குழந்தைகளை இளம் தாய் ஒருவர் பெற்றெடுத்தார்.

மொனராகலைப் பகுதியைச் சேர்ந்த ரந்தெனியாய என்ற கிராமத்தில் வசிக்கும் 26 வயதுடைய ஆர்.டி.தமயந்தி என்பவரே மூன்று குழந்தைகளைப் பிரசவித்தவராவார்.

மூன்று குழந்தைகளும் தாயும் நலமுடன் இருப்பதாக பிரசவ விடுதிக்குப் பொறுப்பான டாக்டர் எம்.ஆர்.சந்திரிசிரி தெரிவித்தார். (வ-123)

---

யாழ்.வைத்தியசாலை மற்றும் பொதுநூலகத்திற்கு

# தென்னிலங்கைச் சட்டத்தரணி ஒருவர் ரூ.64,000 பெறுமதியான பொருள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.30

தென்னிலங்கையைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர், யாழ்.பொது நூலகத்திற்கும், யாழ். போதனா வைத்தியசாலைக்கும் சுமார் 64ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இரத்தினபுரியைச் சேர்ந்த சட்டத்தரணி உபாலி ராஜபக்ஷ என்பவரே யாழ்.பொதுநூலகத்திற்கு 44ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களையும், போதனாவைத்தியசாலைக்கு 20ஆயிரம் ரூபா பெறுமதியான வைத்தி உபகரணங்களையும் நேற்றுக் கையளித்தார். (ம-15)

---

ஜனவரி முதல் வாரத்தில்

**ASIAN COMPUTER SYSTEMS**

ICM England

நெல்லியடியில்

---

## வேலை ஆள்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்குப் பின்வரும் வேலை ஆள்கள் தேவைப்படுகின்றனர்.

1. உணவு பரிமாறுவோர் *(சப்ளையேர்ஸ்)*
2. மேற்பார்வையாளர்
3. ரீ மேக்கர்
4. குசினி உதவியாளர்

சம்பளம் பேசித் தீர்த்துக்கொள்ளப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**மலாயன் கபே,**
36, 38, பெரியகடை வீதி.
யாழ்ப்பாணம்.
ரெலிபோன்: 222 2373.

(26445) (26-14)

---

## பாராட்டி வாழ்த்துகிறோம்



சாவகச்சேரி, கோயில்குடியிருப்பு, சந்தன முதலிச்சிபுலம் ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி ஆலய பரிபா லன சபையின் நீண்டகால உபதலைவரும், A.K.S. ரான்ஸ்போட் சேவிஸ் (சாவகச்சேரி), A.K.S. அரிசி ஆலை (பரந்தன்) ஆகியவறறின் முன்னாள் பங்காளருமாகிய

**உயர்திரு. அ.க.சபாரட்ணம்**

அவர்கள் 24.12.2003 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம். அவரது சேவை மேலும் சிறப்புற இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

A.K. துரைரட்ணம் அவர்களும் பிள்ளைகளும். (34-14)

கந்தையா வீதி,
சாவகச்சேரி. (26487)

---

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் **சின்னத்துரை நடராசா**



தோற்றம் 05-06-1929 — மறைவு 05-01-1998

பாசமுடன் வளர்த்தீர்
பல நலமும் செய்தீர்
பேசும் தெய்வமாக
பேணி எமை வாழ்ந்தீர்
ஆசை கொண்டு நாமும்
அகம் மகிழும் நேரம் - சிவன்
தேசம் சென்றதேனோ என்றும்
தெய்வம் உமைப்பணிவோம்.

**மனைவி, மக்கள், மருமகன்.**

இணுவில் தெற்கு. (சி-32414) (26-14-21)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி கோயில் குடியிருப்பு சந்தனமுதலிச்சிபுலம் ஸ்ரீ நடராஜ முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையின் நீண்டகால உப தலைவரும் A.K.S.ரான்ஸ்போட் சேவிஸ் *(சாவகச்சேரி)*. A.K.S.அரிசி ஆலை *(பரந்தன்)* ஆகியவற்றின் முன்னாள் பங்காளரும் ஆகிய

உயர்திரு.

**அ.க. சபாரட்ணம்**

அவர்கள் 24.12.2003 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது சேவை மேன்மேலும் சிறப்புற இறை ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

A.K.சுந்தரம் குடும்பம்,
S. இராஜலிங்கம் குடும்பம்,
S. பரமேஸ்வரன் குடும்பம்,
S. சர்வேஸ்வரன் குடும்பம்,
செந்தில்குமரன் குடும்பம்.

கந்தையா வீதி.
சாவகச்சேரி. (26488) (21-26-19)

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 | 04 |
| - | - |
| 09 | 12 |
| - | - |
| 1941 | 2000 |

**அமரர் கார்த்திகேசு வேலாயுதபிள்ளை**

(முன்னாள் லிகிதர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)

திதி:30-12-2003

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறாதப்பா உங்கள் பிரிவுத்துயர்?
என்றும் உங்கள் நினைவுகளுடன்......

- குடும்பத்தினர்.

புகையிரத நிலைய வீதி,
கொடிகாமம். (26490)(34-14)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 14 | 12 |
| - | - |
| 10 | 12 |
| - | - |
| 1928 | 2002 |

**திருமதி இராஜசிங்கம் அழகம்மா**

வருடம் ஒன்று கடந்ததே
மாறுமோ உங்கள் முகம்?
தாளாத வேதனையில் தவிக்கவிட்டு
மீளாத்துயில் கொள்ளச் சென்றீர்களே!
நாம் புவியில் வாழும் வரை
எங்கள் உள்ளங்களில் உங்கள் மூச்சு
நிலைத்திருக்கும்!

- குடும்பத்தினர்.

கருணாநிதி ச.ச.நிலையம்,
வல்வெட்டி. (C/32412)(3414)

---

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை பொன்னர்

பலாலி மத்தியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம், வரியப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பொன்னர் அவர்கள் நேற்று (29.12.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா (ஊழியர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்), சிவராசா மற்றும் சரோஜா, யோகராணி, செல்வராணி (சுவிஸ்), நாகராசா (ஹொலண்ட்), யோகராசா (ஹொலண்ட்), வசந்தராணி (பிரான்ஸ்), பாமராசா (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சிவலோகநாயகி, சந்திராதேவி, காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் நாகரத்தினம், வீரசிங்கம் (சுவிஸ்), நிர்மலாதேவி (ஹொலண்ட்), அஞ்சலி (ஹொலண்ட்), இராமதாஸ் (பிரான்ஸ்), சித்திராதேவி (ஹொலண்ட்) ஆகியோரின் அருமை மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.12.2003) திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

*வரியப்புலம், சுன்னாகம்.* (26493)(34-21-14)

---



உ

சாமியே சரணம் ஐயப்பா!

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை உற்சவம்

*சிவன் அடியார்களே!*

நேற்று 29.12 2003திங்கட்கிழமை வருடாந்த திருவாதிரை உற்சவம் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 06.01.2004 செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவன்று பஞ்சரத பவனி கோலாகலமாக இடம்பெறும். 07.01.2004 புதன்கிழமை தீர்த்தோற்சவத்தன்று காலை ஆருத்திரா தரிசனம் பக்திபூர்வமாக இடம்பெறும். அன்று மாலை 3.00 மணிக்கு திருவூடலம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!

சிரு.கனகசபை சுந்தரலிங்கம்
(காரை.மணிகண்டன்)

(26483) (26-14)

# நோய் தீர்க்கும் எலுமிச்சை பணம் ஈட்டியும் தருகிறது

கோடைகால வெய்யிலுக்கு பழச் சாறுகளையும் குளிர்பானங் களையும் அருந்துகின்றோம். முக்கிய மாக, இளநீர், தோடம்பழச்சாறு, எலுமிச் சம்பழச்சாறு, நெல்லிரசம் போன்றவை மக்களின் தாகத்தைத் தணிப்பதில் அதிக பங்கு வகிக்கின்றன.

இதேசமயம், பலவகையான இர சாயனச் சேர்க்கைகள் கலந்த குளிர் பானக் கலவைகளையும் மக்கள் அருந் துகின்றார்கள். இயற்கையான பழங்க ளில் இருந்து பெறப்படும் சாறு எமது உடலுக்கு இதமளிக்கின்றது; நன்மை தருகின்றது. இயற்கையான குளிர் பானங்களான இளநீர், எலுமிச்சை, தோடை, நெல்லி என்பவற்றுள் எமது பிரதேசங்களில் எளிதாக வளரக் கூடி யதும் கலபமாக வளர்க்கக்கூடியது மான மரம் எலுமிச்சை ஆகும்.

### நோய் தீர்க்கும் எலுமிச்சை

எலுமிச்சையின் சாற்றில் விற்றமின் 'சி' சத்து நிறைய உண்டு. எமது உண வுத் தேவைக்கு எலுமிச்சை மிக உன்ன தமானதொன்று. சாப்பாட்டுக்கு முன் எலு மிச்சம் சாறு சிறிதளவு அருந்துவதால் ஜீரண சக்தி அதிகமாகின்றது; பித்தத் தன்மை அகல்கிறது; தலைவலி நீங்கு கிறது; பாடகர்களுக்கு குரல்வளத்தைப் பேண சிறந்ததாக அமைகிறது.

எலுமிச்சம்சாறு 'ஸ்கர்வி' என்னும் இரத்தமில்லா சதை சுருக்கி வியாதியை நீக்க சிறந்த மருந்தாக அமைகின்றது. ஒருமுறை 20 வாரங்களாகத் தொடர்ந்து கப்பல் பயணம்செய்த மாலுமிகள் விட் டமின் 'சி' சத்துடைய பச்சை மரக்கறி கள், கீரை உணவு வகைகள் என்ப வற்றை உண்ணாததன் காரணமாக 'ஸ்கர்வி' நோயினால் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட எந்த மருந்தும் பயனளிக்கவில்லை. அவர் களுக்குத் தினமும் எலுமிச்சைச் சாற றுடன் சர்க்கரை கலந்துகொடுத்தபோது சில தினங்களில் அவ்வியாதி முற்றாக மாறிவிட்டதாம்.

### அதிகலாபம்

சாதாரணமாக எமது சந்தைகளில் எலுமிச்சம் பழங்களுக்கு எப்பொழுதும் நல்ல கிராக்கி உண்டு. ஒரு கிலோ பழம் 100 ரூபா தொடக்கம் 200 ரூபா வரை சில சமயங்களில் விற்பனை செய்யப் படுகின்றன.

எலுமிச்சை மரங்களை வீட்டுத் தோட்டங்களில் வளர்க்கலாம். ஒவ் வொரு குடும்பத்தவர்களும் தத்தம் வீட்டு வளவில் இரண்டு அல்லது மூன்று மரங்களை நட்டுவைத்து பராமரிக்க முடியுமானால் தமது தேவைகளை நிறைவுசெய்துகொண்டு கலபமாக வரு மானத்தையும் தேடிக்கொள்ளலாம்.

எலுமிச்சம் மரத்துக்கு கபில நிற மண்ணே ஏற்புடையது. யாழ்ப்பாணம், வன்னிபோன்ற பிரதேசங்களில் இவ் வகை மண் காணப்படுவதால் எலு மிச்சம் மரங்களை இலகுவாக வளர்த்து நிறையப் பயனடையலாம்.

**காய்க்காத எலுமிச்சை மரம் ஒன்றுக்கு வருடமொன்றுக்கு இடப்பட வேண்டிய பசளை அளவு**

| | யூரியா | அடர்சுப்பர் பொஸ்பேற்று | மியூரியேற் ஒப் பொட்டாஸ் |
|---|---|---|---|
| நடுகையின் போது | 80 கிராம் | 100 கிராம் | 45 கிராம் |
| வருடமொன்றுக்கு அதிகரிக்க வேண்டிய அளவு | 80 கிராம் | 100 கிராம் | 45 கிராம் |
| மாதம் ஒன்றுக்கு இடவேண்டிய ஆகக் கூடிய அளவு | 475கிராம் | 590 கிராம் | 270 கிராம் |

**காய்க்கும் மரம் ஒன்றுக்கு வருடமொன்றுக்கு இடப்பட வேண்டிய பசளை அளவு**

| | யூரியா | அடர்சுப்பர் பொஸ்பேற்று | மியூரியேற் ஒப் பொட்டாஸ் |
|---|---|---|---|
| காய்க்கத் தொடங்கிய பின் வருடம் ஒன்றுக்கு இட வேண்டிய அளவு | 270 கிராம் | 620 கிராம் | 455 கிராம் |




யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அநே கமான வீடுகளில் ஏனைய பழமரங்களு டன் எலுமிச்சம் மரங்களையும் வைத்து வளர்த்து வருகின்றனர். ஆனால், இம் மரங்களில் இருந்து அநேகர் போதிய பயனைப் பெறுவதில்லை. மரங்களை முறையாக பராமரிக்காமல் விடுவதனா லேயே போதிய பயனை அடைய முடிவ தில்லை.

### நீர்ப்பாசனம்

எலுமிச்சைக்கு கோடைகாலத்தில நீர்ப்பாசனம் அவசியமானது. எலுமிச் சையின் வேர்கள் மரத்தின் கிளை கள் படர்ந்துள்ள நிலம் வரை படர்ந்து காணப்படும். இவை மண்ணின் மேற் பரப்பிலேயே காணப்படும். எனவே, மரத்தைச் சுற்றி நீபாய்ச்சுவதற்கு வசதி யாக பாத்திகள் அமைக்கும் போது மரக்கிளைகள் படர்ந்துள்ள நிலப்பரப் பில் ஒரு அடிதூரம் வெளிப்புறமாக அமைக்க வேண்டும். இதனால் வேர் கள் வெட்டப்படுவதைத்தவிர்க்க முடி யும் நீர் ஊற்றும் போது மரத்தின் அடிப் பாகத்தில் அதிக நீர் ஊற்றத் தேவை யில்லை. வேர்கள் பரந்துள்ள இடங்க ளுக்கே நீபாய்ச்ச வேண்டும். மரத்தின் அடியில் மண் அணைத்து நீர்ப்பாச னம் செய்வதும் தவறான முறையாகும். அப்படி செய்யும் போது மரத்தின் அடிப் பாகத்தில் அழுகல் நோய் ஏற்படலாம். கோடைகாலத்தில் ஏனைய பராமரிப்பு கள் சிறப்பாக அமைந்தாலும் கிழமைக்கு ஒருமுறையாவது நீர்ப்பாசனம் செய்வது அவசியமாகும்.

### கத்தரித்தல்

எலுமிச்சை மரங்களை 2 அல்லது $2\frac{1}{2}$ அடி உயரம் வரை அதன் பக்கக் கிளைகளை கத்தரித்து தனித்துண்டாக வளர விடவேண்டும். அதன்பின் செடி யானது இயற்கையான அமைப்பை பெறத்தக்கதாக வளர விடவேண்டும். மரத்தில், பட்டகிளைகளை உடனுக்கு டன் வெட்டி விடவேண்டும். வெட்டும் போது சிறிதளவு பச்சையாக உள்ள தண்டுடன் சேர்த்து வெட்ட வேண்டும். கிளைகளின் மேற்பாகம் அடர்த்தியாக நெருங்கிக் காணப்பட்டால் அவற்றில சிலவற்றைக் கத்தரித்துவிட வேண்டும்.

எலுமிச்சையானது பூத்துக் காய்க்க மூன்று, நான்கு வருடங்கள் ஆகும் ஒரு பருவகாலத்துக்கே அவை காய்க்கின்றன. பெரும்பாலும் பெப்ரவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரை இவை காய்க்கின்றன.

எலுமிச்சை மரங்கள் வளர்ந்து காய்க்க ஆரம்பிக்கும் வரை சிறப்பான பாரமரிப்புத்தேவை. ஐந்து வருடங்க ளுக்கு மேற்பட்ட வயதுடைய மரங்களில் மரப்பட்டைகள், கிளைகளில் இருந்து ஒரு வகையான பிசின் வடியும். இது ஒரு வகையான பங்கஸ் நோயாகும். இப்பிசினை எடுத்து விட்டு, அவ்விடத் தைக் கூரிய கத்தி கொண்டு வெட்டி எடுத்துவிடவேண்டும். பின் துணி ஒன் றால் நன்கு துடைத்து விட்டு பங்கஸ் கொல்லி மருந்து பூச வேண்டும். பட்ட கிளைகளை வெட்டி விடவேண்டும். வெட்டிய பின் 10-15 நாள்களில் புதிய தளிர்கள் தோன்றும். இத்தளிர்களுக்கு கிருமிநாசினி தெளித்து, மரத்துக்கு உரப்பசளையிட்டு, நீர்ப்பாசனம் செய் வதால் மரங்கள் விரைவில் நன்றாகக் காய்க்கும்.

### பூக்கத் தூண்டுதல்

சில எலுமிச்சை மரங்கள் நன்றாக வளர்ந்துள்ள போதிலும், பூக்காமல் இருக்கின்றன. இவற்றுக்கு வரட்சிக் காலத்தில் 3,4 வாரங்களுக்கு நீர்ப் பாசனம் செய்வதை நிறுத்திவிட்டு, பின்னர் நாளாந்தம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். நீர்பாய்ச்சலில் மரத்துக்கு திடீர் அதிர்ச்சியை வழங்குவதன் மூலம் அவற்றை பூக்கச் செய்யலாம் நீர் இன்றி வாடி இருக்கும் மரங்கள் மழை பெய்த வுடன் துளிர்விட்டுப்பூப்பதை நாம் காண் கிறோம்.

அதிகளவு வளர்ச்சியடைந்த மரங்களில் அடர்த்தியான கிளைகள் காணப்படும். இவையும் மரங்களை பூக்காமல் செய்கின்றன. எனவே, அடர்ந்த மரக்கிளைகளை வெட்டி, மரத்தின் மத்திய பகுதியில் காற்றோட்டம், சூரிய ஒளி நன்கு படக்கூடியவாறு வசதி செய்து கொள்ள வேண்டும். கிளைகள் நன்கு பரவி வளரக்கூடியதாக அவற் றில் பச்சை தென்னம் மட்டைகளைக் கட்டி தொங்கவிடவேண்டும். இவற்றைச் செய்வததால் மரத்தின் காபன், நைத ரசின் விகிதத்தில் மாற்றம் ஏற்பட்டு பூக்கள் உருவாகும்.

### நிறைமுனைவன்

### பசளையிடல்

எலுமிச்சை மரங்களுக்கு விவசாய திணைக்களத்தால் சிபார்சு செய்யப் பட்ட இரசாயன, சேதன உரப்பசளை களை இடுவதுடன் நுண்போஷணைத் திரவப் பசளைகளை விசிறுவதன் மூலம் சிறந்த பயனைப் பெறலாம். சேதனப் பசளைகளை மரத்தின் கிளை கள் படர்ந்துள்ள நிலப்பரப்பில் இட்டு, மண்ணுடன் கலந்து விடவேண்டும். சேதனப் பசளைகள் இடும்போது வேர் கள் பாதிப்படையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ★

---

# உணவுச் செய்கையில் நிறைந்த இலாபம் கிடைக்கும்

யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் இருந்தும் நெற்செய்கை, உபஉணவு மற்றும் வதிவிட வேளாண்மை (வீட்டுத் தோட்டம்) ஆகியவற்றில் ஈடுபடுகின்ற விவசாயிகளில் ஆண்டு தோறும் சிறந்த விவசாயிகளைத் தனித்தனியே தெரிவு செய்து அவர்களைக் கௌரவித்து வரு கின்றது. விவசாயத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் கடந்த நான்கு வருடங்களாக வருடத்தின் சிறந்த விவசாயிகளுக்கு சான்றிதழும், பணப்பரிசிலும் இந்தத் திணைக்களத் தினால் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டும் 12விவசாயப் போத னாசிரியர் பிரிவில் இருந்து தலா மூன்று பேரைத்தெரிவு செய்து அவர்கள் 36 பேரும் கௌரவிக்கப்பட்டனர். அவர்க ளில் ஒருவரான உரும்பிராய் விவசாய போதனாசிரியர் பிரிவைச் சேர்ந்த, கதி ரேசு வைரவநாதன் இன்றைய 'கமமும் புலமும்' பகுதியை அலங்கரிக்கிறார்.

கடந்த 30வருடங்களுக்கும் மேலாக விவசாயச் செய்கையில் (உபஉணவு) ஈடுபட்டு வருகின்ற வைரவநாதன், இந் தக் காலப்பகுதியில் தான் செய்கை பண்ணாத பயிர்களே அநேகமாக இல்லை என்று கூறுகிறார். நீர்வேலி, கரந்தனைச் சேர்ந்த இவர் விவசாயத் தையே தனது முழுநேரத் தொழிலாகக் கொண்டுள்ளார். 48 பரப்புக் காணி யில் பல்வேறு வகையான பயிர்களை யும் செய்கை பண்ணும் இவரது நிரந் தர பயிராக வாழையே உள்ளது. அத் துடன் வெண்டி, மரவள்ளி போன்ற பயிர்களும் தற்போது உள்ளன ஆயினும் அந்தந்தக் காலத்திற்கு ஏற்ற பயிர் களைத் தான் செய்கை பண்ணு வதில் என்றுமே பின்நிற்பதில்லை என்று எம்மிடம் கூறினார்.



முழுநேரத் தொழிலாக விவ சாயத்தில் ஈடுபட் டுவருகின்ற நீங் கள் ஆரம்பத்தில விருப்பத்துடன் இத்தொழிலில் ஈடுபட்டீர்களா; என நாம் கேட்டபோது, ஒரு புன்முறுவலு டன் அவர் அதற்குப்பதிளித்தார். அதா வது; தந்தையாரின் விருப்பமும் அதி களவு விவசாய நிலமும் தம்மிடம் இருந்ததையே விவசாயத்தில் தான் ஈடுபடக் காரணம் - என்றார்.

எனது 30 வருடகால விவசாயச் செய்கையில் பல்வேறு விதமான நிலை மைகளைச் சந்தித்தேன். அதிக பணம் சம்பாதித்ததும் உண்டு. நஷ்டமடைந்த தும் உண்டு என்று கூறிய வைரவநா தன், 1980ஆம் ஆண்டின் ஆரம்ப காலத் தில் வெங்காயச் செய்கையில் பெரும் பாதிப்படைந்ததாகவும், தான் மட்டுமன்றி அக்காலப் பகுதியில் வெங்காயச் செய் கையில் ஈடுபட்ட சகல விவசாயிகளும் நோய்த்தாக்கத்தின் காரணமாகப் பெரும் பாதிப்படைந்ததாகவும் தெரிவித்தார்.

மிளகாய், வெங்காயம், கத்தரி, வெண்டி, தக்காளி, பாகல், புடோல், பூசணி, புகையிலை மட்டுமன்றி கரணை, இராசவள்ளி, மரவள்ளி, குரக்கன் போன்ற பயிர்களையும் இதுவரை காலத்தில் செய்கை பண்ணியதாகத் தெரிவித்த வைரவநாதன், 87ஆம், 88ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் குரக்கன் செய் கையை விவசாயிகளிடையே ஊக்கு வித்ததாக வும் தெரிவித்தார். இன்று குடாநாட்டில் குரக்கன் செய்கையில் ஈடுபடுவோர் அரிதாகவே உள்ளனர். குரக்கன செய்கையில் பலரும் ஈடுபட வேண்டும் அதன் பயன்பாடுகள் அதிகம். நோயாளிகளுக்கும் பயன்படக்கூடியது குரக்கன்.

வாழைச் செய்கைக்குப் பெயர்போன நீர்வேலியில் நீங்கள் பல பயிர்களை யும் செய்கை பண்ணி அதில் வெற்றி கண்டுள்ளீர்கள். அதன் பயனாகவே, இந்த ஆண்டுக்காக உரும்பிராய் விவசாய போதனாசிரியர் பிரிவில் உப உணவுப் பயிர்ச் செய்கையில் சிறந்த விவசாயியாக உங்களைத் தெரிவு செய்துள்ளார்கள். உங்களைப்போல் நீர்வேலியில் அதிகமானோர் உபஉண வுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகிறார் களா? என்று நாம் அவரிடம் கேட்டோம்

நீர்வேலிப் பிரதேசத்தில் 60 வீத மானவர்கள் இவ்வாறு ஈடுபட்டு வருவ தாகவும், அவர்களில் கணிசமானவர் கள் வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவதுடன் விவசாயச் செய்கையிலும் ஈடுபடுவதாகக் கூறினார்.

தரமற்ற விதைகளை நடுகை செய் யாது நல்ல விதைகளை நடுகை செய்



தால் என்றுமே நல்ல பயனைப் பெறலாம் என்று கூறிய வைரவநா தன் யாழ் மாவட்ட விதைகள் உற் பத்திக் கூட்டுறவுச சங்கத்திலேயே தாம் விதைகளைப் பெற்றுக் கொள்வ தாகவும், அவை தரமான விதைகள் எனவும் குறிப்பிட் டார்.

வாழைக்கு அடுத்ததாக நீர் வேலி விவசாயிகள் எந்தப்பயிரை அதிக அளவில் செய்கை பண்ணுகி றார்கள் என்று கேட்டதற்கு, வெங் காயத்தையே செய்கை பண்ணுகிறார் கள என்று கூறியதுடன் நின்றுவிடாது, கரந்தன் ஐக்கிய விளைபொருள் சங் கம் என்றொரு சங்கம் பல வருடங் களுக்கு முன்னர் இங்கு இருந்தது. அந்தச் சங்கம் விவசாயிகளிடம் இருந்து வெங்காயத்தைக் கொள்வனவு செய்து தென்பகுதிக்கு அனுப்பியது என்றும் கூறினார். இப்போது அந்தச்சங்கம் செயற்படுவதில்லை என்பது வருத்த மான செய்தி.

உரும்பிராய் விவசாயப் போதனா சிரியர் பிரிவில் உப உணவுச் செய்கை யில் சிறந்த விவசாயியாக நீங்கள் தெரிவு செய்யப்படுவீர்கள் என்று எதிர் பார்த்தீர்களா? என்று கேட்டோம்.

சிறிதளவும் எதிர்பார்க்கவில்லை. பல விவசாயக் கிராமங்களை உள்ள டக்கியது தான் உரும்பிராய் விவசாயப் போதனாசிரியர் பிரிவு. இதற்குள் நான தெரிவு செய்யப்பட்டமை உண்மை யிலேயே மகிழ்ச்சியாக இருந்தது. அதற்குச் சான்றிதழும் பணப்பரிசும் கிடைத்தது. இது எனக்கு மட்டும் கிடைத்த கௌரவமல்ல நீர்வேலி விவ சாயிகள் அனைவருக்கும் கிடைத்த கௌரவமாகவே இதை நான் கருதுகி றேன் என்று உணர்வு பொங்கக் கூறினார்.

30வருடங்களுக்கு மேலாக விவ சாயச் செய்கையில் ஈடுபட்டு வருகின்ற இவர், பொருண்மிய மேம்பாட்டு நிறு வனத்தின் உற்பத்திக் குழுவுக்கு நீர் வேலி தெற்கின் தலைவராக 87ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை உள் ளார். ஒரு சிறந்த விவசாயியாகவும் உற்பத்தியாளனாகவும் உள்ள வைர வநாதனுக்கு நாமும் எமது வாழ்த்துக் களைத் தெரிவித்து விட்டு அவரிடம் இருந்து விடைபெற்றோம். ▲

சந்திப்பு :
**வைஷாலி**

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 26 - 03 - 1925



ஆண்டவன் அடியில் 10 - 01 - 2003

## அமரர் நாகமணி இரத்தினம்

*(இந்திரா மோட்டார் வேக்ஸ் - உரிமையாளர்)*
திதி: பூர்வபக்க அட்டமி (30.12.2003)

அன்பின் ஒளியாக பாசத்தின் பரிவாக
நேசத்தின் நிழலாக நட்பின் உறைவிடமாக
உழைப்பின் உயர்வாக நன்றே பேணும் தலைவனாக
நாடே வியக்கும் தந்தையாக
உருவம் கொடுத்து உயிர் கொடுத்தாய்!
நம்மைக் காக்க காலமெலாம் கண் விழித்தாய்!
எமைப் பிரிந்து ஓராண்டானாலும் தந்தையே!
நீ என்றும் எம்முன் காலமெல்லாம் சுடர்விடும்
அணையாத் தீயாய் நீ காட்டிய பாதையில்
நாமும் நம் வழித் தோன்றல்களாய் செல்ல
ஒளி கொடுப்பாய்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

*இராமலிங்கம் வீதி,*
*சாவகச்சேரி.* (26066)(24-13-18-31)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 27 - 01 - 1936



விண்ணில் 30 - 11 - 2003

## அமரர் சுப்பன் வினாசி

முன்னை செய்த பெருந்தவமோ!
நின்னை யாம் தந்தையாய் அடைதற்கு
மண்ணில் நல்ல வண்ணம் வாழ்தற்கு
எண்ணக் கருத்துக்களை எம்முள்
விதைத்தீர் ஐயா!

பிரிவில் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்,
சகோதரிகள், மைத்துனர்கள்,
மைத்துனிமார், பேரப்பிள்ளைகள்.

*கைதடி தெற்கு,*
*கைதடி.* (26408)(25-13-18-31)

# ஓராண்டு நினைவு நாள்

மலர்வு 08 - 11 - 1938



உதிர்வு 11 - 12 - 2002

## அமரர் கிருஸ்ணபிள்ளை செல்லத்துரை

திதி: 30.12.2003

கறையேது மில்லாத கண்ணியவான் எம்பதியில்
கதிரவனின் ஒளிகண்டு குலதெய்வம் தானாகித்த
குறைவிலா பொருள்தேடி காலமெலாம் காத்த எம்மை
கனிவார்ந்த மொழியும் கையவை கல்வியையும்
நிறைவோடு தந்தமக்கு நாளுமே விழித்திருந்த
ஞாலத்தில் எம்வாழ்வை உயரவைத்த தெய்வமே!
மறைந்தமே ஆண்டொன்று இன்றுடனே ஆனாலும்
மலர்ந்தமுகம் எம்வாழ்வில் நிழலாக உறவாகும்.

*"ஜெயபதி"*
*மகாத்மா வீதி,*
*அல்வாய் வடக்கு.* (25682)(24-13-18-31)

மனைவி, மகன், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

# சங்கானை ஆஸ்பத்திரி வளவினுள் கட்டாக்காலிகளால் தொல்லை

சண்டிலிப்பாய், டிசெ.30

சங்கானை அரசினர் வைத்திய சாலையில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லை அதிகரித்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பகல் - இரவு என்றில்லாமல் கட்டாக்காலி ஆடு, மாடுகள் வைத்தியசாலை வளவில் தன்னிச்சையாகப் புகுந்து அங்குள்ள நிழல் தரு மரக்கன்றுகளுக்கு பலத்த சேதம் விளைவித்து வருவதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் வேலி அடைத்துப் பாதுகாப்பான முறையில் நடுகை செய்கை பண்ணப்பட்ட மரக்கன்றுகளை விட்டுவைக்கவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இவ் வைத்தியசாலைக்கு அவசியம் சுற்றுமதில் அமைக்கப்பட வேண்டும் என்று வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதற்கு உதவுமாறு இப்பகுதியிலுள்ள பொதுநல அமைப்புகளிடமும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-135)

### வீதியைப் புனரமைத்தமைக்கு மக்கள் நன்றி தெரிவிப்பு

அளவெட்டி மேற்கு எல்லை வீதியைப் புனரமைப்புச் செய்ததற்காக அளவெட்டி மேற்கு மக்களால் வலி. வடக்கு பிரதேச செயலாளருக்கும் வலி. வடக்கு பிரதேச சபை செயலாளருக்கும் நன்றி தெரிவிக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மிகவும் மோசமாகச் சேதமடைந்திருந்த அளவெட்டி மேற்கு எல்லை வீதி 'நக்கொட்' நிறுவன உதவியுடன் தார் வீதியாகப் புனரமைக்கப்பட்டது. இதற்கு நன்றி தெரிவித்தே 75 பொது மக்கள் கையொப்பமிட்ட நன்றிக் கடிதங்கள் செயலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-150)

### கொக்குவில் ஆலயத்தில் தொடர் திருட்டுக்கள்

கொக்குவில் தலையாளி வைரவ ஆலயத்தில் கடந்த சில மாதங்களில் இரண்டு திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

அண்மையில் இந்த ஆலயத்தினுள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த பிள்ளையார் சிலை திருடர்களினால் திருடிச் செல்லப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து ஆலயத்தில வைக்கப்பட்டிருந்த உண்டியல் திருடிச் செல்லப்பட்டது. இந்த உண்டியல் ஏற்கனவே அவர் பத்து தடவைகளுக்கும் மேல் உடைக்கப்பட்டு திருட்டு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-86)

### கிணற்றில் தவறி வீழ்ந்து குழந்தை பலி!

கிணற்றினுள் தவறிவீழ்ந்த குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

அதிகாலை 6.30 மணியளவில் கிளிநொச்சி செல்வபுரம் கிராமத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மகேஸ்வரன் கீர்த்தனா (வயது2) என்ற குழந்தையே கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளது.

பெற்றோர்கள் நித்திரையில் இருந்த வேளை அதிகாலையே நித்திரை விட்டெழுந்த குழந்தை தவறி கிணற்றில் வீழ்ந்தது என்றும் -

நித்திரை விட்டெழுந்த பெற்றோர் குழந்தையைக் காணாது தேடியவேளை குழந்தை கிணற்றில் கிடந்ததனைக் கண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம-6-5)

### மருதங்கேணிக்கு தனிப் பிரதேசசபை அமைக்கக் கோரிக்கை

பருத்தித்துறைப் பிரதேச சபையை இரண்டாகப் பிரித்து மருதங்கேணிக்கென தனியான பிரதேச சபையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக்கோரும் மகஜர்கள் வடமாகாண் ஆளுநர் க.மறுவாழ்வு புனர்வாழ்வு நிறுவனம் யாழ்.அரச அதிபர் செயலாளர் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.கே. சிவாஜிலிங்கம், அ.விநாயகமூர்த்தி ஆகியோரிடம் கையளித்துள்ளது.

முப்பத்தெட்டு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பருத்தித்துறை பிரதேச சபை மருதங்கேணிப் பகுதியை நிர்வகிப் பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் மக்கள் தமது அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள நீண்ட தூரம் சென்று பல மணிநேரங்களைச் செலவிட வேண்டியுள்ளதாகவும் மருதங்கேணி பிரதேசத்தின் அபிவிருத்தி கருதியும் தனியான பிரதேச சபை அமைக்கப்பட வேண்டும் என்று இம்மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ம-118)

### திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ். சைவபரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 7.30 மணி முதல் நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது.

திருவெம்பாவை தினத்தை முன்னிட்டு இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 29 - 01 - 1916



உதிர்வு 30 - 11 - 2003

## அமரர் கந்தையா இராசையா (பத்தர்)

*அன்போடும் பாசத்தோடும் எங்களை வளர்த்த ஐயாவே!*
*உங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்கா*
*உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி!

*தாமர் ஒழுங்கை,*
*புலோலி வடக்கு, பருத்தித்துறை.* (26293)(24-13-18-31)

- குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

*பிறப்பு* 13 - 02 - 1963



*இறப்பு* 30 - 11 - 2003

## செல்வி விஜயராஜா கமலாஜினி

அன்புக்கும் பண்புக்கும் இருப்பிடமாய்த் திகழ்ந்தீர்
உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

இன்று (30-12-2003) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மா.விஜயராஜா,*
*விளாத்தியடி வீதி,*
*உரும்பிராய் வடக்கு.*

*- பிரிவால் வருந்தி நிற்கும்:*
தாய், தந்தை, சகோதரர்கள்.
(26015)(23-13-18-31)

# ஒன்பதாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 - 06 - 1928



மறைவு 09 - 01 - 1991

பலாலி தெற்கு, வயாவிளான்

## செல்லத்துரை உலகநாதன் J.P.

*(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)*

உதவியென வந்தவர்க்கு
உவந்து மனம் மகிழ்ந்து
எந்நேரமும் உதவுகின்ற
நாடுபுகழ் நல்மனிதர்
எங்கள் குடும்பத்தின்
ஒளிவிளக்கே உங்களை நாம்
என்றும் மனத்தில் வைத்து
இதயத்தால் போற்றுகின்றோம்.

*"உதய கிரி"*
*பலாலி தெற்கு,*
*வயாவிளான்.*

தற்போதைய முகவரி:
நாமகள் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

- மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சுற்றத்தார்.
(26471)(24-13-18-31)

# அதிகாரவெறியில் அரசியல்வாதிகள் நாட்டின் நிலையோ அதலபாதாளத்தில்

*யுத்தத்தில் கூட எதிரி தப்பி ஓட வழிவிட்டுத் தாக்குதலை மேற்கொள்வதே புத்திசாலித்தனமான நடவடிக்கையாகும். அவ்வாறு இடமளிக்கவில்லை எனில் எதிர் தற்கொலைப் போராளியாக வாய்ப்புண்டு. அவ்வாறான ஒரு போராட்டத்தில் இருதரப்பிற்கும் இழப்புக்கள் நேரிடலாம்.*

*இதன் அடிப்படையில் தற்கால அரசியலை ஆராயும் கட்டுரை இது.*

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகிய இருவரும் தாம் சுமக்கும் சுமையிலிருந்து விடுதலைபெற தனித் தனியே முயற்சிக்கின்றனர். அந்த முயற்சிகள் அவர்கள் உருவாக்கிய முடிச்சுக்களை அவிழ்ப்பதற்குப் பதிலாக மேலும் இறுகுவதற்குக் காரணமாக அமைவதாகத் தோன்றுகிறது. இவ்விருவரும் தம்தோள்மீது சுமக்கும் சுமையின் தன்மையை அவதானிக்கும்போது அவர்களிருவரும் பூரணமாக முயற்சி செய்தாலன்றித் தாம் சுமக்கும் சுமையை இறக்கி வைத்து ஆறுதலடைய முடியுமெனத் தோன்றவில்லை.

இந்தச் சிக்கலில் ஜே.வி.பி. குள்ளநரியின் நிலையில் இருந்து வருகிறது. பன்றிகள் சிரமப்பட்டுத் தோண்டிச் சேகரிக்கும் சுவையான கிழங்குகளை அபகரிக்க முயலுகின்ற நரியைப்



போலல்லாது ஜனாதிபதியும் பிரதமரும் சுமக்கும் பாரத்தைப் போன்று தாமும் பாரம் சுமக்கவேண்டிய நிலையில் ஜே.வி.பி. தற்போது உள்ளதாகத் தோன்றுகிறது.

தற்போது ஸ்ரீ.ல.சு.கட்சியின் உதவியின்றி ஜே.வி.பியால் தனித்து இயங்கமுடியாத நிலை உருவாகியுள்ளது. ஆனால், ஜே.வி.பி.யுடன் கூட்டு வைத்துக்கொண்டாலும் சிரமம் ; கூட்டு ஏற்படுத்திக் கொள்ளாவிட்டாலும் சிரமம்; என்றதொரு நிலையில் ஸ்ரீ.ல.சு.கட்சி இருந்துவருகிறது.

### ஜே.வி.பியின் திட்டம்

ஜே.வி.பி. தனது உறுப்பினர்களுக்கு மூளைச் சலவை மேற்கொள்ளாது ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் கூட்டு ஏற்படுத்திக்கொள்ளும் பொருட்டு அவர்களது மூளைகளை முற்றுமுழுதாகப் புதிதாக ஆக்கிக்கொண்டுள்ளது. அதாவது, ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் கூட்டு ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, அதன்மூலம் ஜே.வி.பி. சார்பான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்திக் கொள்ளமுடியுமெனத் தம் உறுப்பினர்களுக்கு நம்பிக்கையூட்டி வருகின்றது. இப்புதிய அணுகுமுறையை விரும்பாத ஒரு பிரிவினர் ஜே.வி.பியில் இருந்த போதிலும் அவர்கள் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்க முடிகிறதே தவிர, அம்முடிவை எதிர்த்துக் குரல் எழுப்பக் கூடிய நிலை ஏற்படவில்லை. உண்மையில் தற்போதைய நிலையில் ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் கூட்டு ஏற்படுத்திக்கொள்வதன் மூலமன்றி ஜே.வி.பியால் தொடர்ந்து இயங்கமுடியாது. இக்கூட்டு முயற்சி தோல்வி அடையுமானால் ஜே.வி.பியின் தற்போதைய தலைமைத்துவம் சிக்கலுள் மாட்டுப்படும். அதனால், பின்னடைவைச் சந்திக்கவேண்டிய நிலை அதற்கு உருவாகக்கூடும்.

இதேசமயம் ஜே.வி.பியுடன் கூட்டுஏற்படுத்திக் கொள்ளவிரும்பும் ஒரு தரப்பினர் ஸ்ரீ.ல.சு.கட்சியில் இருக்கின்றனர். ஆயினும், அவ்விதம் கூட்டொன்று ஏற்படுத்திக் கொள்ள விரும்பாத தரப்பினரே ஸ்ரீ.ல.சு. கட்சியில் பெரும்பான்மையாக உள்ளனர். அதேசமயம் ஸ்ரீ.ல.சு. கட்சி, ஐ.தே.முன்னணி அரசுடன் புரிந்துணர்வுடன் செயற்படமுனையுமானால் ஜே.வி.பி. மட்டுமன்றி ஸ்ரீ.ல.சு. கட்சியும குறிப்பிடத்தக்க பெரிய அளவிலான சிக்கல்களில் மாட்டிக்கொள்ள வேண்டி ஏற்படும். ஸ்ரீ.ல.சு.கட்சி ஜே.வி.பியுடன் கூட்டு ஏற்படுத்திக் கொள்வதை ஆதரிக்கும் ஸ்ரீ.ல.சு. கட்சியிலுள்ள குழுவினர் தமது கட்சி ஐ.தே. முன்னணியுடன் புரிந்துணர்வுடன் செயற்பட முயல்வதை துரோகத்தனமானதாகக் கருதுகின்றனர். அதேசமயம் மற்றொருபுறம் ஸ்ரீ.ல.சு. கட்சி ஜே.வி.பி.யுடன் கூட்டு ஏற்படுத்திக் கொள்ளுமானால் ஸ்ரீ.ல.சு.கட்சியிலும் பெரும் பிளவு ஏற்படுவதைத் தடுக்கமுடியாது போகக் கூடும். ஆனால், ஜே.வி.பியுடன் கூட்டு ஏற்படுத்திக் கொள்வதை விரும்பாத ஸ்ரீ.ல.சு. கட்சியினுள் உள்ள குழுவினர் அவ்வித நடவடிக்கையைக் கட்சியைக் காட்டிக் கொடுக்கும் நடவடிக்கையென்ற வகையில் கருதுகின்றனர். இந்தவேளையில் ஜே.வி.பியுடன் கூட்டு ஏற்படுத்திக் கொள்வதைவிட அரசுடன் புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்வதையே அத்தரப்பினர் பெரிதும் விரும்புகின்றனர்.

### ஜனாதிபதியின் தர்மசங்கடம்

இச்சிக்கலில் ஜனாதிபதி மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது - இக்கட்டானதொரு நிலையில் உள்ளார். ஜே.வி.பி.யுடன் கூட்டொன்றை உருவாக்கி இணைந்து செயற்படுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்தமை, அதனால், எதிரணிக்குக் கிட்டவுள்ள பொதுமக்களிடையேயான ஆதரவு மற்றும் ஈர்ப்பு என்பவை குறித்து அலசி ஆராய்ந்ததன் அடிப்படையிலேயே ஆகும். எதிர்த் தரப்பினரின் குரல் ஓங்காதவாறு கட்டுப்படுத்திக்கொள்ளவேண்டுமானால் ஜே.வி.பி. போன்ற நேரடி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அமைப்பொன்றுடன் இணைந்து செயற்படுவது அவசியமென ஜனாதிபதி எண்ணியிருக்கக்கூடும். ஆனால், இதனால் இருந்ததையும் இழக்கும் நிலை ஸ்ரீ.ல.சு.கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

ஒருபுறம் ஜே.வி.பி.யுடன் நிரந்தரமான கூட்டு ஏற்படுத்திக்கொள்வதை தமது கட்சியைச் சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்கள் எதிர்ப்பதை ஜனாதிபதி நன்கறிவார். மறுபுறத்தில் அவ்வித அதிருப்தியாளர்களை



ஒருவாறு சமாளித்துக்கொண்டு ஜே.வி.பி.யுடன் கூட்டு ஏற்படுத்திக் கொண்டாலும் நாடாளுமன்றத் தேர்தல் வரும் வேளையில் இப்பிரச்சினை பெரும் சிக்கலொன்றுக்கு வழிவகுக்கும் என்பதையும் ஜனாதிபதி அறிவார்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் எவ்விதம் அமையுமென்று முன்கூட்டியே தீர்மானிப்பது இயலாத காரியமாகும். அண்மைய சம்பவங்களின் பெறுபேறுகள் நிலவிய குழப்பநிலை மேலும் உக்கிரமடைய வழிவகுத்துள்ளன. ஜே.வி.பி.யுடன் கூட்டு ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் குறிப்பிடத்தக்க வெற்றியடைய முடிந்தாலும் பின்னர் அது சிக்கல்களை உருவாக்கும் என்பதையும் ஜனாதிபதி நன்கறிவார்.

இன்றைய நிலைமை பொதுத் தேர்தலைச் சந்திப்பதற்குப் பொருத்தமானதல்ல என ஜனாதிபதி கருதுவதாகத் தெரிகிறது. ஆகவே, பிரதமருடன் தற்காலிக இணக்கப்பாடொன்றைக் காண்பதே அவரது தற்போதைய நோக்கமாகவுள்ளது. ஆயினும் அவ்வாறானதொரு இணக்கப்பாட்டை மேற்கொள்வது அத்துணை இலேசானதொரு விடயமல்ல. அதேவேளை தன்வசம் எடுத்துக்கொண்ட அமைச்சுப் பொறுப்புக்களை மீண்டும் அரசிடம் ஒப்படைக்கவும் ஜனாதிபதியால் இயலாது. கைப்பற்றப்பட்ட அமைச்சுப் பொறுப்புக்கள் மீண்டும் அரசிடம் வழங்கப்படாவிட்டால் எவ்வித இணக்கப்பாட்டுக்கும் முன்வரப் போவதில்லை என்ற நிலைப்பாட்டைப் பிரதமர் கடைப் பிடித்து வருகின்றார். எனவே, தற்போதைய சிக்கலுக்குத் தீர்வொன்றைக் காண்பது மிகக் கடினமான செயலாக அமைந்துள்ளது.

### பிரதமரின் நிலைப்பாடு

கைப்பற்றிய அமைச்சுப் பொறுப்புக்கள் மீண்டும் வழங்கப்படா விட்



டால் ஜனாதிபதியுடன் ஒத்துப்போக இயலாதென்ற பிரதமரின் நிலைப்பாடு புத்திசாலித்தனமானதொன்றெனக் கருதமுடியாது. யுத்தமொன்றில் கூட எதிரி தப்பிஓடச் சந்தர்ப்பத்தை வழங்கியே தாக்குதலை மேற்கொள்ள வேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையாகும் இல்லையேல் எதிரியைத் தற்கொலைத் தாக்குதலுக்குத் தூண்டும் நடவடிக்கையாக அது மாற்றமடையும். அவ்வித போர் உத்தி இருதரப்புகளுக்கும் பெரும் சேதம் ஏற்படுத்துவதாக அமையக்கூடும்.

மற்றொரு வகையில் அவ்வித கடுமையான கொள்கையானது நிலவும் சிக்கலை மேன்மேலும் தீவிரமாக்குவதற்குக் காரணமாக அமைந்துவிடும். குறிப்பாக நாட்டின் இன்றைய அரசியல் நிலவரத்தில் பொதுத்தேர்தல் இடம்பெறுமானால் அது பிரதமர் தரப்புக்குக் கூட இலாபகரமானதாக அமையப்போவதில்லை.

இந்தவேளையில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டால் அது இரு தரப்பாருக்குமிடையே அதிகாரத்துக்கான பயங்கரமான மோதலாக உருவாவதைத் தவிர்க்கமுடியாது. அவ்வேளையில் ஜனாதிபதி கூட தனது தரப்பு வெற்றிக்காக தன்னெண்ணப்படி செயற்படும் கொள்கையை அனுசரிக்கும் நிலைமைக்கு அது வழிவகுக்ககூடும்.

நாடாளுமன்றத்தில் குறைந்த பலத்தை வைத்துக்கொண்டு பொதுத் தேர்தலொன்றைச் சந்திப்பதிலும் பார்க்கத் தேர்தலில் குதிப்பதாயின் முழு அதிகாரங்களையும் தனது கையில் வைத்துக்கொண்டு தேர்தலொன்றைச் சந்திப்பதே சிறந்ததென



ஜனாதிபதி கருதுவதாகத் தெரிகிறது. ஆனால், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம்கொண்டிராத நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு எதிரான விதத்தில் தனது கட்சியின் சார்பில் அமைச்சரவையொன்றினை நியமித்து அந்த அமைச்சரவை நாடாளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகிறதா இல்லையா எனக் கண்டறிய இடமளிக்காது உடனடியாகவே நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வழியை ஜனாதிபதி மேற்கொள்ளமுடியும். அதன்பின்னர் அது சட்ட திட்டங்கள் முறையாகக் கடைப் பிடிக்கப்படாத வகையில் நடத்தப்படும் கடும் சண்டையாக மாறுவதைத தவிர்க்க முடியாது. ஆயினும், அவ்வித நடவடிக்கை இரு தரப்பினருக்கும் கடும்பாதிப்பு உருவாகக் காரணமாக அமையும். தேர்தலில் எத்தரப்பினர் வெற்றிபெற்றாலும் சந்திரிகாவுக்கோ ரணில் விக்கிரமசிங்கவுக்கோ உடல் முழுவதும் இரத்தம் பூசிய நிலையில் பதவிஏற்கும் நிலையில் கடும் வன்முறைகள் இடம்பெற்ற தேர்தலாகவே நடந்துமுடியும்.

### நெருக்கடி அதிகரிப்பு

பொதுத்தேர்தல் என்ற விடயம் இவ்விதம் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் நிலையில் நிலைமைகள் மேலும் மோசமடையுமே தவிர எந்தவொரு தரப்பிற்கும் மகிழ்ச்சியளிப்பதாக அமையாது.

அவ்விதம் செயற்பட முனைந்தால் தற்போதைய நெருக்கடி நிலை மேன்மேலும் அதிகரித்து அதன் பயனாக அது நாட்டில் பேரழிவை ஏற்படுத்தும் அத்துடன் இவ்விரு தலைவர்களது அரசியல் வாழ்க்கையிலும் பாதிப்பை உருவாக்குவதையும் தவிர்க்க இயலாது போய்விடும்.

கைப்பற்றிய சகல அமைச்சுப் பொறுப்புக்களும் மீளத் தரவேண்டுமென்ற பிரதமரின் நிலைப்பாட்டால்



தற்போதுள்ள சிக்கல்நிலை மேன்மேலும் சிக்கலாகுமே தவிர தீர்வு காணப்படுவதற்கு உதவுவதாக அது அமையாது. இச்சிக்கலைத் தீர்ப்பதற்கான வழி பொதுத் தேர்தலொன்றைச் சந்திப்பதே என எதிர்பார்த்தாலும் மேலும் குறிப்பிட்டதொரு காலம் வரை நாடாளுமன்றத்தைக் கலைக்காது இருக்கும் விதத்திலேயே இயங்க வைக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி தன்வசம் கொண்டுள்ளார். பிரதமரின் இவ்விதப் பிடிவாதப் போக்குக் காரணமாக அரசுக்கு பெரும் அபகீர்த்தி ஏற்படக்கூடும். அவ்விதமின்றி நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை மூலம் அரசைக் கலைத்துவிடும் பிரேரணை நிறைவேற்றி அரசைக் கலைத்துவிடும் அதிகாரத்தைப் பிரதமர் கொண்டிருப்பினும் அவ்வித முயற்சி ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே பிரிவினையை உருவாக்க ஒரு காரணமாக ஆகிவிடும்.

மறுபுறத்தில் பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்பட்டு அதில் ஐதே.முன்னணி வெற்றியடைய நேர்ந்தாலும் தற்போதுள்ளதைப் போன்றதொரு மிகச்சிறிய பெரும்பான்மைப் பலம் கிட்டுமேயானால் மீண்டும பழைய நிலைமையே திரும்பும். தற்போதுள்ள அரசியல் பின்னணியில் பொதுத் தேர்தலொன்று நடத்தப்பட்டால் எக்கட்சி ஆட்சியமைக்க முடிந்தாலும் அது மிகச் சிறிய தொரு பெரும்பான்மையுடன் மட்டுமே அரசமைக்க முடியுமெனத் தோன்றுகிறது.

**வியெஸ்ரி**

2005 ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் எவ்விதம் அமைந்தாலும் சரி என்ற மனப்போக்குடன் பிரதமர் ரணில்செயற்படமுடியும். அவ்வாறான கோணத்தில் பிரதமர் சிந்திப்பாரானால் 2005 ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள ஜனாதிபதித்தேர்தல் மட்டுமே தன்னை மீட்டும் என அவர் சிந்திக்க வாய்ப்புண்டு. ஆனால், இவ்விதப் போக்கைக் கடைப்பிடித்தால் நாட்டின் நலிவு மோசமாகும். சிலவேளை நாடு மீண்டும் தலைதூக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படலாம். அவ்வாறானதொரு நிலை நாட்டின் நலனுக்கு ஆரோக்கியமானதல்ல. ✪

# புகையிலை நாற்றுக் கொள்வனவு; தீவக விவசாயிகளுக்கு அறிவுறுத்து

ஊர்காவற்றுறை,டிசெ.30

தீவுப்பகுதியில் புகையிலைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் புகையிலை நாற்றுக்களை கொள்வனவு செய்யும்போது அவை தண்டுப் புழுவின் தாக்கத்திற்கு (மொத்தி) உள்ளானவையா என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தீவுப்பகுதியில் குறிப்பாக, அனலை தீவு, கரம்பொன், நாரந்தனை, புளியங்கூடல், வேலணை ஆகிய பகுதி விவசாயிகள் தற்பொழுது புகையிலை நாற்றுக்களை நடுகை செய்து வருகின்றனர்.

இவர்களில் சில விவசாயிகள் கொள்வனவு செய்த புகையிலை நாற்றுக்கள் இத்தகைய நோயின் தாக்கத்திற்கு உட்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது என்றும் -

இதனை அடுத்தே ஏனைய விவசாயிகள் புகையிலை நாற்றுக்களைக் கொள்வனவு செய்யும்போது அவதானிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் - கூறப்பட்டது.

இவ்வாறு புகையிலைச் செய்கையில் ஈடுபடுவோர் நாற்றுக்களை தமது நாற்று மேடைகளில் இருந்தும், மண்டைதீவு, பொலிகண்டி, திக்கம் ஆகிய இடங்களில் இருந்தும் கொள்வனவு செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-16)

# நல்லின புல்லுத்துண்டம் விநியோகம்

அச்சுவேலி,டிசெ.30

கோப்பாய் பிராந்திய கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்து கால்நடை வளர்ப்போருக்கென அண்மையில் நல்லினப் புல்லுத் துண்டங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

பொலன்நறுவை கால்நடைப் பண்ணையில் இருந்து எடுத்து வரப்பட்ட "ஜி.ஓ-3" என்ற புல்லினத் துண்டங்களே இவ்வாறு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாடு, ஆடுகள் விரும்பி உண்ணக்கூடியதும், போஷாக்கு நிறைந்ததுமான ஜி. ஓ-3 புல்லினம் இலகுவாக வளரக்கூடியது என கோப்பாய் பிரதேச கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் தெரிவித்தார். (எ-11)


## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567
(சத்திரச்சந்திக்கு அண்மையில்)
(21-14)


# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24 - 10 - 1919 | 02 - 09 - 1996 |

அமரர்

## வீரன் இராஜசிங்கம்

வாழ்வுதனில் பல தடவைகள் கடந்து
செய்தொழிலால் எம்மை வாழ்வித்து
எம்மை விட்டகன்றவரே - உமை
என்றும் நாம் மறவோம்!

கருணாநிதி ச. ச. நிலையம்,
வல்வெட்டி.

குடும்பத்தினர்.

(C/32406)(34-21-14)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



மல்லாகம் - புன்னாலைக்கட்டுவன் தெற்கு
பரிமேலழகன் - உமாச்சந்திரி

தம்பதியினரின் ஏக புதல்வன் திருமாறன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (30.12.2003) செவ்வாய்க்கிழமை மல்லாகத்தில் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

திருமாறனை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, கொழும்பு மாமா மாமி, கனடா மாமா மாமி, மயூரி மச்சாள், திலாஷா மச்சாள், மல்லாகம் பெரியப்பா, பெரியம்மா, மாமாபாட்டா, பாட்டி, மகேந்திரன் பெரியப்பா, செல்வா பெரியம்மா, கொழும்பு மாமா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவரும் கல்வியில் சிறந்து சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

மேலும் மல்லாகம் பழம் பிள்ளையார், கைலாய வளவு ஞானவைரவர், புன்னாலைக்கட்டுவன் ஆயர் கடவைப் பிள்ளையார் அருளால் இவர் சகல நலன்களும் பெற்று நீடூழி வாழவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றனர்.

30 செல்வன்
12 ப.திருமாறன்
2003

7ஆம் கட்டையடி,
மல்லாகம்.

தகவல்:
திருமதி சரஸ்வதி
கனகேஸ்வரன்
அப்பம்மா.

(26365) UTHAYAN Graphics

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 - 03 - 1946 | 30 - 11 - 2003 |

திருமதி

## இராசலிங்கம் மரகதவல்லி

எமது குடும்ப ஒளிவிளக்கு மறைந்த செய்திகேட்டு நேரில் வந்து ஆறுதல்கூறி, இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (30.12.2003) செவ்வாய்க்கிழமை அமரரின் தற்காலிக இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்துக்கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.

- குடும்பத்தினர்.

(26481) (26-21-15)


## பண்டிகைக்கால அதிரடி SALE

## மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

10,11 POWER HOUSE RD, GRAND BAZAAR, JAFFNA




நவீன டிசைன்களில் பலரக சாரி வகைகள், சல்வார்கமீஸ் வகைகள், கவுண் வகைகள், சோக்கோ ரவுசர், ரவுசர் துணிவகைகள், ஜம்பர் வகைகள், சேட், Tசேட், கோட் சூட், பட்டுச்சேலைகள் என் பலவற்றின் அதிநவீன புதிய டிசைன்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

ரூபா 3000/=இற்கு மேல் கொள்வனவு செய்யும் ஆண், பெண் இருபாலாருக்கும் பொருத்தமான அழகிய Tசேட்ஸ் அன்பளிப்பாக வழங்கப்படும். இச்சலுகை 20.12.2003 - 31.12.2003வரை மட்டுமே!

SALE

MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR

இல.10.11, மின்சார நிலைய வீதி, (மலையன்கபே முன்பாக) பெரியகடை, யாழ்ப்பாணம்.

(C/32166)(21)


# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 01.08.1915 — உதிர்வு 10.01.2003

எம்மை உயர்த்தினாய்
எமது ஊரைச் சிறப்பித்தாய்
எமது ஊரில் உள்ள
ஆலயங்களுக்கு அறப்பணி செய்தாய்
தங்கள் ஆத்ம சாந்திக்காய்
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

-குடும்பத்தினர்.

தகவல்:
ந.சிவரட்ணம்
முகாமையாளர், இலங்கை வங்கி,
யாழ்ப்பாணம்.
ந.அரியரத்தினம்
அதிபர், யா/சிதம்பரக்கல்லூரி, வல்வை.
க.தங்கேஸ்வரி, ஆதிகோவிலடி.

திருமதி
## நடராசா வள்ளியம்மாள்

ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.

(26491) UTHAYAN Graphics

# மரண அறிவித்தல்

## மரியாம்பிள்ளை டெகாமிற் அமலராஜன் (நிக்சன்)

குருநகரைச் சேர்ந்த மரியாம்பிள்ளை டெகாமிற் அமலராஜன் (நிக்சன்) அவர்கள் 27-12-2003 சனிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் E.L.S.மரியாம்பிள்ளை - அந்தோனிக்கம்மாவின் அருமை மகனும் லூர்து ஞானமலரின் அன்புக் கணவரும் துஷிந்தாவின் அன்புத் தந்தையாரும் ஞானமுத்து ஞானசிங்கம் - இராஜேஸ்வரியின் அருமை மருமகனும் ராணி, கட்சன், நெல்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராஜன் காலஞ்சென்ற குணசேகரன், அமரநாதன், யாழினி, மாலினி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30-12-2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து திருப்பலிக்காக புனித யாகப்பர் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

53/3, மவுண்கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(26486) (21-14)

# இன ரீதியான முரண்பாடுகள் தோன்றுவதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகளே காரணம்

## கம்பஹா மேலதிக அரச அதிபர் யாழ்ப்பாணத்தில் கருத்து

கொக்குவில்,டிசெ.30

இனரீதியான முரண்பாடுகள் தோன்றியதற்கு தெற்கு அரசியல்வாதிகளே காரணம். சிங்கள மக்களில் 90 வீதத்திற்கு மேற்பட்டோர் நிரந்தர சமாதானம் ஏற்படுவதையே விரும்புகின்றனர்.

- இவ்வாறு அண்மையில் கம்பஹா மாவட்டத்திலிருந்து யாழ். வந்த கம்பஹா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

வடக்குத் தெற்கிற்கான நல்லெண்ணப்பாலம் என்ற திட்டத்தின்கீழ் கம்பஹா மாவட்ட அரச சேவையிலுள்ள நிர்வாகக் குழுவினர் யாழ். மாவட்டத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற வரவேற்பு வைபவத்தில் கம்பஹா மாவட்ட மேலதிக அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

1980 ஆம் ஆண்டுக்கு முன்னர் நான இருதடவைகள் இங்கு விஜயம் செய்துள்ளேன். என்னுடன் தமிழ் நண்பர்கள் படித்தனர். அப்போது நாம் எவ்வித வேறுபாடுகளும் இன்றிப் பழகினோம். தெற்கிலுள்ள அரசியல்வாதிகளே இனமுரண்பாடுகள் தோனறுவதற்குக் காரணமாவார்கள். நாம் சாதி, இன, மத பேதமின்றி எல்லோரும் இலங்கையர் என்ற ரீதியில் எமது பகைமைகளை மறந்து சமாதானத்திற்காக ஒன்றாக உழைக்கவேண்டும்.

நாம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து இங்குள்ள அரசியல்வாதிகள் எவரையும் சந்திக்கவில்லை. நேரடியாக மக்களைச் சந்தித்து இங்குள்ள நிலைமைகளைக் கேட்டறிந்தோம். மக்கள் மாவீரர் தினக் கொண்டாட்டங்களில் உணர்வுபூர்வமாக ஈடுபட்டதைக் கண்டோம். நாமும் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் சென்று பார்வையிட்டோம் - என்றார்.

கம்பஹா மாவட்ட இளைஞர் சேவைகள் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களை ஒன்று திரட்டி விரைவில் நாம் தெற்கிற்கு அழைத்துச் செல்லவுள்ளோம். இதன் மூலமாக எமது நாட்டின் இளைஞர்கள் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் இருக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும் - என்றார்.

இக்கலந்துரையாடலில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜேஎக்ஸ் செல்வநாயகம், நிர்வாக உத்தியோகத்தர் கே.மகேந்திரலிங்கம், கிராம அலுவலர் மு.விஜயரட்ணம் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

(ம-8-76-150)

# தென்னிந்தியத் திருச்சபையின் 60ஆவது ஆண்டு நிறைவு விழா

## அடுத்தமாதம் கொழும்பில் நடக்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.30

கொழும்பு தென்னிந்திய திருச்சபையின் 60ஆவது ஆண்டு விழா அடுத்தமாதம் நடைபெறவுள்ளது.


இதற்கான ஒழுங்குகளை தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி அதிவண.எஸ்.ஜெபநேசன் அடிகளார் மேற்கொண்டுள்ளார்.

அடுத்தமாதம் 23ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் இந்த நிறைவு விழா நடைபெறவுள்ளது என்றும் -

விழாவில் சிறப்புரை நிகழ்த்துவதற்கு வெளிநாடுகளில் இருந்து பேச்சாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். என்றும் - பேராயர் எஸ்.ஜெபநேசன் தெரிவித்தார்.

இந்த விழாவில், 60ஆவது ஆண்டு நிறைவு தொடர்பான மலரும் வெளியிடப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

(எ-185)



கொக்குவில் பிரம்படி சனசமூக நிலையம் புனருத்தாரணம் செய்யப்பட்டு அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. இந்த சனசமூக நிலையம் நிறுவப்படுவதற்குக் காரணகர்த்தாவாக இருந்த முன்னாள் தலைவர் க.சிவகாருண்யம் நாடாவினை வெட்டி சனசமூக நிலையத்தினைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: இணுவில் செய்தியாளர்)

# உபகரணங்கள் அன்பளிப்பு

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் குழாய் நீர் விநியோகத் திருத்த வேலைகளுக்கான உபகரணங்களை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் வித்தியாலய பழைய மாணவர் சங்கத்திடம் வழங்கியுள்ளார்.

இதேவேளை, இந்த வித்தியாலயத்திற்கு இப்பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் குழாய்க்கிணறு அமைகக் நிதி வழங்கியிருந்தது தெரிந்ததே.

(எ-117)

# ஒளிவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ். ஈச்சமோட்டை சம்றொக் அக்கடமியின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வுகள் இன்று மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்த விழாவில், புனிதவளனார் அ.ம.தி. குருமடத்தின் அதிபர் அருட்தந்தை எட்வின் வசந்தராஜா அடிகளார் பிரதம விருந்தினராகவும், யாழ். கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராசா, யாழ். சென்.ஜோசப் மகாவித்தியாலய அதிபர் எம்.ஞானப்பிரகாசம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

மறை உரையைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறும். (எ)

# எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரசாரம்; கிராமப்புற மக்களுக்கு அவசியம்

## வட்டு.மத்திய கல்லூரி அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.30

கிராமப்புற மக்கள் மத்தியில் எய்ட்ஸ நோய் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டியது அவசியம்.

இவ்வாறு தெரிவித்தார் வட்டு. மத்திய கல்லூரி அதிபர் நசபாரட்ணசிங்கி.

எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று அண்மையில் வட்டுக்கோட்டை சமுர்த்திவங்கியில் நடைபெற்றது. வங்கிமுகாமையாளர் திருமதி ச.கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில கல்லூரி அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

வறுமைநிலை காரணமாக அவர்கள் தவறான வழியில் சென்று எய்ட்ஸ் நோய்க்கு இலக்காகும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

கிராமப்புற மக்கள் வறுமைநிலை மற்றும் கல்விநிலை காரணமாக ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தடுப்பூசி ஏற்றச்செல்லும்போது புதிய ஊசிகள் கொண்டு செல்வதில்லை. இதனால், எய்ட்ஸ்நோய் உள்ள குழந்தைக்கு ஏற்றிய ஊசியை அங்கு வரும் ஏனைய குழந்தைகளுக்கு ஏற்றும் போது எய்ட்ஸ் கிருமிபரவ வாய்ப்புக்கள் அதிகமாகின்றன.

எனவே, வறுமைநிலையில் உள்ள மக்களுக்கு இத்தகைய விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படுவது மிகுந்த பயனை அளிக்கும் - என்றார்.

(எ-161)




ஊர்காவற்றுறை கரம்பொன் கிழக்குப் பகுதியில் யு.என்.எச்.சி.ஆர். மற்றும நோராட் நிறுவனங்களின் நிதியுதவியுடன் போருட் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட 17 வீடுகள் அண்மையில் உரியவர்களுக்குக் கையளிக்கப்பட்டன. இதன்போது எடுக்கப்பட்ட படம் இது. போருட் திட்ட இணைப்பாளர் வி.என்.மூர்த்தி, போருட் திட்ட முகாமையாளர் எம்.எய்றின் றொட்செற், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், போருட் சமூக அபிவிருத்திக்கான திட்ட உத்தியோகத்தர் க.குணேந்திரதாசன் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

(படம் : ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)

# ஜனாதிபதி- பிரதமர் இடையிலான முரண்பாட்டைத் தீர்ப்பதற்குக் குழு

## இந்தியப் பிரதமர் தலைமையில் வருகிறது

கொழும்பு,டிசெ.30

ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையில் நிலவும் முரண்பாட்டைத் தீர்ப்பதற்கென இந்திய அரசியல்வாதிகளைக் கொண்ட குழுவொன்று அடுத்த மாதம் கொழும்பு வருகைதரவுள்ளதாக இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் வருகைதரவுள்ள இந்தக்குழுவில் பாரதிய ஜனதாக் கட்சியினதும், இந்தியகாங்கிரஸ் கட்சியினதும் உறுப்பினர்கள் இடம்பெறவுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகவும், நிறைவேற்று அதிகாரத்திற்கும் அரசமைப்புக்கும் இடையில் நிலவும் சிக்கலைத தவிர்ப்பது தொடர்பாகவும் இக்குழுவினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் பேச்சுநடத்துவர்.

(எ-8)

# யாழ். சமூகத்தின் கல்விச்சிந்தனை இன்னமும் மாற்றம் பெறவில்லை

## செய்தியாளர் செயலமர்வில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ். சமூகத்தின் மனப்பாங்கில் கல்வி ரீதியான சிந்தனை இன்னமும் மாற்றமடையவில்லை. தமது பிள்ளைகள் டாக்டர்களாகவும், பொறியியலாளர்களாகவும் வரவேண்டும் என்றே பெற்றோர்கள் இப்பொழுதும் எண்ணிக் கொள்கிறார்கள்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக நடனத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராசா.

மாவட்டத்தில் உள்ள பிரதேச செயதியாளர்களுக்கான செயலமர்வு அண்மையில் யாழ். பல்கலைக் கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பேராசிரியர் சபா.ஜெயராசா அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தற்பொழுது கணனி, தொடர்பாடல என்று காலத்தின் தேவைக்கேற்ப சமூகம் மாறுதல் அடைந்து வருகிறது. இதனைக் கருத்திற்கொண்டு இனி வரும் காலங்களிலாவது மாற்றங்களை உணர்ந்து புதுயுகத்திற்கு ஏற்ப யாழ்ப்பாண சமூகம் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

யாழ் பல்கலைக்கழகத்தின் ஊடாக தொடர்பியல் துறையில் டிப்ளோமா, பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு போன்றவற்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம் - என்றார்.

இச்செயலமர்வில் தமிழகத்தின், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் தொடர்பியல் துறைத் தலைவர் பேராசிரியர் வைநடராஜன் கலந்துகொண்டு தொடர் விரிவுரை நிகழ்த்தினார்.

(எ-10-185)

# அகதி வாழ்வின் 5 ஆம் ஆண்டில் அடிவைக்கும் மக்களின் அவலம்

யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரியின் தெற்கே பூநகரி - கேரதீவு குடாக கடல் வரையான பகுதியில் அமைந்துள்ள கிராமங்கள் தனங்களப்பு, மறவன் புலோ, கைதடி - நாவற்குழி ஆகியனவாகும்.

மூன்று கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட இப்பகுதியில் யுத்தப பேரழிவுகளுக்குப் பின்னர் அறுநூறு குடும்பங்கள் வாழ்ந்தன. ஐயாயிரம் ஏக்கர் நெல்வயல்களும், ஆயிரம் ஏக்கர் வரையான தென்னை, பனம் தோட்டக்களும் கொண்ட இப்பிரதேசத்தில் முழு வருமானத்தை மட்டுமே நம்பி வாழ்ந்தவர்கள் இங்கு வாழ்ந்த தொண்ணூறு வீதமான மக்கள்.

தென்மராட்சியின் தெற்குப் பகுதியில் உற்பத்தியாகும் நெல்லும் தேங்காயும் வடபகுதியில பெருமளவு தேவையைப் பூர்த்தி செய்து வந்தமை யாவரும் அறிந்ததே.

இவ்வூர்கள் இருபுறமும் குடாக்கடல், கரையோரம் தென்னை, பனம் தோப்புக்கள், விசாலமான இயற்கைச் சூழலில் அமைந்த இல்லங்கள், பசும் புல்லை உண்டு பால் சொரியும் கால்நடைகள், மழை பொழிந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டாலும், சூறாவளி அடித்து கூதல் பனி பொழிந்தாலும், காலநிலை மாறி அடித்தாலும் மனம் கலங்காது, வந்தோரை வரவேற்று உபசரிக்கும் உயரிய மனப்பாங்குடன் வாழ்ந்திட்ட மக்கள் கதிர் முற்றிய நெல் மணிகளைக் கண்ட களனிகள், 42 இந்து ஆலயங்கள், மூன்று கல்விநிலையங்கள் என ஊரைவிட்டு நீங்காது உறுதியுடன் வாழ்ந்து வந்தவர்கள் இப்பகுதி மக்கள். இவர்கள் வாழ்வில் யுத்தம் பேரிடரை விளைவித்தது. 11-12-1999 இல் திடீரென இங்கு ஆரம்பமான யுத்தத்தினால் இக்கிராம மக்கள் இடம் பெயர நேரிட்டது. எந்தப் பொருளையும் எடுத்துச்செல்ல முடியாத நிலையில் வெளியேறிய மக்கள் இந்த மாதத்துடன் நான்காம் ஆண்டைக் கடந்து அகதி வாழ்வின் ஐந்தாம் ஆண்டிற்குள் அடிவைக்கிறார்கள்.




கடந்த நான்கு ஆண்டுகளாக இம்மக்கள் பட்ட கஷ்டங்கள், துன்பதுயரங்கள், வேதனைகள் அளவிடமுடியாதவை. வெளிநாட்டில் உறவுகளைக் கொண்ட ஒருசிலரைத் தவிர ஏனைய அனைவருமே தற்போது பெரும் சோதனைகளையும், கஷ்டங்களையும் அனுபவித்து வருகிறார்கள்.

இதுவரை இவர்களுக்கு எந்த நிறுவனங்களின் உதவிகளோ வேறு எந்த ஆதரவுகளோ போதுமான அளவில் வழங்கப்படவில்லை. அரசினால் வழங்கப்படும் நிவாரணம் மட்டும் தான் ஓரளவு கைகொடுத்து வருகிறது.

தனங்கிளப்பு மறவன்புலோவின் தெற்கே உள்ள பூநகரிக்கு இடையே உள்ள குடாக்கடலில் மீனவர்கள் மீன் பிடிக்கிறார்கள். ஆனால், இவர்களின் கிராமங்களுக்குச் செல்லத் தடைவிதித்து அவை உயர்பாதுகாப்பு வலயம் என்கிறது பாதுகாப்புப்படை.

இது குறித்து ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மகஜர்கள் அனுப்பப்பட்டன. ஆனால், இதுவரை இக்கிராமங்களுக்குச் சென்று குடியமர அனுமதி கிட்டவில்லை. உயர்பாதுகாப்பு வலயம் எனக் காரணம் சொல்லி இராணுவ நலன்கள் மட்டுமே பேணப்பட்டு மனித உரிமைகள் தடுக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும், கண்காணிப்புக் குழுவிடமும் கூட முறையிடப்பட்டது. ஆனால் இதனால் பயன்தான் இல்லை.

**மாணிக்க லீலாவிநோதன்**

நான்கு ஆண்டுகள் முடிந்த இந்நிலையில் எதிர்வரும் தைப்பொங்கலுக்காவது எமது இல்லம் செல்ல கடவுள் அருள்புரிவாரா என ஏங்குகிறார்கள் இப்பகுதி மக்கள். ★

## பிற்போடப்பட்டுள்ளது

வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் 01.01.2004இல் நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களினால் எதிர்வரும் 01.02.2004 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

- *செயலாளர்.*

*கிராமிய வைத்தியசாலை வட்டுக்கோட்டை,*
*அபிவிருத்திச் சங்கம்.*

(C-32421)(32-16-18-31)



## Jaffna College Retreat

Date: Saturday 3rd. January, 2004
Venue : Ottley Hall

9.30 a.m. Opening Devotion
10.00 a.m. Retreat - Rev.Dr.Daniel. S.Thiagarajah
1.00 p.m. Fellowship Lunch.

The entire staff of Jaffna College and Uduvil Girls College are Kindly requested to be present at the Retreat. Please note the change of date.

29th. December,2003

Principals,
Jaffna College & Uduvil Girls College.

(C/32417)(35-16-18-31)



## யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்
## முன்னாள் ஊழியர்களுக்கு அறிவித்தல்

சங்கத்தின் வருங்கால நிலைவரத்தைப் பற்றித் தீர்மானிக் கவும், அத்தோடு எமது சங்கத்தின் ஊழியர்களின் நலனைப்பற்றி ஆலோசிக்கவும் பங்காளர்களின் விசேட கூட்டம் ஒன்று கூட்டு வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. 09.04.84இற்கு பின்னர் இளைப்பாறிய ஊழியர்கள் கீழ்க்காணும் விவரங்களை எனது விலாசத்திற்கு இரண்டு வாரத்துக்குள் அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

1. முழுப்பெயரும் விலாசமும் :..................
2. வயது :..................
3. இளைப்பாறிய திகதி :..................
4. இளைப்பாறிய போது வகித்த பதவி:..................
5. சேவை வெகுமதி கொடுக்கப்பட்டதா? (GRATUITY)
6. தங்கியிருப்பவர்களின் (DEPENDENTS)
   விவரம்:...............
   பெயர்:...............
   வயது:...............
   எப்படிச் சொந்தம்:...............
   செய்யும் தொழில்:...............
7. சங்கத்தில் இருந்து வரவேண்டிய கொடுப்பனவு ஏதேனும் உண்டா? அப்படியாயின் விவரம்:............

29. 12. 2003.

Dr.V. யோகநாதன்,
முன்னாள் தலைவர்,
178,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(26506)(26-16-18-31)


## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

தோற்றம்:
12.07.1940



மறைவு:
30.11.2003

### அமரர் திருமதி மனோன்மணி வெற்றிவேலாயுதம்

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு என்றும் மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வத்தின் 31ஆம் நாளில் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.
உங்கள் இழப்பு ஈடுசெய்ய முடியாதது.
ஓம் சாந்தி!

எமது குடும்பவிளக்கு அணைந்த செய்தி கேட்டு நேரிலும், தபால், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறி தேறுதல் பகிர்ந்தவர்களுக்கு எம் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
த. அருணகிரிநாதன்.

- அன்புத் தாயார், கணவர்,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(சி-32332)(31-16-18)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா சங்கரப்பிள்ளை

மயிட்டபுரம், சாயுடையைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கு, வன்னியசிங்கம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா சங்கரப்பிள்ளை அவர்கள் நேற்று (29.12.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும் செல்வராசா, பரமேஸ்வரி, பாலசுப்பிரமணியம் சந்திரவதனா ஆகியோரின் அன்புத் தாயாரும் சின்னத்தம்பி (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கிளிநொச்சி), ரமணி, திரவியம், பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் முகுந்தன் (ஜேர்மனி), கஜனன், நிமலன் (கூட்டுறவுப் பரிசோதகர், யாழ்ப்பாணம்), கமலன், துஷியந்தினி, பிரியதர்ஷினி, பிரஷாந்தினி, ஜீவனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2003) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எ.சின்னத்தம்பி
(கூ.அ.உ.ஆணையாளர்-மருமகன்)
ச.பாலசுப்பிரமணியம்
(சின்ராசு - மகன்)

*வன்னியசிங்கம் வீதி,*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

(26524)(12-16-18-31)

## வாசிகசாலையை மீண்டும் இயக்க நடவடிக்கை

வலி.வடக்கு,டிசெ.30

திருநெல்வேலி சிவன் வீதியில் உள்ள சிவசக்தி வாசிகசாலையை மீண்டும் இயங்கச் செய்வதற்கான பணிகளை அந்தப் பகுதி மக்கள் முனனெடுத்துள்ளனர்.

இந்த வாசிகசாலை கடந்த சில வருடங்களாக இயங்கவில்லை.

இதனைப் புனரமைப்புச் செய்வது குறித்துக் கடந்த வாரம் கலந்துரையாடல் ஒன்றும் நடத்தப்பட்டது.

இந்தப் பகுதியில் கரப்பந்தாட்டத்தில் முன்னணியில் இருந்த கழகங்களில் ஒன்றான சிவன் விளையாட்டுக்கழகமும் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-86)

## விளையாட்டு போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

வலி.வடக்கு,டிசெ.30

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சினால் யாழ். மாவட்ட மட்டத்தில் நடத்தப்படவுள்ள கூடைப்பந்தாட்டம், ஹொக்கி, மேசைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி போட்டிகள் திறந்த போட்டிகளாக நடத்தப்படவுள்ளன. இவற்றில் கலந்துகொள்ள விரும்பும் குழுக்களையும் மற்றும் விளையாட்டுக் கழகங்களையும் தத்தமது பகுதி விளையாட்டு உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொள்ளும்படி யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (ஒ-86)

## உடற்கல்விச் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.30

உடற்கல்வி டிப்ளோமாதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நீராவியடி பிறைற்மன் கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

ஆசிரியர் சேவைக்கு உடற்கல்வி டிப்ளோமாதாரிகளை உள்வாங்கும் விடயம் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட அனைவரையும் இதில் தவறாது கலந்துகொள்ளுபடி உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் வேண்டுகோள்விடுத்துள்ளது. (ஒ)

## சூறாவளி நஷ்டஈடு வழங்கப்பட்டது

தென்மராட்சி,டிசெ.30

தென்மராட்சிப் பிரதேசத்தில் இவ்வருடம் வீசிய சூறாவளியில் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு நேற்று நஷ்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

பிரதேசச் செயலர் செ.ஸ்ரீநிவாசன் முன்னிலையில் யாழ். செயலக உத்தியோகத்தர்களால் இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த எட்டுப் பயனாளிகளுக்கு 87 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## நாவாந்துறையில் பணம், நகை திருட்டு!

வலிவடக்கு,டிசெ.30

நாவாந்துறைப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

நாவாந்துறை பீச் றோட்டைச் சேர்ந்த ஆசீர்வாதம் இம்மானுவேல் என்பவரது வீட்டில் அண்மையில் ஓடு பிரித்து இறங்கிய திருடர்கள் பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும், ஒரு தொகுதி பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் திருட்டில் ஈடுபட்டோர் தம்முடன் எடுத்துவந்த கைக்குண்டு ஒன்றை வீட்டில் விட்டுச் சென்றுள்ளனர் என்றும் கூறப்பட்டது. (எ-86)

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி,டிசெ.30

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய மகோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

ஜனவரி 6ஆம் திகதி தேர் உற்சவமும், 7ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ம-31-117)

★ ★ ★

குருநகர்,டிசெ.30

யாழ் மரியன்னை ஆலயத்தில் நாளை இரவு 11.45 மணிக்கு புத்தாண்டுத் திருப்பலி ஆரம்பமாகவுள்ளது. யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை இத்திருப்பலியை நிறைவேற்றுவார்.

தொடர்ந்து வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கும், 8.30 மணிக்கும் திருப்பலிகள் இடம்பெறும். (எ-51)

## 60ஆவது பிறந்தநாள் வாழ்த்து

30-12-2003

HAPPY



BIRTHDAY

### செல்வி குகனேசமலர் பொன்னுத்துரை

(உரும்பிராய் இந்துக்கல்லூரி பிரதி அதிபர், B.A. (Hons) Dip.in.Ed.S.L.T.S I)

அகவை அறுபதில் தனது பாடசாலையின் சேவை வாழ்க்கையில் இருந்து ஓய்வுபெறுவதோடு, இன்று பிறந்த நாளையும் கொண்டாடும் இவரை சீரும் சிறப்புடனும் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்தும் நெஞ்சங்கள்,*
*உறவினர்கள்.*

(26513)(32-16-18--31)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவக்கொழுந்து ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அச்சுவேலி, தோப்பைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து ஆறுமுகம் நேற்று (29.12.2003) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் (ஓய்வுபெற்ற பொலீஸ் அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி சுகிர்தராணி சயனொளிபவன் (ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை), திருமதி இந்திராணி தயாகுணரட்ணசிங்கம் (ஆசிரிய ஆலோசகர், வவுனியா), தெய்வேந்திரன் (பொறியியலாளர், லண்டன்), சிவஞானம் (கணக்காளர், லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச.முகுந்தன் (பேரன்).

*"வசந்தம்",*
*இராசவீதி, தோப்பு, அச்சுவேலி.*

(26503)(34-16-18-31)

### நடேசர் சிவசோதி

(ஓய்வுபெற்ற பதவிநிலை உத்தியோகத்தர் - வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலகம்)

மாவியவத்தை, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடேசர் சிவசோதி அவர்கள் நேற்று (29.12.2003) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசர் - தங்கம்மா ஆகியோரின் அன்பு மகனும் கெங்காதேவியின் அன்புக் கணவரும் சிவகெங்காதரனின் (தொழில் நிறுவன மேம்படுத்தல் முகாமையாளர், கைத்தொழில் அபிவிருத்திச் சபை) அன்புத் தந்தையும் ஜெயந்தியின் அன்பு மாமனாரும் பானுஹரன், உமாதரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற கமலாதேவி, சிவநேசன் ஆகியோரின் சகோதரரும் இராசகுலசிங்கம் (வயித்திலிங்கம் அன் சன்ஸ்), கிருஸ்ணபகவான், மல்லிகாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2003) செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாவியவத்தை வீதி,*
*சங்கானை.*

தகவல்:
சி.சிவகெங்காதரன் (மகன்)

(26507)(31-16-18)

### முதலித்தம்பி செல்லத்துரை

(இளைப்பாறிய பொலீஸ் மற்றும் கணக்காளர் பூரணம் மில். மீசாலை)

மீசாலையைச் சேர்ந்த முதலித்தம்பி செல்லத்துரை அவர்கள் நேற்று (29.12.2003) திங்கட்கிழமை இறையடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் மீசாலையூர் காலஞ்சென்றவர்களான முதலித்தம்பி - சேதுப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும் கல்வயல் புராண ஆசிரியர் அப்பாக்குட்டி சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் விஜோதினி, சாந்தினி, சாந்தகுமாரன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் ஜெயயோகன், சிவபாலன், கௌரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஈச்சமோட்டை இளைப்பாறிய ஆசிரியர் சண்முகவடிவேல் தம்பதிகளின் சம்பந்தியும் இரத்தினபூபதி, காலஞ்சென்ற விசாலாட்சி ஆகியோரின் அருமை அண்ணாவும் பிரசாத் பிரதீப, பிரகாஸ், அருந்தா, வைகரன், நிஷாந்தன், நிரோஷன், பார்த்தன், டினேஷன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் கல்வயல் அப்பாக்குட்டி செல்வராசாவின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கண்டி வீதி,*
*மீசாலை.*

தகவல்:
செ.வள்ளியம்மை (மனைவி),
அ.செல்வராசா (மைத்துனர்).

(26509)(31-16-18)

### வேலுப்பிள்ளை கந்தசாமி

பிரம்படி லேன், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் துர்க்கையம்மன் கோயிலடியையும் அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கையும் வசிப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி அவர்கள் நேற்று (29.12.2003) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான வேலுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் அமரர் நாகம்மாவின் அன்புக் கணவரும் சிவகுமாரின் (ஜேர்மனி) அன்புத் தந்தையும் மீனாவின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும் சகானாவின் (ஜேர்மனி) அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (31-12-2003) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி லேன்,*
*திருநெல்வேலி கிழக்கு.*

தகவல்:
சிவகுமார் (மகன் - ஜேர்மனி)
தனிநாயகம் (டிங்கர் ரஞ்சன்)

(26511)(32-16-18-31)




# மிகக் கொடூரமான பூமியதிர்ச்சிகள்

— தாரணி

கடந்த நூறு வருடங்களில் ஏற்பட்ட பூமியதிர்ச்சிகளால் ஆயிரக் கணக்கான மக்கள் தங்கள் இன்னுயிர்களை இழந்துள்ளார்கள்.

பூமியதிர்ச்சிகளால் இறப்போர் எண்ணிக்கையை தொழில்நுட்ப முன்னேற்றங்களால் சிறிதளவே குறைக்கமுடிந்தது.

கீழேதரப்பட்டுள்ள விவரங்களை ஒருமுறை உற்றுநோக்கின், பூமியதிர்ச்சியின் கோரத்தாண்டவத்தை நன்கு உணரமுடியும்.

(1) 1906 ஏப்ரல் 18:
தொடராக ஏற்பட்ட கடுமையான அதிர்ச்சிகளால் சான்பிரான் ஸிஸ்கோ தாக்கப்பட்டது. ஒரு நிமிடம் வரை நீடித்த அதிர்ச்சி 700 தொடக்கம் 3000 வரையிலான மக்களின் உயிரைப் பறித்தது. இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் கட்டட இடிபாடுகளில சிக்கி அல்லது தொடர்ந்து ஏற்பட்ட தீயினால் கருகி இறந்தார்கள்.

(2) 1923 செப்ரெம்பர் 1:
டோக்கியோவிற்கு வெளியே சிறிது தூரத்தில் மையம் கொண்டிருந்த 'த கிரேட் கன்டோ' என அழைக்கப்பட்ட பாரிய பூமியதிர்ச்சி ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் 'பலி கொண்ட மனித உயிர்களின் எண்ணிக்கை 142,800 ஆகும்.

(3) 1935:
ரிச்டர் அளவில் 7.4 எனப்பதிவுசெய்யப்பட்ட பூமியதிர்ச்சி தாய்வானில் 3 ஆயிரத்து 276 பேரைப் பலிகொண்டது.

(4) 1948 ஜுன் 28:
கிழக்கு சீனக்கடலில் தனது மையத்தைக் கொண்டிருந்த "பூக் உய்' எனப்பட்ட அதிர்ச்சி ஜப்பானின் மேற்குப் பிரதேசத்தைத் தாக்கியது. அப்பூமியதிர்ச்சியால் இறந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 770.

(5) 1960 மே 22:
ரிச்டர் அளவில் 9.5 எனப் பதிவுசெய்யப்பட்ட பூமியதிர்ச்சியே, உலகில் இதுவரை ஏற்பட்ட அதிர்ச்சிகளில் மிகப்பலமானதாகும். இது சிலியில் ஏற்பட்டது. அதிர்ச்சியின் போது 30அடி (10மீட்டர்) உயரத்திற்கு எழுந்த 'சுனாமி' எனப்படும் பிரமாண்டமான கடலலை சிலியில் சில கிராமங்களையே முழுவதும் துடைத்தெறிந்த தோடல்லாமல் நூற்றுக் கணக்கான மைல்களுக் கப்பால் இருக்கும் ஹவாய்த்தீவில் 61பேரின உயிர்களையும் பறித்தது.





(6) 1964 மார்ச் 27:
ரிச்டர் அளவில் 9.2 எனக் காட்டிய பூமியதிர்ச்சி அலாஸ் காவில் 25 பேரைக் கொன்றது. அப்பூமியதிர்ச்சியின் விளைவாகத் தோன்றிய சுனாமியலை மேலும் 110 பேரைப் பலிகொண்டது.

(7) 1976ஜுலை 28:
சீனாவின் டங்ஸான் நகரில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி அந்நகரையே ஒரு குப்பை மேடாக்கியது. அதில் இறந்தவர்களின் எண்ணிக்கையோ 5 லட்சம்.

(8) 1980 நவம்பர் 23:
இத்தாலியின் தென் பகுதியில் உருவான பூமியதிர்ச்சியால் நூற்றுக்கு அதிகமானவர்கள் இறந்து போனார்கள்.

(9) 1985 செப்ரெம்பர் 19:
மெக்ஸிக்கோ நகரில் ஏற்பட்ட பாரிய பூமியதிர்ச்சி அந்நகரையே உலுக்கியது; கட்டடங்களைத் தரைமட்டமாக்கியது; 10 ஆயிரம் உயிர்களைக் காவுகொண்டது.

(10) 1988 டிசெம்பர் 7:
வடமேற்கு ஆர்மேனியாவில் இடம்பெற்ற பூமியதிர்ச்சி ரிச்டர் அளவில் 6.9 எனப் பதிவாகியது. ஆர்மேனியாவில் பலத்த சேதத்தை விளைவித்த இது 25 ஆயிரம் பேரின் உயிர்களுக்கு உலை வைத்தது.

(11) 1989 ஒக்ரோபர் 17:
லோமா பிரியேட்டா என்றழைக்கப்பட்ட பூமியதிர்ச்சியால் கலிபோர்னியாவில் 58 பேர் கொல்லப்பட்டார்கள்.

(12) 1990ஜுன் 21:
ஈரானின் வடக்குப் பகுதியிலிருக்கும் கிலான் மாகாணத்தில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியால் ஏறக்குறைய 40 ஆயிரம் பேர் கொல லப்பட்டார்கள்.

(13) 1993 செப்ரெம்பர் 30:
இந்தியாவின் மேற்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் இடம் பெற்ற பூமியதிர்ச்சியால் 10 ஆயிரம் கிராமத்தவர்கள் கொல்லப் பட்டார்கள்.

(14) 1994 ஜுன் 6:
கொலம்பியாவைத் தாக்கிய பூமியதிர்ச்சியாலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலச்சரிவினாலும் ஏறக்குறைய 1000 பேர் கொல்லப்பட்டார்கள்.

(15) 1995 ஜனவரி 17:
ஜப்பானின் கோபே நகரைத் தாக்கிய ஹையோகோ எனப்பட்ட பூமியதிர்ச்சியால் 6 ஆயிரத்து 430 பேர் கொல்லப்பட்டார்கள்.

(16) 1995 மே 27:
தூரகிழக்குத் தீவான சக்ஹாலின்னைத் தாக்கிய பாரிய பூமியதிர்ச்சி ரிச்டர் அளவில் 7.5 எனப் பதிவாகியது. இதனால் ஆயிரத்து 989 ரஷ்யநாட்டவர்கள் கொல்லப்பட்டார்கள்.

(17) 1997 பெப்ரவரி:
வடமேற்கு ஈரானின கிராமப்புறங்களில் பெரும் சேதத்தை விளைவித்த 5.5 என அளவிடப்பட்ட பூமியதிர்ச்சிக்கு இரையானவர்களின் எண்ணிக்கை ஆயிரம். மூன்று மாதங்களின் பின்னர் 7.1 எனப் பதிவாகிய பலமான பூமியதிர்ச்சி கிழக்கு ஈரானில் ஆயிரத்து 560 பேரைப் பலிகொண்டது.

(18) 1997 மே:
கிழக்கு ஈரானிலுள்ள பேர்ஜான்ட் என்ற இடத்தில் இடம்பெற்ற 7.1 அளவிலான பூகம்பத்தால் ஆயிரத்து 600இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டார்கள்.

(19) 1998 மே 30:
பலமான பூகம்பத்தால் தாக்கப்பட்ட வடக்கு ஆப்கானிஸ்தானில கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரம் ஆகும்.

(20) 1998 ஜுன் 26:
தென்கிழக்குத் துருக்கியிலமைந்துள்ள அடானா என்ற இடத்தில் இடம்பெற்ற பூமிநடுக்கத்தின் அளவு 6.3. இதனால் 144 உயிர்கள் பலியாகின. அப்பூகம்பத்தைத் தொடர்ந்து ஒரு வாரத்தின் பின்னர் அதே இடத்தில் ஏற்பட்ட இரண்டு பலமான பின் விளைவு அதிர்ச்சிகளால் ஆயிரத்திற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

(21) 1998 ஜுலை 17:
கடலின் அடியில் ஏற்பட்ட பூகம்பத்தின் விளைவாக உருவான இராட்சதக் சுனாமி அலையினால் அள்ளுண்டு மாண்டவர்கள் ஆயிரத்திற்கும அதிகம். பப்புவா நியூ கினியின் வடமேற்கு கடற்கரையோரத்திலேயே இது இடம்பெற்றது. அப்பிரதேசத்தில வாழ்ந்துவந்த பழங்குடிகள் பிரிவைச் சேர்ந்த சமுதாயத்தினரே இப்பயங்கர அலையினால் விழுங்கப்பட்டு அழிந்துபோனார்கள்.

(22) 1999 ஜனவரி 25:
ரிச்டர் அளவில் 6.0 எனப் பதிவாகிய பூமிநடுக்கம், கொலம்பியாவின் ஆர்மேனியா நகரில் 1000பேர் வரை கொல்லப்படுவதற்குக் காரணமாகியது.

(23) 1999 மார்ச் 29:
வடஇந்தியாவின் உத்தர் பிரதேசத்தில் ஏற்பட்ட இருவேறு பூமிநடுக்கங்களில் 100 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டார்கள்.

(24) 1999 ஒகஸ்ட் 17:
ரிச்டர் அளவில் 7.4 எனக் கணக்கிடப்பட்ட பூகம்பம், துருக்கியின் இஸ்மிட் மற்றும் இஸ் தான்புல் நகரங்களை குலுங்கவைத்தது. இப்பூகம்பத்தால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 17 ஆயிரமாக இருந்த அதேவேளை, காயப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகம் எனக் கணக்கிடப்பட்டது.

(25) 1999 செப்ரெம்பர் 21:
தாய்வானில் ஏறக்குறைய 2 ஆயிரத்து 500 பேர் கொல்லப்படக் காரணமாகவிருந்த பூகம்பம், ரிச்டர் அளவில் 7.6 எனப் பதிவாகியது. அத்தீவின் அனைத்து நகரங்களும் இதனால் பாதிப்படைந்தன.

(26) 2001 ஜனவரி 13:
எல்சல்வடோரைப் பலமாகத் தாக்கிய பூமி நடுக்கத்தால் 700 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டார்கள். ரிச்டர் அளவு இவ்வதிர்ச்சியை 7.6 எனக் காட்டியது.

(27) 2001 ஜனவரி 26:
ரிச்டர் அளவில் 7.9 எனப்பதிவு செய்யப்பட்ட பூகம்பம், வடமேற்கு இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் பெரும்பகுதிகளில் கடும் சேதங்களை விளைவித்தது. இதில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரம் எனக் கணக்கிடப்பட்டது. இப்பூகம்பம் 10 லட்சத்திற்கும் அதிகமானவர்களை வீடற்றவர்களாக்கியது. கடுமையாகப் பாதிக்கப்பட்ட நகரங்களில் பூஜ் மற்றும் அகமதாபாத் நகரங்கள் முக்கியமானவை.

(28) 2001 பெப்ரவரி 13:
ஒரு மாத காலத்தில் இரண்டாவது தடவையாக மீண்டும் எல்சல்வடோரைத் தாக்கிய பூகம்பகத்திற்கு 300 பேர் இரையானார்கள். இதன் அளவு 6.6 ஆகும்.

(29) 2001 ஜுன் 24:
ஒரு நிமிடத்திற்குமதிகமாக நீடித்த பூகம்பம், பெருநாட்டின் தென்பகுதியில் குறைந்தது 47பேரைப் பலிகொண்டதுடன் பலரைக் காயப்படுத்தியது. ரிச்டரில் இதனளவு 7.9.

(30) 2002 பெப்ரவரி 3:
பூகம்பத்தின் அளவு 6.0. அது தாக்கிய இடம் துருக்கியின் தென் பகுதி. பலிகொண்ட மனித உயிர்கள் ஏறக்குறைய 43. அது வீடற்றவர்களாக்கியது ஆயிரத்துக்கும் அதிகமானவர்களை.

(31) 2002 மார்ச் 3:
ஆப்கானிஸ்தானின் சமன்கான் மாகாணத்தில் தனது மையத்தைக் கொண்டிருந்த பூமியதிர்ச்சி அங்கு 150 பேரைப் பலி கொண்டது. ரிச்டர் அளவு இதற்கு 7.2 என வாசிக்கப்பட்டது.

(32) 2002 மார்ச் 25:
ஒரு மாதத்தில் இரண்டாவது முறையாக ஆப்கானிஸ்தானைத் தாக்கிய பூகம்பத்தால் அந்நாட்டின் வடபகுதியில் குறைந்தது 800 பேர் உயிரிழந்தார்கள். இப்பூகம்பத்தின் அளவு ரிச்டரில் 6.0.

(33) 2002 ஏப்ரல் 12:
இருமாதங்களில் ஆப்கானிஸ்தானின் [illegible] பகுதியைத் தாக்கிய மூன்றாவது பெரிய நடுக்கத்தால் [illegible] உயிரிழந்தார்கள்.

(34) 2002 ஜுன் 22:
ரிச்டர் அளவில் 6.3 எனப் பதிவாகிய பூமியதிர்ச்சி மேற்கு ஈரானின் காஸ்வின் மற்றும் ஹமெடான் பிரதேசங்களைச் சேர்ந்த 235 பேரைக் காவுகொண்டது.

(35) 2002 ஒக்ரோபர் 31:
இத்தாலியின் தென்பகுதிக் கிராமமொன்றில் ஏற்பட்ட பூமி நடுக்கத்தால் பாடசாலைக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் ஒரு வகுப்பைச் சேர்ந்த அனைத்து சிறுவர்களும் நசுங்குண்டு இறந்துபோனார்கள்.

(36) 2002 நவம்பர் 21:
வடக்கு பாகிஸ்தானின் தியாமிர் மாவட்டத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியால் 20இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டார்கள்.

(37) 2003 பெப்ரவரி 24:
சீனாவின் மேற்குப் பகுதியிலுள்ள க்ஸிங்ஜியாங் பிரதேசத்தில் ஏற்பட்ட நடுக்கத்தால் 260 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததுடன் 10 ஆயிரம் வரையிலான வீடுகளும் அழிவடைந்தன.

(38) 2003 மே 1:
தென்கிழக்குத் துருக்கியில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியால் ஒரு கட்டடம் இடிந்து விழுந்ததில் அதனுள் உறங்கிக் கொண்டு [illegible] 160 பேர் உயிரிழந்தார்கள். இதில் 87 குழந்தைகளும் அட[illegible]

(39) 2003 மே 21:
இருபது ஆண்டுகளில் அல்ஜீரியாவில் ஏற்பட்ட மிகமோசமான பூமியதிர்ச்சி இதுவாகும். ஸ்பெயின் வரை உணரப்பட்ட இவ்வதிர்ச்சியால் 2 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் இறந்தார்கள். இதில் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்திற்கும் அதிகமாகும்.

(40) 2003 டிசெம்பர் 26:
மேலே தரப்பட்ட சோக நிகழ்வுகளை மீண்டுமொரு முறை நினைவுகூர வைத்த 6.7 ரிச்டர் அளவிலான இப்பாரிய பூகம்பம், ஈரானின் தென்கிழக்கு மாகாணமான கேர்மனில் சரித்திரப் பிரசித்திபெற்ற புராதன நகரான பாமை (Bam) ஏறக்குறைய முழுமையாகவே நிர்மூலமாக்கிவிட்டது. பல கட்டடங்கள் இடிந்து மண்ணோடு மண்ணாகிவிட்டன. பூமித்தாயின் அகோரப்பசிக்கு இரையானோர் எண்ணிக்கை 70 ஆயிரம் வரை இருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. காயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதைவிட அதிகமாக இருக்கலாம். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஈரானில் அடிக்கடி பூகம்பங்கள் நிகழ்ந்து வருவதை இவ்வட்டவணையிலிருந்து அவதானிக்க முடிகிறது. பூகோள ரீதியில் பூகம்பங்கள் அடிக்கடி நிகழும் பிரதேசத்தில் ஈரான் அமைந்திருப்பதே இதற்கான காரணம் எனலாம்.

## கண்ணீர் அஞ்சலி



இலங்கைவங்கியின் வடபிராந்திய
உதவிப் பொதுமுகாமையாளர்
திரு.க.பாலசுப்பிரமணியம்
அவர்களின் அன்பு மனைவியார்
**திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம்**

அவர்கள் நேற்று (29.12.2003) திங்கட்கிழமை காலமானதையிட்டு, அன்னாரின் பிரிவால் வருந்தும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திரு.சி.பிரதீபன்,
படை அத்தியட்சகர், யாழ்ப்பாணம்.
*சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ்.*
(26527)(12-18-32)

## குடும்பச் சண்டையில் சிப்பாய் மரணம்!

மாத்தளை, மாதலாபிட்டி பகுதியில் இரு குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகி பலியானார். இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ளது. மோதலின் போது இராணுவ வீரர் ஒருவரே கொலலப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அருகருகே வீடுகளில் உள்ள அயலவர்களுக்கிடையில் நீண்ட காலமாக இருந்து வந்த பகைமையே இந்த மோதலுக்குகாரணமெனத் தெரிய வருகின்றது. சந்தேகத்தின் பேரில் இருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## வீதியோரக் கற்கள் போக்குவரத்திற்கு இடையூறு

ஏழாலை மேற்கு இலங்கையர் கோன் வீதியைத் திருத்தும் பணிக்கென இரண்டு மாதங்களுக்கு முன்னர் வீதியின் ஓரங்களில் கற்கள் குவிக்கப்பட்டன. ஆனால், இதுவரை வீதி திருத்தப்படவில்லை. வீதியோரம குவிக்கப்பட்ட கற்களால் தற்போது போக்குவரத்தில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இந்த வீதி விவசாய நிலங்கள் ஊடாகச் செல்கிறது. தற்போது இவ் வீதியில் இரு புறங்களும் கற்கள் குவிக்கப்பட்டுள்ளதால், தோட்ட நிலங்களுக்குச் செல்லும் வாகனங்கள் வேறு இடங்கள் ஊடாகச் சுற்றி வரவேண்டியுள்ளது. (ஓ-45)

## பொதுக்கூட்டம்

கைதடி,டிசெ.30

கைதடி மத்தி வள்மதி சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அடுத்த மாதம் 4 ஆம் திகதி பிற்பகல் 5.30 மணிக்கு நிலையத் தலைவர் பொன். கிருஷ்ணன் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெற உள்ளது. (ஓ-75)

## கண்ணீர் அஞ்சலி

29.12.2003 அன்று காலமாகிய எமது வடபிராந்திய
உதவிப் பொதுமுகாமையாளர்
**திரு. க. பாலசுப்பிரமணியம்**
அவர்களின் அன்பு மனைவி
**திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம்**
அவர்களுக்கு எமது கண்ணீர்ப் புஷ்பங்களை
காணிக்கையாக்குகின்றோம்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
யாழ்ப்பாணம்.

-சிரேஷ்ட முகாமையாளரும்,
ஊழியர்களும்.

(சி-32418)(18-12-32)

## கண்ணீர் அஞ்சலி



மரியாம்பிள்ளை டெக்காமிற்
அமல்ராஜ் (நிகஷன்)

நீள்துயிலில் ஆழ்ந்திட்ட நிக்ஷனே
நினைவெல்லாம் நீதானே, நண்பனே!
கூடிக்களித்து கும்மாளம் போட்டவனே,
கூட்டமாய் கூடுவது உனது பிரிதலிற்கா?
ஆறவில்லை எம்மனது
அழுதும் பயனில்லை!
நீண்டவுன் பயணமெனினும் - உன்
நினைவுடன் நாம் வாழ்ந்திடுவோம்.

குருநகர் பாடும் மீன் வி.க. உபதலைவராயிருந்து நீர ஆற்றிய அரும்பணிகள் எம் மனதைவிட்டு என்றும் அகலாது.

அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி நிற்கின்றோம்.

நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள்,
குருநகர் பாடும் மீன் வி.க.

(26522)(12-18-32)

## இலங்கை வங்கி அறிவித்தல்

★ நாளை (31.12.2003) புதன்கிழமை அன்று காலை 09.00 மணிமுதல் மு.ப. 10.00 மணிவரை மட்டும் வங்கி கொடுக்கல் வாங்கல்களுக்காக திறக்கப்படும்.

★ இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கில் 31.12.2003 அன்று ரூ.100,000.00 அல்லது அதற்கு மேல் நிலுவை வைத்திருப்பவர்களில் 200 பேருக்கு சகல வசதிகளுடன் இந்தியாவில் பௌத்த புனித தலங்களுக்கு இலவசமாக சென்று திரும்ப வாய்ப்பு அல்லது பணமாக ரூ.75,000.00 வழங்கப்படும்.

அனைவருக்கும் எமது உளம் கனிந்த புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

இலங்கை வங்கி,
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி.

(சி-32419)(18-12-32)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
16
04
1940



மறைவு
30
11
2003

### அமரர் நாகமணி நடராசா

இன்று (30-12-2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து உடனே வந்து பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*பலாலி வீதி,*
*இராமகிருஷ்ணர் ஒழுங்கை,*
*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*

பிரிவால் வருந்தும்:
மனைவி, பிள்ளைகள்.

(சி-32409)(32-12-18)

## கண்ணீர் அஞ்சலி



ஞானத் தந்தை
**அமரர் மரியாம்பிள்ளை டெக்காமிற் அமல்ராஜ்**
**(நிக்ஷன்)**

*என்பிறவியில் நான் கண்ட ஞானச் செல்வம் நீயப்பா!*
*என் வாழ்வில் உடல் நலிவுற்று நானிருக்கையில்*
*என்னைக் கட்டியணைத்து அமுதூட்டி தாலாட்டுவாய்.*
*நான் கண்துயிலும் வேளையெல்லாம் உன் மடிமீது தாலாட்டுவாய்*
*அப்பா! அப்பா! என்று நான் கதறியழும் ஒலி காதுகளில் கேட்குதா?*
*ஞானத்தந்தையே இனி எப்பொழுது காண்பேன் உன்னை?*
*காலக் கொடியோனைக் கர்வமாக நினைத்துப்பார்க்கிறேன்.*
*இனி எப்பொழுது ஞானச்செல்வத்தைக் காண்பேனோ?*

தோற்றம்: 11.02.1971
மறைவு: 27.12.2003
*குருநகர்.*

இவரின் பிரிவால் துயருறும்:
பொயிற்றர் கிளறன்சியா (இந்து).

(26508)(12-18-32)

## துயர் பகிர்கின்றோம்



எமது உதவிப் பொதுமுகைகாமையாளர்
திரு.க.பாலசுப்பிரமணியம்
*அவர்களின் அன்பு மனைவியார்*
**திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம்**
*அவர்களின்*
*மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின்*
*குடும்பத்தினரின் துயரை நாமும் பகிர்ந்துகொள்வதோடு,*
*எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து,*
*அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

பிரதேச முகாமையாளரும்
ஊழியர்களும்
உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயம்,
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.

(26521)(12-18-32)


We Serve

## நலிவுற்றோர் மேம்பாட்டுக்கான மாபெரும் இன்னிசை விருந்து

முதன் முறையாக மனோவின் சிங்கப்பூர் மேடை ஒளி அலங்காரத்துடன் *ராகம்ஸ், கீதம்ஸ்* குழுவினர் இணைந்து ஒரே மேடையில் கான மழை பொழிகின்றனர்.

**காலம்** : 01.01.2004 (புதுவருடப் பிறப்பன்று) 5.30 p.m.

**இடம்** : யாழ் வீரசிங்கம் மண்டபம்

*உங்களது அன்பளிப்பு ஒரு நலிவுற்றவனை மேம்படுத்தவும் உதவும்.*

அன்பளிப்பு: 200/=, 100/=

ரிக்கெற்றுக்கள் பெறும் இடம்:
- V.K. இராசரத்தினம் ஸ்ரான்லி வீதி.
- சண்செயா கொடடேல், பஸ்நிலையம் முன்பாக.
- சமுத்திரா, நவீன சந்தை.
- தயா நகைப்பூங்கா, கஸ்தூரியார் வீதி.

(26523) (32-12-18)

மானிப்பாய் வட்டு லயன்ஸ் கழகம்

# மேற்கிந்திய அணியுடனான டெஸ்டில் தென்னாபிரிக்க அணி புதிய சாதனை



கேர்ஸ்டன் (இடது) உடன் கலிஸ்

டர்பன் நகரில் நடைபெறும் மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸில் 658 ஓட்டங்களைப் பெற்றது.

தென்னாபிரிக்க அணி அதன் சொந்த மண்ணில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியொன்றில் பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். 1970ஆம் ஆண்டில் ஆஸ்திரேலிய அணிக்கெதிராக இதே மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 622 ஓட்டங்களை பெற்றமையே, இதுவரை சொந்த மண்ணில் தென்னாபிரிக்க அணி பெற்ற ஆகக்கூடுதலான ஓட்ட எண்ணிக்கையாக இருந்தது.

ஜக்கலீஸ், கெரிக்கேஸ்டன், ஹேர்சல்கிப்ஸ் ஆகியோர் தென்னாபிரிக்க அணியின் புதிய சாதனைக்கு வழி வகுத்தனர்.

இப்போட்டியின் இரண்டாவது நாள் ஆட்ட முடிவில் தென்னாபிரிக்க அணி 3 விக்கெட் இழப்பிற்கு 303 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மூன்றாவது நாளான நேற்றுமுன்தினம், கேர்ஸ்டன் தனது 20ஆவது டெஸ்ட் சதத்தையும், ஜக்கலீஸ் 13 ஆவது டெஸ்ட் சதத்தையும் பெற்றனர்.

கலீஸ் 344 பந்துகளில் 20 பௌண்டரிகள் உட்பட 177 ஓட்டங்களைப் பெற்றார். கேர்ஸ்டன் 218 பந்துகளில் 20 பௌண்டரிகள் உட்பட 137 ஓட்டங்களைப் பெற்றார்.

கேர்ஸ்டன், கலிஸ் இருவரும் 4ஆவது விக்கெட்டுக்காக 264 ஓட்டங்களைப் பெற்றனர். டெஸ்ட்போட்டிகளில் இவ்விருவரும் இணைந்து 100 இற்கும் மேற்பட்ட ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றமை இது 9ஆவது தடவையாகும்.

இந்த இணைப்பாட்டத்தை முறியடிப்பதற்கு ஏற்கனவே மூன்று தடவைகள் சந்தர்ப்பம் கிடைத்தபோதும் மேற்கிந்திய அணி அதனை நழுவ விட்டது.

மூன்றாம் நாள் ஆட்டத்தின் 5ஆவது ஓவரில் மேர்வின் டிலொனின் பந்து வீச்சில் கேர்ஸ்டன் கொடுத்த பிடியை ஸ்லிப் பகுதியில் நின்ற பிறைன்லாறா கைப்பற்றத் தவறினார்.



7ஆயிரம் டெஸ்ட் ஓட்டங்களைத் தாண்டிய முதல் தென்ஆபிரிக்க அணி வீரர் கேர்ஸ்டன்.

அதன்பின்னர், ஜக்கலிஸ் 84 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஃபைன் லெக் பகுதியில் நின்ற வஸ்பர்ட் ராக்ஸ் கைப்பற்றத் தவறினார். அதற்கடுத்து 5ஆவது பந்தில் மீண்டும் கேர்ஸ்டனின் பிடியை நழுவ விட்டார் ட்ராக்ஸ். அப்போது கேர்ஸ்டன் 41 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

நேற்றுமுன்தினம் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்திய அணி, ஆட்ட முடிவின்போது விக்கெட் இழப்பின்றி 18 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

# ஆஸ்திரேலிய அணிக்கு 95 ஓட்ட இலக்கு

இந்திய அணியுடனான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெறுவதற்கு இரண்டாவது இனிங்ஸில் 95 ஓட்டங்கள் எனும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மெல்பேர்னில் நடைபெறும் இப்போட்டியின் மூன்றாவது நாள் ஆட்ட முடிவில் இந்திய அணி 2விக்கெட் இழப்பிற்கு 27 ஓட்டங்களைப் பெற்றது.

நான்காவது நாளான நேற்று 286 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது இந்திய அணி.

வெற்றி பெறுவதற்கு 95 ஓட்டங்கள் தேவையான நிலையில், ஆஸ்திரேலிய அணி இன்று தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பிக்கவுள்ளது.

# விளையாட்டு

## தலைக்கவசம் தொடர்பாக ஆஸி. அணியில் சர்ச்சை

புதிய வகையிலான தலைக்கவசம் (ஹெல்மட்) தொடர்பாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியில் சர்ச்சை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'டெஸ்ட் தொடர்களுக்காக தலைக்கவசம்' என்ற பெயரில் ஆஸ்திரேலிய வீரர்களுக்குப் புதிய வடிவிலான தலைக்கவசம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால்அணித்தலைவர் ஸ்ரீவ்வோ, டேமியன் மார்ட்டின், ரிக்கிபொன்ரிங் உட்பட முன்னணி வீரர்கள் பலர் புதிய தலைக்கவசத்தை அணிய மறுத்துள்ளனர். பழைய தலைக்கவசம் சௌகரியமானதாக இல்லை. அதனால், அதை நான் அணியமாட்டேன். சில வீரர்கள் புதியதை விரும்பினாலும் பழைய தலைக்கவசமே சிறந்தது"- இவ்வாறு வீரர் ஒருவர் கூறியுள்ளார்.

பழைய வடிவிலான தலைக்கவசம் கிடைக்காமையினாலேயே சிலர் புதிய தலைக்கவசங்கள் அணிந்து விளையாடுகின்றனர்.

'கிரிக்கெட் ஆஸ்திரேலியா'வின், அங்கீகாரம்பெற்ற நிறுவனமான 'அல்பியன் ஹட் அன்ட் கெப்' நிறுவனம் புதிய தலைக்கவசங்களைத் தயாரித்துள்ளது. ஆஸ்திரேலியக் கிரிக்கெட் வீரர்களுக்கான 'பெகி கிறீன்' தொப்பிகளையும் இந்நிறுவனமே தயாரிக்கிறது.


## JAFFNA CENTRAL SPORTS CLUB

இன்று (30.12.2003) மூன்றாவது அகவை காணும் நன்நாள்.

(26525)(31-12-18) - செயலாளர்.


## ஒப்பந்தகாரர்களைப் பதிவு செய்தல் 2004

இம்மாவட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தித் திட்டங்களுக்கான சிவில் கட்டுமான வேலைகளுக்கான தேவை அதிகரித்திருக்கின்ற காரணத்தினாலும், இவற்றை நிறைவேற்றுவதற்கு நிர்மாணம், பயிற்சியளிப்பு அபிவிருத்திக்கான நிறுவனத்தில் (ICTAD - Institute of Construction Training and Development) பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுடைய எண்ணிக்கை, தரம் என்பன போதுமானதாக இல்லாத காரணத்தினாலும் ஒப்பந்தங்களை எடுப்பதற்கு முன்வருபவர்களது எண்ணிக்கை குறைவாக உள்ளது. இதனை நீக்கும் முகமாகவும், கூடியளவு இத்தொழில் முயற்சியாளர்களைக் கவர்ந்து ஊக்குவிக்கும் முகமாகவும் தகுதியுடைய கட்டட ஒப்பந்த வேலைகளைச் செய்ய விரும்பும் முயற்சியாளர்களை இச்செயலகத்தில் பதிவுசெய்து அவர்களுக்கும் இம்மாவட்டத்தில் செய்யப்படவிருக்கின்ற கட்டட ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நடைமுறையை நிதி வழங்கும் நிறுவனங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. இவர்களினால் செய்யப்படும் வேலையளவு, அனுபவம், திறமை என்பவற்றின் அடிப்படையில் காலக்கிரமத்தில் நிர்மாணம் பயிற்சி அளிப்பு அபிவிருத்திக்கான நிறுவனத்தில் இவர்களை தகுதியான தரத்தில் பதியப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, இம்மாவட்டத்தில் கட்டட வேலைகளைச் செய்ய விரும்பும் ஒப்பந்தகாரர்கள், அவர்கள் ஏற்கனவே ICTAD நிறுவனத்தில் பதியப்பட்டிருப்பினும், பதியப்பட்டிருக்காது விடினும் அதனைக் கவனத்தில் கொள்ளாது இச்செயலகத்தில் தங்களைப் பதிவுசெய்துகொள்ளும்படி இத்தால் வேண்டப்படுகின்றார்கள். இதற்கான படிவத்தை செயலக புனர்வாழ்வுப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

29.12.2003

(சி-32420)(31-12-18)

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 28 . 03 . 1936



மறைவு 30 . 11 . 2003

### அமரர் நாகமுத்து டிராஜசிங்கம்

30.11.2003 அன்று காலமான எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி அறிந்து உடன் வந்து உதவியவர்களுக்கும் மரணச்சடங்கில் கலந்துகொண்டோருக்கும் ஆறுதல் கூறியோருக்கும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் நினைவாக இன்று (30.12.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*இல.95, கொழும்புத்துறை வீதி,*
*கொழும்புத்துறை.*
*யாழ்ப்பாணம்.* (26528)(36-12-18-31)

மனைவி, பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி ஷர்மிளா ரதீதரன் அவர்களின் அன்புத் தந்தையார்

### அருளானந்தன் புவனேசன் அவர்களின்

25.12.2003 மறைவினால் துயரத்தில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.
(26518)(36-18-12-31) கிளி/ பளை மத்திய கல்லூரி, பளை.

## கண்ணீர் அஞ்சலி

எமது உதவிப் பொது முகாமையாளர் திரு.க.பாலசுப்பிரமணியம் அவர்களின் மனைவியார்



### திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்,
இலங்கை வங்கி நீடித்த கிளை,
அச்சுவேலி.
(26520)(36-18-31-12)


## விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய மிசின் கட்டிங் இயந்திரம் (Full Set) 14வரை ஊசிகளுடன் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு:- 0777 245965
உரிமையாளர்- பரமசிவம் செல்வராஜா.
(26529)(12-18-31)

## நாகம்ஸ் சுன்னாகம்

தருண், த்ரிஸா, விவேக், மணிவண்ணன் நடிக்க

எனக்கு 20 உனக்கு 18 (புதே.)

தினசரி காட்சி : 11.00, 3.00.
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 7 மணி
(C-31620)(12)

## நிறைஞ்சனாஸ்

மாதவன், ஜோதிகா நடிக்க

பிரியமான தோழி

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி சனி ஞாயிறு
KEOMA
இரவு 8.45 இந்து (பு.நே.)
(C-31763)(12)

## ராஜா யாழ்ப்பாணம்

சேரன், ரதி, மணிவண்ணன் நடிக்க

சொல்ல மறந்த கதை

(சிறந்த குடும்பச் சித்திரம்)
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

## லக்ஷ்மி சினிமா இணுவில்

இன்று முதல் ரஜனி, மீனா, செந்தில், ரகுவரன் இணைந்து நடிக்கும்

வீரா

காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30. (பு.நே.)
(26472)(31)

## லிபேட்டி அச்சுவேலி

விஜய், ஜோதிகா நடிக்க

திருமலை

தினசரி காட்சி நேரம்: 3.00, 6.30.
சனி, ஞாயிறு : 11.00, 3.00, 6.30 (பு.நே.)
01.01.2004 முதல் 04.01.2004 வரை ஆஞ்சநேயா
(C-31621)(12)


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி தம்பிஐயா மகேந்திரநாதன்

(S.T.M) - (கொழும்பு மாநகரசபை இளைப்பாறிய உத்தியோகத்தர்)

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற சி.தம்பிஐயா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், நவாலி தெற்கைச் சேர்ந்த V.சைமன் தம்பதிகளின் மருமகனும் அற்புதமலரின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் அவிசாவளையைச் சேர்ந்த N.பாலசிங்கம் (தாய்மாமன்) அவர்களின் மருமகனும், நவாலிபூரைச் சேர்ந்த சி.தம்புவின் பெறாமகனும், பிறேம்ஜயந்த் (Aero Engineer, கனடா), நித்தியஜோதி (கனடா), சிறோம்ஜயந்த் (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், Dr. கல்யாணி (மலேசியா), Dr. ஹெக்டர் ஜோதிராஜ் (கனடா), அனுஷா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிரூபினி, வோல்டர் ஆகியோரின் அன்புப் பேரனும் S.T.பாலகுமாரநாதன் (கண்மணி, ஆனைக்கோட்டை), S.T.ரவீந்திரநாதன் (கருணா, அவிசாவளை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நவாலியைச் சேர்ந்த செல்வநாயகம், ராஜேஸ்வரி பத்மநாதன், ஜெயநாயகம், குணநாயகம், இன்பமலர், இராசநாயகம், தர்மினி, சந்திரா டானியல், ரஞ்சினிபோல், தர்மநாயகம், சாமினி பப்டிஸ்ற் ஆகியோரின் அன்பு மைத்துனருமாகிய S.T. மகேந்திரநாதன் அவர்கள் (28.12.2003) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.56, டேவிற் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(26530)(12-18-31)

தகவல்:
சைமன் குணநாயகம் (மைத்துனர்)

### திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம்

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (29.12.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராசா (லக்ஷ்மி பவான்) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பகவதி அம்மாள் மற்றும் திருமதி திருச்செல்வம் கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் பாலசுப்பிரமணியத்தின் (உதவி பொது முகாமையாளர்- இலங்கை வங்கி) அன்பு மனைவியும், முரளிதரனின் (E wis Ltd) அன்புத் தாயாரும் செல்வநாயகி (லண்டன்), திலகம், ஜெயராஜா (சுவிற்ஸர்லாந்து), ரங்கநாயகி, தங்கநாயகி, காந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறிதரன் (லண்டன்), ரத்தினா, உமா (ஜேர்மனி), ஸ்ரீஸ்கந்தராஜா (பிரான்ஸ்), கெங்கேஸ்வரி, மேகலா ஆகியோரின் பெரிய தாயாரும் ஜெகசோதி, ஜெகதீஸ்வரன், அன்னராசா, வசந்தகுமாரி, சந்திரசேகரம், கஜன், நந்தினி, கிருபாமூர்த்தி (இணுவில்), கலைமகள் (கனடா), சந்திரேஸ்வரி (சுவிற்ஸர்லாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சண்முகேஸ்வரி, கண்ணன், மைதிலி, சாந்தராஜ், அமிர்தராஜ் ஆகியோரின் அன்பு மாமியாரும் யதூஷன், கோபிகா (லண்டன்), கௌதம் (பிரான்ஸ்), வினித் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.12.2003) புதன்கிழமை மாலை 4.00மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர்மடம் இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*சிவன் கோவிலடி,*
*பருத்தித்துறை*
(26531)(31-12-18)

தகவல்:
க.பாலசுப்பிரமணியம்.
உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கைவங்கி.

# விருப்புவாக்கு முறையை ரத்துச் செய்ய இணக்கம்

கொழும்பு, டிசெ.30

விருப்பு வாக்கு அளிக்கும் நடைமுறையை நீக்குவதற்கு தேர்தல் தொடர்பான ஆலோசனைகளை முன்வைப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

தொகுதிவாரியான முறையும் விகிதாசார முறையும் ஒருங்கிணைந்து புதிய தேர்தல் முறை ஒன்றினை உருவாக்குவதற்குத் திட்டமிட்டுள்ளதாக மேற்படி தெரிவுக்குழுவின் தலைவர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

புதிய தேர்தல் முறையை தீர்மானிக்கும் வரை மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்கப்பட வேண்டிய அவசியம் இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்

(ஒ-4)

# புதிய புனர்வாழ்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கான ஐநா தூதரகம் ஆகிய முத்தரப்புகளும் கூட்டாக முன்னர் தயாரித்திருந்தன.

அந்தத் திட்டத்திலிருந்த அம்சங்களைக் கொண்ட புதிய செயற்பாட்டுத் திட்டம் உருவாக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தை உருவாக்கிச் செயற்படுத்த பிரதமரால் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்தக் குழுவின் உறுப்பினர்களான அமைச்சரவைச் செயலாளர் வேரகொட, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, பிரதமரின் ஆலோசகர் எஸ்.சிவானந்தன் ஆகியோர் நேற்று யாழ்வந்தனர். இவர்கள் யாழ. செயலகத்தில் மேற்படி திட்டம் குறித்து அரச அதிபர் செயபத்மநாதனுடன் விரிவாக ஆராய்ந்தனர். இந்தச் சந்திப்பில் வடக்கு - கிழக்கு மாகாண சபைப் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன், சிரான் அமைப்பின் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் ஆகியோரும் பங்கேற்றனர். செயலகத் திட்டமிடல் பகுதி அதிகாரிகளும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

புதிய செயற்பாட்டுத் திட்டம் தயாரிப்பது குறித்து அப்போது விரிவாக ஆராயப்பட்டது.

இது தொடர்பாக செயலக வட்டாரங்கள் தெரிவித்ததாவது:-

இத்திட்டம் விடுதலைப் புலிகளின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும். எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் இத்திட்டம் இறுதியாக்கப்படும். பின் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படும். அதன்பின் அது நடைமுறைப்படுத்தப்படும்.

காணியற்ற குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்து வழங்கும் திட்டம், சுகாதாரத்தை மேம்படுத்த கழிவு அகற்றும் திட்டம், கடற்றொழில், விவசாயம், கால்நடை அபிவிருத்தித் திட்டம், உள்ளூர் வதிகளைத் திருத்தல் திட்டம் ஆகியன அவசர செயற்பாட்டுத் திட்டத்தில் அடங்கும்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3-6-5)

# எய்ட்ஸ் விழிப்புணர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லிப்பழை பிரதேசத்தில் அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ. சங்கத்தின் விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று நேற்று இடம்பெற்றது. தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில் பகுதிகளில் வீடுவீடாக கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

கோப்பாய், குட்டியப்புலம், மருதனார்மடம், இணுவில், சுன்னாகம், உடுவில் பகுதிகளில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. சுன்னாகம் பிரதேசத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு கருத்துரைகள் வழங்கப்பட்டன.

வலிகாமம் மேற்கில் பெரியவிளான், முல்லானை, மாரீசன்கூடல், இளவாலை பகுதிகளிலும் பிரசாரப்பணிகள் இடம்பெற்றன.

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று எய்ட்ஸ் ஒழிப்பு பிரசார பணியில் தொண்டர்கள் ஈடுபட்டனர்.

சந்தை, வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றுக்கு சென்ற தொண்டர்கள் விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்களை வழங்கினர். முன்பள்ளி ஆசிரியைகள், தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட தொண்டர்கள் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை, அரச திணைக்கள உத்தியோகத்தர், ஊழியர்கள் ஆகியோருக்கான எய்ட்ஸ் விழிப்புணர்வு கருததரங்கு நேற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்டது.

கடந்த 23ஆம் திகதி ஆரம்பமான எய்ட்ஸ் விழிப்புணர்வு வாரம் நேற்று பூர்த்தியடைந்தது. இந்தப் பணியில் ஈடுபட்டவர்கள் இன்று கௌரவிக்கப்படவுள்ளனர். (ஒ-3-86-117)

# கௌரவிப்பு நிகழ்வு இடம்மாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ். - நல்லூர்க் கோட்டத்தில் எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட தொண்டர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்து தற்சமயம் இடம்மாற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

*(முன்னர் வந்த செய்தி 5ஆம் பக்கத்தில்)* (ஒ-3)

# ஆயப்பகுதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவர்களுக்கு இதன்படி புதிய படிவங்கள் இலவசமாக வழங்கப்படும். இந்தப் படிவங்களைப் பூர்த்திசெய்வது இலகுவாக்கப்பட்டுள்ளது. இந்தப்படிவத்தை உரிய இடத்தில் சேர்ப்பித்த உடன், மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் கணனி மூலம் துரிதமாக இடம்பெறும். இதனால் முன்னரை விட வேகமாக சோதனை நடைமுறைகள் பூர்த்தியாகும்.

- இவ்வாறு ராஜ்மோகன் விளக்கினார்.

கொழும்புக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள லொறி உரிமையாளர்கள் புளியங்குளத்தில் உள்ள சோதனை நிலையத்தில் முன்னதாகவே பொருள்கள் ஏற்றப்படாத நிலையில் தமது லொறியின் நிறையை நிறுத்து அதனைப் பதிவு செய்யவேண்டும்.

இரும்புக் கம்பிகள் போன்ற ஒரே ரகமான பொருள்களை எடுத்துவரும் போது லொறியின் நிறையை கழித்துப் பொருளின் நிறையைக் கண்டு பிடிக்க இது வசதியாக இருக்கும்.

- இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

இந்த வருடத்துக்கான ஆண்டிறுதிப் பணிகள் முடிக்கப்படவேண்டியிருப்பதாலும் அடுத்த வருடத்துக்கான புதிய நடைமுறைகள் தொடர்பான முன்னேற்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காகவும் இன்றும் நாளையும் புளியங்குளம் சோதனைச்சாவடி ஊடாக கனரக வாகனங்களில் பொருள்களை எடுத்துவருவது நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் - பழுதடையக்கூடிய மரக்கறி, முட்டை, ஐஸ்கட்டி, வெற்றிலை மற்றும் நாளேடுகள் என்பவற்றை எடுத்துவருவதற்கு இன்றும் நாளையும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

- இவ்வாறு ஆயப்பகுதியினர் அறிவித்துள்ளனர். (ஒ-3-4)

# பதவிக் காலத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டின் முடிவில் - அதாவது 2000 நவம்பரிலும் - அவர், பிரதம நீதியரசர் சரத் என். சில்வா முன்னிலையில் திரும்பவும் ஒரு தடவை சத்தியப் பிரமாணம் செய்தார் என்று கூறப்படுகின்றது. மற்றவர்களுக்குத் தெரியாமல் - காதும் காதும் வைத்தாற் போல் - ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது இந்த மீள் சத்தியப் பிரமாண வைபவம்.

அப்படி ஒரு வைபவம் இடம்பெற்றதை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவும் இப்போது ஒப்புக் கொள்கின்றார்.

1999 டிசெம்பரில் தேர்தல் முடிந்தகையோடு நடந்த சத்தியப் பிரமாணத்தின்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக் காலம் 2005 டிசெம்பருடன் முடிவடைந்துவிடும்.

ஆனால், 1994 தேர்தல் முடிவுகளின்படி 1999 டிசெம்பர் முதல் 2000 நவம்பர்வரை அவர் முதலாவது பதவிக்காலத்தை வகித்தார் எனவும் -

1999 டிசெம்பர் தேர்தல் முடிவுகளின்படி (2000 நவம்பரில் இரகசியமாக எடுத்த சத்தியப்பிரமாணத்தின்படி) 2000 நவம்பர் முதல் 2006 நவம்பர் வரை அவர் இரண்டாவது பதவிக்காலத்தை வகிப்பார் எனவும் - புதுக்கதை இப்போது அவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

அப்படி ஜனாதிபதி தமது பதவிக் காலத்தை நீடிக்க முயற்சிப்பது சட்டத்துக்கு மாறானது என ஹல்ஸ்டோர்ப் சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தமது முதலாவது பதவிக் காலத்தை நாலரை ஆண்டுகளாகச் சுருக்கிக்கொண்டு முன்கூட்டியே இரண்டாவது தேர்தலை நடத்தி, அதில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றார். ஆனால், இரண்டாவது தேர்தல் முடிவுற்று ஆறு வருடங்களுக்கு மேல் அவர் ஒரு நாள் கூட பதவியில் நீடிக்கவில்லை என்பதை இந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ஜனாதிபதி ஒருவர் தனது பதவிக் காலத்தில் நான்கு ஆண்டுகள் பூர்த்தி செய்ததும் - வழமையான ஆறு ஆண்டு காலம் பூர்த்தியாக முன்னர் - எப்போது வேண்டுமானாலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும் என அரசமைப்பின் மூன்றாவது திருத்தம் கூறுகின்றது.

அதன் பிரகாரம் -

பதவிக்காலத்தில் முதல் நான்கு ஆண்டு காலம் முடிந்ததும் மீண்டும் தேர்தல் நடத்தி அதிலும் அதே ஜனாதிபதி வென்றால், அவர் முதல் பதவிக் காலத்தின் எஞ்சிய இரண்டு ஆண்டுகள் முடியும்வரை காத்திருந்து அது முடிந்ததும் இரண்டாவது பதவிக் காலத்தை ஏற்க அனுமதிக்கப்படுவாரா?

அதாவது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த ஒரு தேர்தலின் வெற்றியை வைத்துக்கொண்டு, இரண்டு ஆண்டுகள் கழித்து இப்போது முதல் அடுத்த ஆறு ஆண்டு காலம் பதவியில் இருக்கமுடியுமா? அது தவறு அல்லவா? - இப்படி அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(ஒ-3)

# வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போய்விட்டனர். ஒரே நாளில் மாத்திரம் 24பேர் கைதாகி காணாமற்போய் விட்டனர் என்று சங்கத்தின் தலைவர் சுப்பு சற்குணம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

1997ஆம் ஆண்டு காணாமற்போன 234 இளைஞர்களில் ஒருவரான சின்னத்தம்பி சிவகுமார் என்பவர் 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இந்த இளைஞர் இன்று வரை வீடு திரும்பவில்லை.

இது குறித்து அநுராதபுரம் நீதிமன்ற அதிகாரிகளிடம் கேட்டபோது இந்த இளைஞர் தொடர்பான ஆவணங்கள் காணாமற்போய்விட்டன என்று தெரிவிக்கப்பட்டது. இந்த சம்பவம் குறித்தும் காணாமற்போன ஏனைய இளைஞர்கள் குறித்தும் விசாரணை நடத்தும்படி நாம் மகஜர் மூலம் நீதி அமைச்சரிடம் கோரியுள்ளோம் என்று சொன்னார்.

# ஓமந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிய கட்டுப்பாட்டுச் சாதனங்களை மட்டும் ஓமந்தை, முகமாலை சோதனைச்சாவடிகள் ஊடாக எடுத்துவர அனுமதி வழங்கியுள்ளது.

இத்தகவலை பலாலிப் படைத்தள அதிகாரி கேணல் கடுவல்ல வர்த்தக சங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

(ஒ-3-4)

BARATHY
சித்தன்கேணி
A/L 2006
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்:
01.01.2004 வியாழன் 3.00 மணி
நீங்கள் நன்கு அறிந்த
எமது தனித்துவம் பெற்ற
ஆசிரியர்களினால்
பொருளியல் - மகேந்திரன்
வணிகக்கல்வி - பசில்
கணக்கீடு - முகுந்தன்
அளவையியல் - R.P.சர்மா
தமிழ் - பாலா
இந்துநாகரிகம் - சுரேஸ்
இந்துசமயம் - தரன்
புவியியல் - குமரன்
நாட.அரங். - சுதன்
கிறிஸ்தவம் - வசந்தன்
அரசியல் - றஜீவன்
ஆங்கிலம் - நிஷாந்தன்
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும். (26473)

PHYSICS
By:K.Sivalingam
2006 Batch.
ஆரம்பம் : 01.01.2004, 8.30 a.m.
தொடர்பு:- இல,1
சிவப்பிரகாசம் றோட்,
(26275)(36) வண்ணார்பண்ணை.

NEW SCIENCE COLLEGE
Jaffna
இலத்திரனியல்
WED., THU. - 3.00 - 4.00
ஆரம்பம்: 31.12.2003
வெப்பவியல்
SAT., SUN. - 8.00 - 9:00
ஆரம்பம்: 03-01-2004
By:கருணாநிதி (26517)

THE BARBARA MULVANEY
Computer Training Centre
123, Temple Road, Jaffna
இலவசக் கருத்தரங்கு
03.01.2004 அன்று எமது நிறுவனத்தில் CISCO பற்றிய இலவசக் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. அதில் கலந்து கொள்ள விரும்புவோர் 02.01.2004ற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.
நிர்வாகம்

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்.
A/L கலை, வர்த்தகம் 2006
ஆரம்பம்: 03-01-2004 மு.ப 8.00 மணி
Acc. திரு.பாலவாசன்
Eco. திரு.K.உதயன்
B.St. திரு.யசோ
Log. திரு.சயந்தன்
Tam. திரு.குழந்தை பிரிவு I
திரு.லிங்கம் பிரிவு II
H.C. திரு.பத்மராஜா
Geo. திரு.பாபு
Hin. திரு.N.T தரன்
Drama. திரு.மதி
P.Science. திரு.ஸ்ரீரங்கநாதன்
Hist. திரு.சுதன், பத்மன்
Chiri. திரு.வசந்தன்
அன்றும் இன்றும் இனி என்றென்றும் பொருளியல் திரு.K.உதயன்
பிரிவுI அனுமதிகளை முன்கூட்டியே வழங்கப்படும். பிரிவுII அனுமதி மிக விரைவில்

ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்
A/L 2006
கலை, வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்:
05.01.2004
மாலை 4.00 (26492)

RAM CD WORLD
மலிவு விற்பனை
27.12.2003 முதல் 31.12.2003 வரை
ஓடியோ CD 80/=
வீடியோ CD 100/=
வீடியோ CD (படம்) 180/=
ராம் CD வேல்ட்
220, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (26378)

ஈசன் கல்வி நிலையம்
கே.கே.எஸ்.வீதி கோண்டாவில்.
மாணவர் உலகுக்கு நன்கறிந்த ஆசிரியர் குழாமுடன் ஆரம்பமாகிறது
A/L 2006
வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
கணக்கீடு :- திரு. D.SAM.
வணி.கல்வி :- திரு. B.பசில்
பொருளியல் :- திரு R.இராஜேஸ்வரன்
பொதுவினா :- திரு.T தவசேகர்
பொது ஆங்கிலம் :- திரு. S.சுதர்சன்.
பௌதிகவியல் :- திரு. R.குமரன், திரு. R.குகன்
இரசாயனவியல் :- திரு. K.சிவத்திரன், திரு. V.அன்பு
இ.கணிதம் :- திரு. A.ரவீந்திரன்
உயிரியல் :- திரு. A.தயாபரன், திரு. A.ஞானேந்திரன்
காலம்:- 05.01.2004 (MON)
காலை:- 8.30 a.m.

நிரு ரியூசன் சென்ரர்
A/L 2006
கோண்டாவில்
Eco - திரு. சண்
Acc - திரு. தவா
B.St - திரு. யசோ
Drama - திரு. மதி
Tamil - திரு. லிங்கம்
Log. - திரு. சயந்தன்
Geo. - திரு. வேலா
H.S. - பிரபலஆசிரியர்
P.Sci.- திரு. இளங்கோ
ஆரம்பம் 03 - 01 - 2004 சனி(9 மணி) (26500)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.